291

சக்தி

மாத வெளியீடு

12 - 4



பார்த்திப ஞு
ஆடி மீ

AUG 194

கதை

பார்வதி
சக்திவேல்
அது கனவா ?
பேசும் பூனை

கட்டுரை

ஜின்னவைக் - கேளுங்கள்
காசா - நூலா ?
பணமே !
யார் சிக்கியன் ?
இளமையும் - முதுமையும்
தமிழும் - அகராதியும்

✻

வரலாறு

பிரடெரிக் - எங்கெல்ஸ்

✻

பாட்டு

பலனுக்கு வழி

✻

குறிப்பு

பிரிட்டிஷ் புரட்சி
வேவல் திட்ட முடிவு
காலச்சுழல்

98852

REGD. No 1506
ASOKA

அசோகா
சுகந்த பாக்குத்தூள்
எம். கே. கிருஷ்ண செட்டி அசோகா பாக்டரி :: கோயமுத்தூர்

கண்ணம்மா
...என் காதலி...
ஜூலை 20ஆ முதல்
சென்னை
கெயிட்டி, கிரௌன்
இரு தியேட்டர்களிலும்
மற்றும் பல முக்ய நகரங்களிலும்
மகத்தான
ஆரம்பம்...
ஒரு ஜெமினி சித்ரம் • தயாரித்தது: ராம்நாத் • டைரக்ஷன்: கொத்தமங்கலம் சுப்பு...

இண்டோ - கமர்ஷியல்

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: மாயவரம்

1945ளு ஜூன்மீ 30வ

பொறுப்புகள்

	ரூ.	அ.	பை
கோரப்பட்டுச் செலுத்தப்பட்ட மூலதனம்	18,75,000	0	0
ரிஸர்வ் நிதி	3,75,000	0	0
அவசர நிதி	22,000	0	0
வரிகளுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது	92,966	3	0
டிபாஸிட்டுகள் :			
பிக்ஸட், கரண்ட், சேவிங்க்ஸ் பாங்க், மாதவாரி டிபாஸிட், கியாஷ் ஸர்டிபிகேட், சிப்பந்திகள் ஜாமீன், மற்றும் இதர பொறுப்புகள்	2,73,14,603	15	4
பாங்குகளுக்குக் கொடுக்க வேண்டியவை	**Nil**		
பெற்றுக் கொள்ளாத டிவிடெண்டுகள்	4,056	8	0
வசூல் பில்கள்	13,28,544	10	10
கமர்ஷியல் கிரெடிட்கள்	27,500	0	0
பிராஞ்ச் அட்ஜஸ்ட்மெண்டுகள்	6,69,892	12	4
வழங்கப்பட வேண்டிய டிராப்டுகள் தந்திகள்	1,99,645	0	4
சில்லரை இனங்கள்	42,364	0	8
இவ்வரை வருஷத்திய நிகர லாபம் :	2,73,201	1	5
ஆக மொத்தம் ரூ.	3,22,24,774	3	11

K. லக்ஷ்மணன்
அக்கௌன்டன்ட்

டைரக்டர்கள்

R. விஸ்வநாதன் K. சிவஸ்வாமி
R. S. A. சங்கர ஐயர் V. வெங்கடராமன்

மதராஸ், ஜூலை 21, 1945.

பாங்க் லிமிடெட்.,

சென்ட்ரல் ஆபீஸ்: சென்னை

சுருக்கமான கணக்கு விபரம்

11 AUG 1945
MADRAS

ஆஸ்திகள்

	ரூ.	அ.	பை.
கடன்கள், காஷ் கிரெடிட், பில்கள், டிராப்டுகள், புரோநோட்டுகள் இதர அட்வான்சுகள், முதலியன	1,63,08,940	2	4
தற்சமயமாவது, எப்பொழுதாவது, டைரக்டர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன்கள், அட்வான்சுகள்	Nil		
பாங்கிக் கட்டிடங்கள்	35,698	0	0
ஸேப்கள், மரதளவாடங்கள்	68,372	9	3
கைவசமுள்ள புத்தகம் ஸ்டேஷனரி	39,756	0	5
வசூல் பில்கள்	13,28,544	10	10
கஸ்டமர்களின் பொறுப்புகள்	27,500	0	0
சில்லரை இனங்கள்	3,35,290	6	10
முதலீடுகள்:			
கவர்ன்மெண்ட் புரோநோட்டுகள், ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனி பாங்குகள், ஷெட்யூல்ட் பாங்கிகளிலுள்ள சிப்பந்திகள் ஜாமீன்	74,74,511	11	6
முதலீடுகளில் சேர்ந்துள்ள வட்டி	83,094	14	0
கைவசமுள்ள ரொக்கமும், கரண்டுக் கணக்கில் பாங்கர்களிடமும்	65,23,065	12	9
ஆக மொத்தம் ரூ.	3,22,24,774	3	11

P. S. சுப்ரமணிய ஐயர் அன்ட் கம்பெனி
ரிஜிஸ்டர்ட் அக்கௌன்டன்ட் அன்ட் ஆடிட்டர்ஸ்

S. N. N. சங்கரலிங்க ஐயர்
மானேஜிங் டைரக்டர்

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள்:

5,00,000 நூற்கும் கதிர்கள்

ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல்

நம்பர் 80 வரை நூல்கள்

●

நாங்கள் சப்ளை செய்வது:

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள். எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதி யாகும் நூல்களைப் போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

●

ஐக்கிய மாகாண சர்க்கார் தங்கள் அறிக்கையில், இந்தியாவிலே நூற்கப்படும் நூல்களில், எங்கள் நூல்கள் மிருதுத் தன்மைக்கும், சன்னத்திற்கும், நேர்த்திக்கும், அழுத்தத்திற்கும் மிகச் சிறந்தவை யென்றும், எல்லா நெசவு தொழிலாளர்களும் விரும்புவதாகவும் கூறுகிருர்கள்.

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்

பார்த்திப
மலர் 12

சக்தி

ஆடி
இதழ் 4

**அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!**

பிரிட்டிஷ் புரட்சி

பிரிட்டிஷ் தேர்தல் முடிவுகள், ஆரம்பத்திலிருந்தே பலர் எதிர்பார்த்தவைதான். மிகப் பெரும்பாலான ஹேஷ்யங்கள், தொழிற்கட்சிதான் வெல்லும் என்றே கூறின. ஆனால், தொழிற் கட்சிக்கு இவ்வளவு அபரிமிதமான வெற்றி கிடைக்கும் என்று பெரும்பாலோர் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

“ஒன்று, கன்ஸெர்வடிவ் சர்க்கார் அமைந்தாலும், எதிர்க்கட்சி மிகப் பலமாயிருக்கும்; அல்லது, தொழில் - லிபரல் கட்சி சர்க்கார் அமையும்; இரண்டுமில்லாமல் தொழில் கட்சியே தனியாய்ச் சர்க்கார் அமைத்தாலும், சொற்பப் பெரும்பான்மையே அதற்கு இருக்கும்” என்றுதான் அநேகமாக எவரும் நினைத்திருந்திருப்பார்கள். இவ்வளவு அதிகமான பெரும்பான்மை தொழிற் கட்சி பெறும் என்று யாருமே முன்னதாக எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். மொத்தம் 640 ஸ்தானங்களில், 400 ஸ்தானங்களுக்குமேல் தொழிற்கட்சியார் கைப்பற்றிவிட்டார்கள். அவர்கள் யார் துணையுமின்றி இப்போது தனியரசு புரியலாம்.



பிரிட்டனின் புதிய பிரதம மந்திரி
க்ளெமெண்ட் ஆட்லி

இந்தியா மந்திரி எமெரி உள்பட, சர்ச்சில் சபையின் மந்திரிகளிலேயே பலர் கவிழ்ந்துவிட்டார்கள். இன்னொரு வேடிக்கை: தொழிற் கட்சியார் வென்ற ஒவ்வொரு தொகுதியிலும், தொழிற் கட்சிக்கு ஏராளமான ஓட்டுகள் விழுந்திருக்கின்றன. கன்ஸெர்வடிவ்கள் வென்ற தொகுதிகளிலோ, முந்திய தேர்தலில் அவர்களுக்கு விழுந்த ஓட்டுகளைவிடக் குறைவாகவே விழுந்திருக்கின்றன. சர்ச்சில் பல வருஷங்களாய்ப் போட்டியின்றி வென்று வந்த தொகுதியில்கூட, அவருக்கு எதிராய் ஒரு குடி

யானவர் நின்று 10,000 ஓட்டுகள் பெற்றிருக்கிறார். சர்ச்சில் 17,000 ஓட்டுகளே பெற்றிருக்கிறார். இந்தத் தேர்தல் முடிவை, சர்ச்சிலின் கன்ஸெர்வடிவ் சர்க்கார்மீது, மிகவும் தெளிவான தீர்ப்பு என்று நிராட்சேபமாய்ச் சொல்ல வேண்டியதுதான்.

பிரிட்டனின் யுத்த காலத்திய இணையற்ற தலைவனாய் விளங்கிய சர்ச்சிலிடம், நாட்டு மக்களுக்கு இன்னமும் பிரியம் இருக்கலாம். ஆனால், நாட்டின் புனர்நிர்மாண வேலைக்கு, கன்ஸெர்வடிவ் மந்திரி சபை பயன்படாது என்று, அவர்கள் திட்டமாய் முடிவுசெய்துவிட்டார்கள். சர்ச்சில் மந்திரி சபை விழுந்து விட்டது. ஆட்லியைத் தலைவனாய்க் கொண்ட தொழிற்கட்சி மந்திரி சபை அமைந்துவிட்டது.

தொழிற்கட்சியார் இப்போதுதான் முதன் முதலாக, மிகத் தெளிவான பெரும்பான்மை பெற்று, அசைக்க முடியாத மந்திரி சபையை அமைத்துள்ளார்கள். இதற்கு முன்னே, காலஞ்சென்ற ராம்ஸே மெக்டானல்டு தலைமையில் இரண்டு முறை தொழிற் கட்சியார் பதவிக்கு வந்தது உண்டு. 1924-ஆம் வூ அமைந்த தொழிற்கட்சி மந்திரி சபை 288 நாட்கள் தான் வாழ்ந்தது. 1929-ஆம் வூ அமைந்த தொழிற்கட்சி மந்திரி சபை 1931-ஆம் வூ வரை இருந்தது. ஆனால், இரண்டு தடவையும் போதிய பலமில்லாததால், மயில்வாகன வாழ்க்கை தான் வாழ்ந்தது. திடமாக எந்தக் காரியத்தையும் செய்ய, அது துணியவில்லை. இம்முறை தொழிற்கட்சி அபார வெற்றி பெற்றிருப்பதை, பிரிட்டனில் ஏற்பட்டிருக்கும் ஒரு பெரிய புரட்சி என்றே சொல்ல வேண்டும்.

தொழிற் கட்சியார் தாங்கள் சொல்லிவந்த முற்போக்கான கொள்கைகளை, தயா தாட்சண்யமின்றி நிர்ப்பயமாய்க் கொண்டு செலுத்தத் தக்க ஓர் அபூர்வ சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. "சகல ஜனங்களுக்கும் வேலை; சகல ஜனங்களுக்கும் வீடு; கிழக்கே வெற்றி அடைந்த பின், சமாதான ஸ்தாபிதம்" — இதுவே தொழிற் கட்சியார் சொல்லிவந்த திட்டங்களின் சாரமாகும். ஜப்பானிய யுத்தம் கடைசி கட்டத்தை எட்டி விட்டது; அது முடிந்து விட்டதென்றே சொல்லலாம். ஆகவே, தங்கள் திட்டங்களையெல்லாம் தொழிற் கட்சியார் உடனே சாதிக்கவேண்டும்.

ஏகாதிபத்திய ஆதிக்கத்தை ஒழித்து, பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகள் அனைத்தும் சுதந்தரமுள்ள சம பங்காளிகளாகும்படி செய்ய வேண்டும் என்பதும் அவர்கள் கூறிவந்த ஒரு கொள்கை. இந்தியா சுதந்தர மற்றுத் தவிக்கும் வரையில், அந்தக் கொள்கை வெறும் கேலிக் கூத்தேயாகும்; உலக சமாதானமும் ஏற்படாது. ஆகவே, இதையும் அவர்கள் நிறைவேற்றவேண்டும். இல்லையானால், சரித்திரம் அவர்கள் மீது அழியாத பழி சாட்டி விடும். பிரிட்டிஷ் மக்கள் மட்டிலுமல்ல, இந்தியா மட்டிலும் அல்ல, முழு உலகமுமே, பிரிட்டிஷ் தொழிற் கட்சியார் என்ன செய்யப்போகிறார்கள் என்பதை, கண்கொட்டாமல் கவனித்து வருகிறது. இதை அவர்கள் உணர வேண்டும்.

*

வேவல் திட்ட முடிவு

சிம்லா மகாநாடு முறிந்தது. வேவல் திட்டம் மடிந்தது. "முறிந்ததற்கு நானே பொறுப்பு" என்று வைசிராய் கூறினர். இருந்தாலும், அவர் வார்த்தையி லிருந்தே, அதற்கு ஜின்னு சாகேப் தான் பொறுப்பு என்று தெளிவாய்த் தெரிந்து விட்டது. மற்ற அனைவரும்-சகல கட்சியாருமே-ஒத்துழைக்க முன் வந்த போது, ஜின்னு மட்டில் மக்கர் செய்து விட்டார். ஜின்னுவை உதறித் தள்ளி விட்டு, திட்டத்தை ஏன் நிறைவேற்றி யிருக்க லாகாது என்று சிலர் குறை கூறுகிறுர்கள். ஆனல், தவறு அடிப்படையிலே உள்ளதாகும்.

பொருளாதார முறையில் அரசியலை நோக்காமல், வகுப்பு வாதத்தை அதில் நுழைத்த பிறகு, ஒரு வகுப்பினரை உதறித்தள்ளினுல், அது பெருங்கேடு தான் விளைவிக்கும். வகுப்பு வாதம் வளர விட்ட பின்பு, மாற்றுத் தேடித் தான் ஆக வேண்டும். ஆனல், அதற்காக ஊழூழி காலம் வரையில், நாட்டின் விடுதலைக்கு முட்டுக்கட்டை போட வகுப்பு வாதிகளுக்கு இடம்தர முடியாது. வகுப்பு வாதிகளை உதறித் தள்ளுவதானல், சிறுபான்மை வகுப்புகளின் பயத்தைப் போக்குவதற்குரிய திட்டமான பாதுகாப்புகளை வகுத்து வைத்து விட்டுத்தான் அப்படிச் செய்ய வேண்டும். வகுப்பு வாதிகளை அங்கீகரித்துப் பேச்சு நடத்தி விட்டு, பேச்சு முறிந்தால், அந்தக் கணத்திலேயே அவர்களைத் தள்ளி விட்டு நம் இஷ்டப்படி காரியம் செய்ய விரும்புவது தவறுகும். ஆதலால், வேவலின் முடிவைப் பிழையென்று சொல்லமுடியாது.

மகாநாடு முறிந்ததால், ஒன்றும் காரியம் கெட்டுப் போய் விடவில்லை. வேவல் தமது முடிவுரையில், இரண்டு விஷயங்கள் சொல்லி யிருக்கிறுர்: ஒன்று, கூடிய சீக்கிரம் பிரிட்டிஷ் சர்க்கார் ஒரு முடிவு செய்வார்கள் என்றும், அது கொஞ்ச காலம் வரைக்கும் நிலை நிற்கும் என்றும் கூறி யிருக்கிறுர்; இரண்டு, அடிக்கடி இம் மாதிரி பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டிருப்பது சாத்தியமல்ல, நாட்டின் பொருளாதாரத் திட்டங்களில் எல்லாரும் ஒத்துழைக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டிருக்கிறுர். மகாநாடு முறிந்த பின்பும், பண்டித நேருவுடன் வைஸிராய் வேவல் இரண்டு மணி நேரம் பேசிக் கொண்டிருந்திருக்கிறுர். அப்போது, பொருளாதாரத் திட்டங்களைப் பற்றியே பெரிதும் பேசியதாக நேரு சொல்கிறுர்.

பிரிட்டனில் புதிய முற்போக்கான மந்திரிசபை ஏற்பட்டிருப்பதால், இந்திய அரசியல் பற்றி வைசிராய் வாக்களித்த முடிவு சீக்கிரமே செய்யப்படும் என்று எதிர்பார்க்கிறேம். காங்கிரஸ் பூரண ஒத்துழைப்பும் செய்யவேண்டும் என்று ஆஜாதிடம் அவர் கேட்டுக் கொண்டதற்கு, ராஷ்டிரபதி ஆஜாது ஒப்புக் கொண்டிருப்பதால், இந்த அரிய சந்தர்ப்பத்தை வைசிராய் உபயோகித்துக் கொள்வார் என்றும் எதிர்பார்க்கிறேம்.

காலச்சுழல்

ஜப்பான் பணியுமா: "ஜப்பான் உடனே நிபந்தனையற்ற சரணாகதி செய்யவேண்டும். இல்லையானால், அதை அடியோடு நாசம் செய்வோம்; எங்கள் முழுப் படைகளும் அதற்கு முஸ்தீப்பா யிருக்கின்றன'' என்று, அமெரிக்க-பிரிட்டிஷ்-சீன சர்க்கார்கள், ஜப்பானுக்கு எச்சரிக்கை செய்திருக்கின்றன. நிபந்தனையற்ற சரணாகதி என்றால் என்ன? இதையும் அவை விளக்கி யிருக்கின்றன. அதன் சாரம் இதுதான்: பிடித்த இடத்தை யெல்லாம் விட்டு, ஜப்பானியர் ஓடவேண்டும்; தங்கள் தாய் நாட்டின் சில தீவுகளில் போய் அவர்கள் முடங்கிக்கொள்ள வேண்டும்; அங்கேயும் கேந்திர ஸ்தானங்களில், நேச சர்க்கார்களின் படைகள் கொஞ்ச காலம் ஆதிக்கம் செலுத்திவரும்; யுத்தக் குற்றவாளிகள் என்று தாங்கள் கருதும் ஜப்பானியரை, நேச சர்க்கார்கள் தம் இஷ்டப்படி தண்டிப்பார்கள்; ஜப்பானிய சர்க்காரையும் சில காலம் தங்கள் இஷ்டப்படி இவர்கள் ஆட்டிவைப்பார்கள் - இதற்கெல்லாம் ஜப்பானியர் இணங்காவிட்டால், அடியோடு நாசமாக வேண்டியது தான். ஷரத்துகள் மகா கடுமையானவை. 'இதைவிட நாசமாய்ப் போவதே மேல்' என்று ஜப்பானியர் மறுத்து விட்டார்கள். கோரிய பலனை எதிர்பார்த்து,இந்த அறிக்கையை ஐக்கிய நாடுகள் விடுத்திருக்கும் என்று தோன்றவில்லை. ஜப்பானிய மன்னர், ஜப்பானிய மந்திரிகளோடு மாறுபட்டு, புரட்சி செய்வார் என்றே, இவை எதிர்பார்க்கின்றன போல் தோன்றுகிறது. 'கொழுக்கட்டைக்குத் தலை பார்த்துக் கடிப்பது' போல், இந்தச் சடங்கு ஒன்று எதற்கு என்று நமக்குப் புரியவே யில்லை.

*   *   *

கொசுக்கள் யுத்தம்: அமெரிக்காவில் உள்ள கார்னெல் மெடிக்கல் காலேஜின் சில புரொபஸர்கள், கொசுக்களைப் பிடிக்கும் புதிய பொறிகள் செய்வதில் முனைந்திருக்கிறார்களாம். இதற்காக, அவர்கள் கொசுக்களின் பாஷை ஆராய்ச்சியில் இறங்கி, அவைகளின் ரீங்காரத்தைப் பெரிதுபடுத்திக் காட்டும் பல பிளேட்டுகளும் எடுத்திருக்கிறார்கள். கொசுக்கள் ஏகாந்தமாயிருக்கையில் மௌனமே சாதிக்கின்றனவாம். காதல், கோபம், பயம் இவை வந்தால்தான், ரீங்காரம் செய்கின்றனவாம். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு 'ராகம்' வைத்திருக்கின்றனவாம். இவைகளிலே, எந்த 'ராக'த்தைக் கொண்டு கொசுக்களைக் கவர்வது, எப்படிப்பட்ட பொறிக்குள் மயக்கி விழுப்பது என்பது தான் அந்தப் புரொபஸர்களின் கவலை. ஆனால், அந்த ஆராய்ச்சிகள் எப்போது பலன் தருமோ, தந்தாலும் எப்போது இங்கே கிடைக்குமோ, அறியோம். ஆனால், சென்னையில் பருவம் மாறிவிட்டது;கொசுக்களின் படையெடுப்புத் தொடங்கிவிட்டது. நமது தற்காப்புக் கோட்டையை - அதாவது, கொசு வலையை - தவிர இப்போது வேறு வழியைக் காணோம்.

*

ஜின்னுவைக் கேளுங்கள்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

"மன்னிக்க வேண்டும். உங்களை நான் முரட்டுத்தனமாய் ஒரு கேள்வி கேட்கப் போகிறேன். கேட்கலாமா?" என்று கேட்டார் நண்பர் மஹ்பூப்.

"நன்றுய்க் கேளுங்கள். ஆனல், பதிலும் முரட்டுத் தனமாய்த்தான் இருக்கும். அதற்கும் நீங்கள் தயாராயிருக்கவேண்டும்" என்று நான் பதில் அளித்தேன்.

"பேஷாய் இருக்கட்டும். அதற்கு நான் தயார்தான். நீங்கள் பாகிஸ்தானை ஆதரித்து வாதித்தீர்களே; அதை நீங்கள் கைவிட்டு விட்டீர்களா? விஷய மறிந்த முஸ்லீம் வட்டாரங்களில் இப்படித்தான் பேசிக் கொள்கிறார்கள்" என்றார் மஹ்பூப்.

"முஸ்லீம் லீகே கடுமையாய் நிராகரித்துத் தள்ளிய ஒன்றை, நான் ஆதரித்துக் கொண்டேயிருக்க வேண்டுமா? அதை முஸ்லீம் லீக்குக்கு அளியுங்கள் என்று ஜனங்களை வேண்டிக் கொண்டேயிருக்கத்தான் வேண்டுமா? இப்படியா நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?" என்று நான் கேட்டேன்.

மஹ்பூப்: அவர்கள் பாகிஸ்தானை நிராகரிக்கவில்லை. அதற்கு மாறாக பூர்த்தன்னியமாய் அதை அவர்கள் வேண்டுகிறார்கள்.

நான்: பாகிஸ்தான் உருவாகி உண்மையில் ஸ்தாபிதமாக, சென்ற செப்டம்பர் மாதத்தில் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனல், ஜின்னா அதை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார். இப்போது, அது உருவற்ற ஒரு வெறுங் கருத்தாகப் போய் விட்டது. உருவிழந்த ஆவியை வைத்துக்கொண்டு, நாம் ஒன்றும் செய்ய முடியாது. அரசியல் உலகில் ஸ்தூலமான ஒரு திட்டம் இல்லாத பாகிஸ்தான், ரூபமற்ற வெறும் ஆவியேயாகும். அதைப்பற்றி யாரும் பேரம் பேசமுடியாது.

ம: லாகூர்த் தீர்மானம் இருக்கிறதே; அதைக் குறித்து என்ன சொல்கிறீர்கள்? அது திட்டமாகவும் ஸ்தூலமாகவும் இல்லையா?

நான்: லாகூர்த் தீர்மானம் ஒரு லட்சியத்தைச் சொல்லுகிறது. அதை ஓர் உடன்படிக்கை நகலாக யாரும் ஏற்க முடியாது. அந்தத் தீர்மானத்துக்கு ஓர் உருவம் கொடுத்து, காரிய சாத்தியமான ஒரு திட்டத்தை நான் தயாரித்தேன். காந்திஜி அதை ஒப்புக்கொண்டு, ஸ்ரீ ஜின்னுவுக்கு அளிக்க முன்வந்தார். ஸ்ரீ ஜின்னு அதை நிராகரித்துவிட்டார். ஆனல், அனுபவ சாத்தியமாயும் நிர்ணயமாயும் உள்ள மாற்றுத் திட்டம் ஒன்றை அவர் கூறவேயில்லை. காந்திஜியும் சரி, நானும் சரி, செப்டம்பரில் ஸ்ரீ ஜின்னுவுக்கு அளிக்க முன்வந்த திட்டத்துக்கு இன்னமும் தயாராகவேயிருக்கிறோம். ஆனல், சரியான சமயத்தில் ஸ்ரீ ஜின்னு அதை நிராகரித்துவிட்டதால், நாங்கள் எதுவும் செய்வதற்கில்லை. ஸ்ரீ ஜின்னு அதை நிராகரித்துவிட்டார். அவர் நிராகரித்துவிட்ட ஒன்றைக் கொடுப்பதாய், திரும்பத் திரும்ப நாங்கள் சொல்லிக்கொண்டிருக்க முடியாது.

ம: 'லாகூர்த் தீர்மானத்தை அப்படியே ஒப்புக்கொள்கிறோம்' என்று நீங்கள் ஏன் சொல்லக்கூடாது?

"பாகிஸ்தானை ஸ்ரீ ஜின்னுதான் வேண்டாம் என்றார்" என்கிறார் ராஜாஜி. "ஏன்?" என்றால், "அவரையே கேளுங்கள்" என்கிறார். முஸ்லீம் லீக்கின் இந்த முரண்பாட்டுக்கு மூல காரணம் என்ன என்பதைத் தெளிவாய் இந்தக் கட்டுரையிலே அவர் விளக்குகிறார். இது 'ஸாட்டர்டே மெயில்' என்ற பத்திரிகையில், 12—5—45-ந்தேதி வெளியான ஆங்கிலக் கட்டுரையின் மொழிபெயர்ப்பு.

நான் : ஏதோ வெறும் வாதமாய் மட்டிலும் இருந்தால், அதை நாங்கள் ஏற்றுக் கொள்ளலாம். அதனால் வார்த்தை யளவில் ஓர் ஒப்பந்தம் ஏற்படுமே யல்லாமல், திட்டமாய் எதுவும் சாதிக்க முடியாது. தகுதியுள்ள நடுநிலைமையான ஏதாவது ஒரு பஞ்சாயத்து சபை வரட்டும். அந்தச் சபையார் லாகூர்த் தீர்மானத்தை உள்ளடக்கி ஒரு திட்டத்தைத் தயாரிக்கட்டும். அதை ஒப்புக்கொள்ள, நாங்கள் தயாரா யிருக்கிறோம். சர்வதேசப் பிரசித்தியுள்ள எவராவது மூன்று ராஜதந்திரிகளை இப்படிப் பஞ்சாயத்து செய்யும்படி நாம் கேட்டுக் கொள்ளலாம். ஆனால், யார் எப்படிவேண்டுமானாலும் வியாக்யானம் செய்து கொள்ளக் கூடியதும் திட்டமில்லாததுமான ஒரு தீர்மானத்தை ஒப்புக் கொள்ள நாங்கள் தயாரில்லை.

ம : காந்திஜியும் நீங்களும் திட்டமாய் என்னதான் அளிக்க முன் வந்தீர்கள் ?

நான் : அந்த விவரம் அச்சிட்ட புத்தகங்களி லெல்லாம் வெளியாகியிருக்கிறது. சுருக்கமாய்ச் சொன்னால், இதுதான் அந்தத் திட்டம் : ஓர் எல்லை நிர்ணயக் கமிஷன் நியமிக்க வேண்டும். லாகூர்த் தீர்மானத்தில் சொல்லியிருக்கிறபடி, வடமேற்கிலும் கிழக்கிலும் உள்ள முஸ்லீம் மெஜாரிட்டி பிரதேசங்களுக்கு, அந்தக் கமிஷன் எல்லை வகுக்க வேண்டும். ஹிந்துஸ்தானிலிருந்து தனி ராஜ்யமாகப் பிரிய அவைகளுக்கு இஷ்டமா என்பது பற்றி, அந்தப் பிரதேசவாசிகளிடம் சர்வஜன ஓட்டு (ப்ளெபிஸைட்) எடுக்க வேண்டும். அதில் கிடைக்கும் மெஜாரிட்டி ஓட்டுப்படியே தீர்மானிக்க வேண்டும். பிரியத் தீர்மானித்தால், இரண்டு ராஜ்யங்களும் சர்வாதிகாரம் உள்ளவையாக இருக்கும். தேசத்தின் தற்காப்பு, வர்த்தகம், போக்குவரத்து, மற்றுமுள்ள முக்கிய விஷயங்கள் ஆகியவைகளின் பாதுகாப்பாக, இரண்டும் பரஸ்பரம் உடன்படிக்கைகள் செய்துகொள்ள வேண்டும்.

ம : இது நியாயமாய்த் தோன்றுகிறதே ; ஸ்ரீ ஜின்னா ஏன் இதை ஒப்புக்கொள்ள வில்லை ?

நான் : இதை நீங்கள் அவரையே கேட்கவேண்டும். யாரும் அவரைக் கேட்காததுதான் விசித்திரம்.

ம : இது சரியல்ல. உங்கள் திட்டத்தைத் தாம் ஏன் மறுத்தார் என்பதற்கு, அவர் சமாதானம் சொல்லியிருக்கிறார்.

நான் : அது எனக்குத் தெரியும். சர்வஜன ஓட்டு இல்லாமலே பிரிவினை செய்ய நாங்கள் ஒப்புக் கொள்ள வேண்டுமென்று அவர் கோருகிறார். அதாவது, ஜனங்களை ஒரு ராஜாங்கத்திடமிருந்து மற்றொரு ராஜங்கத்திடம் தள்ளிவிட வேண்டுமாம்; ஆனால், அதில் தங்களுக்கு இஷ்டமா இல்லையா என்று சொல்ல அவர்களுக்குச் சந்தர்ப்பமே அளிக்கக்கூடாதாம்; பெரும்பாலான மக்களின் விருப்பம் என்ன என்பதை நாம் அறிய வேண்டியதும் இல்லையாம். இது நியாயமா?

ம : பிரதேசங்களைப் பற்றி, என்ன சொல்லுகிறீர்கள் ?

நான் : அது தான் பிரதான விஷயம். வங்காளம் பூராவும், அஸ்ஸாம் பூராவும், பஞ்சாப் பூராவும்-தற்போது வகுக்கப்பட்டுள்ள நிர்வாக எல்லைப்படியே - பாகிஸ்தானில் சேர்ந்து விடவேண்டும் என்று ஸ்ரீ ஜின்னா சொல்லுகிறார். இவை தவிர, சிந்து, பலுசிஸ்தானம், வடமேற்கு எல்லைப்புறம் ஆகியவையும் அதில் சேர்ந்துவிட வேண்டுமாம்.

ம : இப்படிச் சொல்வதில் என்ன தவறு ?

நான் : இதை ஒப்புக் கொண்டால், முஸ்லீம் மெஜாரிட்டி யில்லாத பல-பெரிய பிரதேசங்களை ஒரு முஸ்லீம் ராஜ்யத்திலே பலவந்தமாய்ச் சேர்க்கவேண்டி நேரும். பஞ்சாபின் பெரிய கிழக்குப் பிரதேசம், வங்காளத்தின் பெரிய மேற்குப் பிரதேசம் இவை இரண்டிலும் முஸ்லீம் மெஜாரிட்டி இல்லை. அஸ்ஸாமிலோ, ஒரே ஒரு ஜில்லாவைத் தவிர, மற்ற எல்லா இடத்திலும் ஹிந்துக்களே அதிகமா யிருக்கிறார்கள்.

ம : ஆனால், உங்கள் திட்டம் மட்டில் சரியா ? அது பல திட்டுக்களைத்

தான் சிருஷ்டிக்கிறது; தொடர்ச்சியான பிரதேசங்களைக் கொண்ட ஒரு ராஜ்யம் அமைய முடியாமல் தடுக்கிறது.

நான்: அப்படி இல்லவே யில்லை. என் திட்டப்படி அமையும் பாகிஸ்தானில், தொடர்ச்சியான பெரிய முஸ்லீம் பிரதேசங்கள் இருக்கத்தான் இருக்கும். அவை ஐரோப்பாவில் நிலைத்துள்ள அநேக ராஜ்யங்களின் அளவு பெரியவையாயு மிருக்கும். என் திட்டப்படி செய்தால், முஸ்லீம் மெஜாரிட்டியுள்ள பிரதேசங்கள் மற்றவரால் சுற்றிலும் சூழப்பட்டோ, மற்றவர் மெஜாரிட்டி யுள்ள பிரதேசங்கள் முஸ்லீம்களால் சூழப்பட்டோ, எந்தத் திட்டுக்களும் இருக்கமாட்டா. தேசப் படத்தைப் பாருங்கள், ஜனத் தொகைப் புள்ளி விவரங்களையும் கவனியுங்கள்; இதை எளிதில் அறிந்து கொள்ளலாம். என் திட்டப்படி, முஸ்லீம் மெஜாரிட்டியுள்ள தொடர்ச்சியான பெரிய பிரதேசம் பாகிஸ்தானில் இருக்கும்; அது அளவிலும் வசதிகளிலும், அநேக சுதந்தர ராஜ்யங்களுக்குச் சமமாகவே இருக்கும்.

ம: அந்தப் பாகிஸ்தான் தன்னைத் தானே போஷித்துக் கொள்ளும் சக்தியுடையதா யிருக்காது என்கிறார்களே?

நான்: சுயநல நோக்கமுள்ளவர்கள் சொல்லும் வாதங்களை யெல்லாம் கேட்காதீர்கள். உலகத்திலே உள்ள எந்த ராஜ்யமுமே இன்று தன்னைத்தானே போஷித்துக் கொள்ளக் கூடிய சக்தியுடையதா யில்லை. ஆனால், சுதந்தரமா யிருக்க முடியாதபடி மிக்க ஏழ்மையா யுள்ள நாடும் எதுவு மில்லை. உதாரணமாக, ஆப்கானிஸ்தானம், இராக், இரான் இவைகளைப் பாருங்கள். இவை தங்களைத் தாங்களே போஷித்துக் கொள்வதற்காக, ஹிந்துப் பிரதேசங்களையோ அல்லது இதர அன்னியப் பிரதேசங்களையோ இவற்றோடு சேர்த்து விடலாமா? இவற்றில் ஒரே வகை ஜனங்கள் இருப்பதால் உள்ள ஒருமைப்பாட்டை, இவற்றின் பொருளாதார வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காகக் குலைத்து விடலாமா?

ம: உங்கள் கொள்கைப்படியே ஜில்லாவுக்கு ஜில்லா சர்வஜன ஓட்டு எடுத்தால், நிலைமை என்னாகும்? திட்டுத் திட்டாய் ஒன்றுக்கு மற்றது தொடர்பில்லாத பல தீவுப் பிரதேசங்களல்லவா உண்டாகி விடும்?

நான்: ஓட்டெடுப்பதை ஜில்லா வாரியாக எடுக்கவேண்டு மென்பதல்ல என் திட்டம். ஒரே ஜனங்கள் வசிக்கும் பிரதேசங்களை யெல்லாம் சேர்த்து எல்லை கட்டிவிட்டால், அந்த எல்லைக்குள் ஜில்லாவாரியாக ஓட்டெடுக்க வேண்டிய அவசிய மில்லை. அந்தப் பிரதேசங்கள் முழுவதிலும் கிடைக்கும் மெஜாரிட்டி ஓட்டுப்படியே தீர்மானிக்கவேண்டும் என்று நான் தெளிவாய்ச் சொல்லி யிருக்கிறேன். ஆனால், அந்த எல்லைக் கோடியிலுள்ள ஜனங்கள், பிரதேசங்களின் தொடர்ச்சிக்குப் பங்கமில்லாத வரையில், இரண்டில் எந்த ராஜ்யத்தில் வேண்டுமானாலும் சேர்ந்துகொள்ள இடமளிக்க வேண்டும்.

ம: காந்திஜிக்கும் ஸ்ரீ ஜின்னாவுக்கும் ஏற்பட்ட அடிப்படையான வேற்றுமை, முஸ்லீம் தேசம் இந்து தேசம் என்று இரண்டாகப் பிரிக்கும் கோட்பாட்டில் தான் அல்லவா?

நான்: காந்திஜி பிரிவினைக் கோரிக்கையை ஒப்புக்கொண்டு விட்டார். பிரிவினைக் கோரிக்கை நியாயமானதே என்று காட்டுவதற்காக ஸ்ரீ ஜின்னா சொன்ன கோட்பாட்டையும் காந்திஜி ஒப்புக்கொண்டே தீர வேண்டும் என்று வீண் கோருவது நியாயமே யில்லை. உண்மை யென்று தாம் நினைக்காத ஒன்றைக் காந்திஜி உண்மை என்று ஒப்புக்கொள்ள முடியாது. அதாவது, இந்துக்களும் முஸ்லீம்களும் இரண்டு தனித்தனித் தேசங்கள் என்ற கொள்கையை அவர் ஒப்புக்கொள்ள முடியாது. ஆனால், இதற்காக, காந்திஜி பிரிவினை ஏற்பாட்டுக்கு இணங்க மறுக்கவில்லை. சம்பந்தப்பட்ட ஜனங்கள் பிரிவினை வேண்டு மென்று ஓட்டளித்தார்களானால், காந்திஜி பிரிவினையை ஒப்புக் கொள்ளத் தயாராயிருக்கிறார்.

ம: பிரிட்டன் இந்தியாவை விட்டு விட்டுப் போவதன் முன்பே, அதாவது இடைக்கால அரசாங்கத்தினிடம் பொறுப்பை மாற்றிவிடு முன்பே, பிரிவினையைச் செய்துவிட வேண்டுமென்று ஸ்ரீ ஜின்னு விரும்பவில்லையா?

நான்: ஆம், ஸ்ரீ ஜின்னு விரும்பு விரும்புகிறூர். ஆனல், அரசாங்கத்தைக் கைமாற்றி விடாமல், பிரிட்டிஷாரே பூரா அதிகாரத்தையும் தம் கையில் வைத்திருக்கும்போது செய்யும் பிரிவினே உண்மையான பிரிவினே யாகமாட்டாது. அது மாகாணச் சுயாட்சி என்று தான் ஆகும். அதிகாரமானது பிரிட்டனிடமே இருந்து வரும் வரைக்கும், ஹிந்துஸ்தானுக்கோ பாக்கிஸ்தானுக்கோ சர்வாதிகாரத்துவம் இருக்க முடியாது. பிரிட்டனே ஆண்டு வரும்போது, பிரிவினையைக் கோருவதில் அர்த்தமில்லே. குறிப்பிட்ட ரீதியிலே ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ளுவது தான் முடியும். காந்திஜியின் திட்டமும், இப்போது திட்டமான அத்தகைய ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொள்ள வேண்டு மென்பதுதான். ஆனல், இப்போ திருந்துவரும் சர்க்காரை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாய் ஓர் இடைக்கால சர்க்காரை அமைக்க வேண்டும். அந்தச் சர்க்காரே, சர்வ ஜன ஓட்டை எடுக்கவேண்டும்; பிரிவினேக்கான இதர பூர்வாங்க நடவடிக்கைகளேயும் கைக்கொள்ள வேண்டும் - இதுதான் காந்திஜி சொல்வது.

ம: இப்படிச் செய்வதென்ருல், பரஸ்பர நம்பிக்கை இருக்கவேண்டுமல்லவா?

நான்: ஆமாம், அப்படித்தான். ஸ்ரீ ஜின்னுவின் திட்டம் நிறைவேறுவதற்கும் தான் பரஸ்பர நம்பிக்கை இருந்து தீரவேண்டும். அது மட்டுமா? தன்னம்பிக்கையும் இருந்தாக வேண்டும். ஒப்பந்தத்தை உடனே செய்து கொள்ள வேண்டுமென்று, காந்திஜி, ஜின்னு இரண்டு பேரும்தான் அப்படி கிறூர்கள். அந்த விஷயத்தில் அடிப்படையான அபிப்பிராய பேதமில்லே. தனித்தனியான ராஜாங்கங்களே நடத்திவரும் சக்தி, நமக்குள்ளேயிருந்துதான் வெளிவர வேண்டும்; வெளியாரால் அதை நமக்குக் கொடுக்க முடியாது. பிரிட்டிஷார் நாட்டைவிட்டு வெளியேறும் போது, பாக்கிஸ்தான் பலவீனமாகிவிடாதபடி அதைப் பாதுகாப்பதற்காக இந்தியாவிலே ஒரு ராணுவப் படையைப் பின்னே விட்டுச் செல்வார்களென்று ஸ்ரீ ஜின்னு நினேக்கிருரா? காந்திஜியின் ஷரத்துக்களே ஸ்ரீ ஜின்னு ஒப்புக்கொண்டால், ஸ்ரீ ஜின்னுவோடு காந்திஜியும் சேர்ந்துகொண்டு, பொது மக்களிடம் போய், தாங்கள் இருவரும் செய்துகொண்ட ஏற்பாட்டை அங்கீகரிக்கும்படி அவர்களேக் கேட்டுக்கொள்ளுவார். இப்படிச் செய்ய அவர் கட்டுப்பட்டிருப்பார். இரு தரப்பினரில் ஒரு தரப்பார் மட்டும் கட்டுப்பட்டிருக்க மாட்டார்கள் என்ருல், மறு தரப்பார் மட்டும்எப்படிக் கட்டுப்பட்டவர்களாவார்கள்?

ம: உங்களுடைய திட்டம் இவ்வளவு நியாயமானதானல், ஸ்ரீஜின்னு ஏன் இதை ஏற்றுக்கொள்ள வில்லே? அவர் இதய பூர்வமாகவே பாகிஸ்தானேக் கோருகிறூர் என்று நீங்கள் நம்பவில்லையா?

நான்: ஆம், அவர் பாகிஸ்தானே இதய பூர்வமாகவே கோரினூரென்றுதான் நான் நினேத்தேன். அதனுலேயே, நான் என் சகாக்களோடு சச்சரவிட்டுக் கொண்டேன். திட்டத்தை அவர் இப்போது உதறி எறிந்துவிட்டதால், நான் புனராலோசனே செய்ய வேண்டிய நிலேமை ஏற்பட்டிருக்கிறது. முஸ்லீம் லீக் முஸ்லீம்கள் மெஜாரிட்டியாயுள்ள பிரதேசங்களின் அபிலாஷைகளேப் பிரதிபலிக்காமல், சிறுபான்மை முஸ்லீம் பகுதிகளின் [மனப்போக்கையும் அபிலாஷைகளேயும் மட்டுமே உண்மையிலே பிரதிபலிக்கிறதோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த இரண்டுக்கும் ரொம்ப வேற்றுமை உண்டு. நாயை விட வால் பெருத்துப் போய்விட்டதுபோல் தோன்றுகிறது. லீக் ஓர் அகில இந்திய ஸ்தாபனம். ஆனல், மைனரிட்டி முஸ்லீம்களின் மனப் பிராந்திதான்,

மறுபடியும் வண்ணான் நாசம் செய்ததா!

—ஒவ்வொன்றும் எவ்வளவு விலையுயர்ந்தது

இம்மாதிரி செய்ய அவனை அனுமதித்தீர்களானால் அவன் உங்களை நிச்சயமாக நஷ்டத்திற்குள்ளாக்குவான். அவன் கிழிக்கும் துணிகளுக்கு பதில் வாங்க தற்கால விலையில் என்னவாகுமென்று யோசித்தீர்களா? துணிகளை நாசமாக்கும் வழிகளை நீங்கள் பொறுத்துக் கொண்டிருக்காதீர்கள். இவ்வழிகள் வீண். மேலும் அநாவசியம். உடுப்புகளையும், துணிகளையும் கொஞ்சங்கூட துணிகளுக்கு ஹானி ஏற்படாமல் ஸன்லைட் சோப்பினால் நன்றாய் சலவை செய்யலாம். இந்த வழி லகுவானது. கல்லின்மேல் அடிப்பதோ, முரட்டுத்தனமாக துவைப்பதோ அநாவசியம். 'சுயமாக வெளுக்கும்' ஸன்லைட் நுரை அழுக்கைப் போக்கி ஒரு நூல்கூட கெட்டுப் போகாமல் வண்ணான் சலவைக்கு மேலான வெண்மையைத் தருகிறது. கீழ்க்கண்ட லகுவான விதிகளை உங்கள் வேலைக்காரனுக்கு போதித்து, வீட்டிலேயே துணிகளை வெளுத்து, துணிகளையும், பணத்தையும் மிச்சப்படுத்துங்கள்.

வேலையாளுக்கு ஸன்லைட் உபயோகித்து பணம் மீக்கும் வழியைக் கற்பியுங்கள்

1 துணிகளை ஜலத்தில் நனைத்துசோப் போடுவதற்கு தயாராக்குங்கள். 2 பிறகு சோப்பைத் தேயுங்கள், அழுக்கான இடங்களில் கொஞ்சம் தாராளமாகத் தேயுங்கள் 3 பிறகு சோப் துணிகளில் பரவுவதற்காக கசக்குங்கள் துணிகளை அடிக்க வேண்டாம். ஸன்லைட்டின் சுயமாக வெளுக்கும் நுரை அழுக்கை லேசாக எடுத்துவிடுகிறது. 4 ஜலத்தில் நன்றாய் அலச வேண்டும். ஏனென்றால் அழுக்கு இப்பொழுது இந்த நுரையில்தான் இருக்கிறது. ரொம்ப அழுக்குத் துணிக்கு இன்னொருதரம் சோப் போடவேண்டியிருக்கும்.

ஸன்லைட் சோப் துணிகளைப் பாதுகாக்கிறது

S, 70-50 TM LEVER BROTHERS (INDIA) LIMITED

எதிர்பாராத தீவிபத்துகளினுல்
எத்தனையோ நஷ்டங்கள் !

அவற்றிற்கெல்லாம்
ஈடு கொடுப்பதே
எங்கள் அரிய சேவை !

விவரங்களுக்கு எழுதுங்கள் :-

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)

தலைமை ஆபீஸ் : மதுரை

கிளை ஆபீஸ்கள் :

பம்பாய் :	லாயிட்ஸ் பாங்க் பில்டிங் ஹாரன்பி ரோடு
அகமதாபாத் :	1761, காந்தி ரோடு
கல்கத்தா :	26, டல்ஹௌஸி ஸ்குயர்
ராவல்பிண்டி :	லாயிட்ஸ் பாங்க் காம்பவுண்ட் எட்வர்ட்ஸ் ரோடு

தீவிபத்து சம்பந்தமான சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்

மொத்த ஆஸ்திகள் ரூ. 42,00,000-க்கு மேல்

பிரதம ஏஜண்டுகள் :

ஏ. எப். ஹார்வி லிமிடெட், மதுரை etc.

நைஜாம் சமஸ்தானம், ஆந்திர தேசம், தமிழ் நாடுகளுக்கு ஏஜண்டுகள் :

சீதாராம ஜெனரல் ஸ்டோர்ஸ்

செகண்ட்ராபாத் — பெஜவாடா — மதுரை

லீக்கை ஆதிக்கம் செலுத்தி வருகிறது; முஸ்லீம் மெஜாரிட்டியுள்ள பிரதேசங்களில் இருக்கும் முஸ்லீம்களின் அபிலாஷைகள் அல்ல. அதிகப்படி ஸ்தானங்கள், தனித் தொகுதிகள், பாதுகாப்புகள் இவை போன்ற மைனரிட்டி எண்ணங்களிலே தான் லீக்குக்குப் புத்தி செல்லுகிறது. மெஜாரிட்டிப் பிரதேசங்களை தனி ராஜ்யமாகச் செய்து, அதற்குச் சர்வாதிகார அந்தஸ்தைத் தேட என்ன செய்யவேண்டும் என்ற திட்டத்திலே, அதன் புத்தி செல்லவில்லை. முஸ்லீம் லீக்கின் மனப்போக்குக்கு, பாகிஸ்தானைவிட சப்ரூத் திட்டமே அதிகம் ஏற்றது என்று நான் நினைக்கிறேன். ஆனால், இதை லீக் ஒப்புக்கொள்ள மாட்டேனென்கிறது.

ம: நீங்கள் சொல்வது ரொம்பவும் துணிச்சலான அபிப்பிராயம்.

நான்: பாக்கிஸ்தானையே வழங்க முன் வந்தபோது, அதை முஸ்லீம் லீக் மறுத்துவிட்டது. இந்த விந்தைக்குக் காரணம் என்ன என்று நான் ஆராய்கிறேனே தவிர, வேறொன்று மில்லை. ஏதாவது ஒரு காரண மில்லாமல், இப்படி நடந்திராது. நான் விளக்கிச் சொன்ன விஷயத்தை ஆதாரமாகக் கொண்டு பார்த்தால் தான், இந்த முரண்பாடு எனக்கு அர்த்தமாகிறது.

ம: அப்படியானால், இந்தச் சிக்கலுக்குப் பரிகாரம் காண உங்கள் முயற்சியை நிறுத்திவிடப் போகிறீர்களோ?

நான்: இல்லை; முயற்சியை நான் கைவிடமாட்டேன். செப்டம்பர் மாதப் பேச்சு முறிந்ததில், சில விஷயங்கள் முன்னிலும் தெளிவாகி விட்டன. அப்படித் தெளிவாகி விட்ட விஷயங்களை அஸ்திவாரமாகக் கொண்டு, பாகிஸ்தானைப் பற்றிச் சிந்திக்க ஒவ்வொருவருக்கும் அவகாசம் கிடைத்திருக்கிறது. ஒன்றுபட்ட சமஷ்டி (பெடரேஷன்) ராஜ்யத்திலே தங்களுக்கு லாபமுண்டு, தாங்கள் சந்தோஷமாய் வாழலாம் என்று முஸ்லீம்கள் நினைத்தார்களானால், அப்படிப்பட்ட ராஜ்யத்திலே செல்வாக்கான ஒரு ஸ்தானம் அவர்களுக் குண்டு. இல்லை, நடுத்தரமான ஓர் ஏற்பாடு வேண்டும் என்றார்களானால், சுதந்தரமான பல சிறிய ராஜ்யங்கள் தம்மிச்சையாய்ச் சேர்ந்த ஐக்கிய (கான்பிடரேஷன்) ராஜ்யத்தை அமைக்கலாம்; அதில் சேர்ந்த சிறு ராஜ்யங்கள், தத்தம் போக்கில் வளர்ச்சியடையச் சுதந்தரமிருக்கும். 'சமஷ்டியும் வேண்டாம், ஐக்கியமும் வேண்டாம்; பிரிவினை தான் வேண்டும்' என்றார்களானால், அவசியமான உடன்படிக்கைகளைச் செய்து கொண்டு, நியாயமான முறையிலே அந்தப் பிரிவினையையும் செய்து கொள்ளலாம். சம்பந்தப்பட்ட ஜனங்களின் விருப்பம் என்ன என்று கேட்டறியாமலே, நியாயமற்ற முறையில் எல்லை வகுத்துத்தான் பிரிவினை செய்ய வேண்டும் என்றால், அதற்கு யாரும் சம்மதிக்க முடியாது. இப்போதைக்கு நாம் இந்த விவகாரத்தை ஒதுக்கிவிட்டு இந்திய சர்க்காரை ஏற்று நடத்த, தற்காலிகமாக ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். அதன்படி, பொது ஜனங்களின் ஆதரவுபெற்ற ஒரு கூட்டு சர்க்காரை நாம் அமைத்துக் கொள்ளலாம். இந்திய சர்க்கார் எதேச்சாதிகார சர்க்காராய் இல்லாதபடி, இப்போதே அதை நாம் இவ்விதம் மாற்றிவிடலாம். இதனால் தான், தேசாய்-லியாகத் திட்டத்தை நான் வரவேற்றேன். இதுவும் சப்ரூத் திட்டத்தையே. சாராம்சத்தில் ஒத்திருக்கிறது என்று நான் நம்புகிறேன். எல்லாக் கட்சியாரும் ஒருவரோடொருவர் நெருங்கிப் பழகுவதாலும், கூட்டாய்ப் பொறுப் பேற்றுக் கொள்வதாலும், ஓர் ஒப்பந்தம் செய்து கொள்வது எளிதுபடும்.

ம: இந்த யுத்தத்திலே சேர்ந்த ஐக்கிய நாடுகளைப் பாருங்கள் என்று சொல்வீர்கள்; இல்லையா?

நான். ஆம். அப்படித் தான் சொல்கிறேன்.

✲

பார்வதி

முல்க்ராஜ் ஆனந்த்

பால்போன்ற கங்கையும் கன்னங் கரிய யமுனையும் ஒன்றுகூடு மிடத்தில், சில சின்னஞ் சிறு தீவு களும் மணற்கரைகளும் இருக்கின் றன. அவைகளில் பன்னிரண்டு வருஷத்துக்கு ஒருமுறை கும்பமேளா என்ற திருவிழா நடக்கிறது. இந்தி யாவில் நடக்கும் மிகப் பெரிய திரு விழாக்களில் இதுவு மொன்று. இதைப் பார்ப்பதற்காக, பக்தர்கள் தூரந்தொலையி லிருந்தெல்லாம் வரு வார்கள். வேடிக்கை பார்க்க வருப வர்கள் ஒரு புறம்; கடவுள் மீதுள்ள பக்தியாலும், தெய்வப் பிரசாதத்தில் ஏற்பட்ட பசியாலும், அமிழ்த கங்கையைப் பருகும் தாகத்தாலும் வருபவர்கள் இன்னொரு புறம் - இப் படி ஏராளமான ஜனங்கள் கூடுவார் கள். இந்தத் திருவிழாவுக்கு வேண்டிய ஏற்பாடுகள் பல மாதங்களுக்கு முன் னதாகவே நடக்கும். கங்கையைப் பெருக்கெடுக்கச் செய்யும் இமாலயத் திலுள்ள சிவபிரானை நோக்கி, சாதுக் கள் செப்பு வாத்தியங்களை முழக்கு வார்கள். புரோகிதர்கள் பழம் சுவடி களைப் புரட்டிப் புரட்டி முன் வருஷங் களில் ஓதியதைவிட அதிகமாகவேதம் ஓதுவார்கள். கழைக் கூத்தாடி எத் தனைக்கெத்தனை அதிகமாய்க் கூத்த டிக்கிருனே அத்தனைக் கத்தனை அதிக மான வரும்படி அவனுக்குக் கிடைக் கும். இவர்களுக்கும் வேதமோதுவது அதே மாதிரிதான்.

சொர்க்க வாசலுக்குப் போய்ச்சேர அநுமதிச் சீட்டை லகுவில் பெற விரும்பும் ஜனங்கள், தாங்கள் சேர்த்து வைத்த பணத்தை யெல்லாம் இவர் களுக்குக் கொணர்ந்து கொடுப்பார் கள்.

கங்கையும் யமுனையும் ஒன்று சேரும் பிரயாகை, லங்கையின் தலை நகரான கொளும்பிலிருந்து வெகு தொலைதான். ஆயினும், சமீபத்தி லுள்ள ராமேசுவரம், கன்னியாகுமரி, சரித்திரப் புகழ்பெற்ற மதுரை ஆகிய க்ஷேத்திரங்களைவிட, பிரயா கையே மிக முக்கியமாக, எஞ்சினீயர் மகாதேவனின் மனைவி பார்வதிக்குத் தோன்றியது. சிறிது காலமாகத் தன் கணவனின் அன்பு தன்னை விட்டுச் சிறிது சிறிதாய் நழுவுவதாக அவள் பயந்ததால், சிவனின் ஆவி தீயொளி வீசும் யமுனையை அணை யும் இடமான பிரயாகைக்குப் போய் வந்தால், தங்கள் பந்தம் உறுதிப் படும் என்று பார்வதி எண்ணினுள். மகா தேவனே ஜகன்னுதை புரியில் இருக்கும் கோரனுத் கோவிலில் உள்ள சித்திரங்கள் உணர்ச்சி யற்ற மனிதனுக்கும்கூட இச்சை யுண்டாக் கக் கூடியவை என்று கேள்விப்பட் டிருக்கிருன். ஆகையால், அவை களைப் போய்ப் பார்க்க அவன் விரும் பினுன். ஆனுல், தாங்கள் பிடித்ததைச் சாதிப்பதில் இந்தியப் பெண்கள் அமெரிக்கப் பெண்களுக்குச் சளைத்த வர்கள் அல்ல. ஆகவே, பார்வதியே வென்ருள்.

கொளும்பை யடுத்த ஒரு சின்ன ஸ்டேஷனில் ரயிலேறி, இருவரும் வடக்கு நோக்கிப் புறப்பட்டார்கள். காக்கினடாப் பகுதியிலிருந்து வந்த தமிழர்களாகிய இவர்கள், தலைமன் னருக்கும் தனுஷ்கோடிக்கும் செல் லும் சிறு கப்பலிலிருந்தபடியே, தாய் நாட்டைக் கண்டார்கள்.

மகாதேவனின் மனது உதகமண்ட லத்தின் மீதிருந்தது. அங்கே சென்று கொஞ்சம் மது அருந்தி, தன்

பலன் பெறுவதற்காகப் பிரயாகை செல்லு இருர்கள் அந்தத் தம்பதிகள், பலன் கிடைத் தது. கடவுள் அளிக்கவில்லை; புரோகிதன் படுத்தியபாடுதான் அதைக் கொடுத்தது. இதை எழுதியுள்ள மூல ஆசிரியர் முல்க் ராஜ் ஆனந்து, சிறந்த கதாசிரியர் என்று மேனுடெல்லாம் புகழ்பெற்றவர். அவரு டைய அனுமதியுடன் நண்பர் கே. கணேஷ் இந்தக் கதையைத் தமிழ்ப் படுத் தித் தந்திருக்கிருர்.

ளேடு படித்த மாணவிகளைப் போன்ற சில வெள்ளைப் பெண்களுடன் ஆனந்தமாய்க் கழிக்கலாமென்று அவன் எண்ணினன். ஆனல், பார்வதியின் இஷ்டப்படி நேரான குறுகிய சென்னை ரயில்வே வழியாய்த்தான் செல்ல நேர்ந்தது. நாகபுரி போகும் வரையில் இரண்டாம் வகுப்பு வண்டியில் இருந்தது இந்த இருவரும் இவர்களின் இரண்டு பெட்டிகளுமேதான். அதற்குப் பின்பு, போகப் போக அதிகமான யாத்திரிகர்கள் வந்து ஏறியதால், இவர்கள் ஒரு மூலையில் முடங்கித் தூங்கி விழுந்து கொண்டு உட்கார்ந்திருக்க நேர்ந்தது. பிரயாகை நெருங்க நெருங்க, வண்டியில் எள்ளுப்போட இடமில்லை. கடைசியாக, ஒருநாள் காலையில் ரயில் அலகாபாத் ஜங்ஷனை அடைந்தது. பெருங்கூட்டமாயிருந்ததால் சிவில் லைனிலுள்ள பார்ஸி ஹோட்டலில் தங்கி விட்டு, அருகிலுள்ள பிரயாகைக்குச் செல்லலாமென்று மகாதேவன் யோசனை கூறினன். பார்வதியும் பிரயாண அசதியால் இதற்குச் சம்மதித்தாள். இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும், தங்கள் மனைவிமார் தூண்டுதலால் உத்தியோகஸ்தர்கள் அநேகர் கும்பமேளாவுக்கு வந்திருந்தார்கள். ஆகவே, ஆங்கில மோஸ்தரில் நடத்தப்பட்ட டின்ஷா ஹோட்டலில் வெகு சிரமத்தின் பேரில்தான் இவர்களுக்கு இடம் கிடைத்தது. நாகரிகம் முதிர்ந்த லங்கையிலிருந்து வந்திருந்த மகாதேவனுக்கோ, இந்த ஹோட்டலின் கர்நாடகத் தோற்றமும், இதில் இருந்த விக்டோரியா காலத்துத் தளவாடங்களும் ஏழாம் எட்வர்டின் படமும் வெறுப்பையே தந்தன.

பார்வதி மலாயாவிலுள்ள பணக்காரத் தமிழர் ஒருவரின் பெண். அவள் அழகியல்ல. அந்தக் குறையை ஈடு செய்வதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு லட்சம் ரூபாயோடு, அவளை மகாதேவன் மணந்தான். இரண்டு புனித நதிகளும் ஐக்கியமாகும் இடத்தில் தங்கள் இருவருடைய அன்பும் ஒன்று கூடுமென்று, பார்வதி கனவு கண்டாள்.

மகாதேவனுக்குத் தூக்கம் வந்தது. என்றாலும், வெயில் வருவதற்கு முன்னே பிரயாகையில் நீராடச் செல்ல வேண்டும். அதற்கு ஒரு வாடகை மோட்டார் தேடவேண்டி வந்தது. சொர்க்க வாசலையே விலைக்கு வாங்கி விடக் கூடிய பிரபுக்களும் இளவரசர்களும், முன்பே சகல வாடகை மோட்டார்களையும் கொண்டுபோய் விட்டார்கள். இந்த இருவரும் பாதையோரத்தில் நின்று ஏதாவது ஜட்காவாவது கிடைக்காதா என்று காத்திருந்தார்கள். சிவில் லைனிலிருந்து ஏராளமான யாத்திரிகர்கள் போய்க் கொண்டிருந்தார்கள். ஆனல், இந்த இலங்கைப் பிரயாணிகள் மட்டும் காத்திருந்தார்கள். முடிவில் யாரோ சொன்ன யோசனையின் பேரில், குறுக்குவழியில் நடப்பதென்று முடிவு செய்தார்கள். காலைச் சூரியன் கடுமையாய்க் காய்கிருன். தெருவிலே பெரும் புழுதி. மனதிலோ நிம்மதி யில்லை. இதெல்லாம் சேர்ந்து மகாதேவனுக்கு ஒரே வெறுப்பாயிருந்தது. ஆனலும், உத்தம ஹிந்துக் கணவனைப் போலவே பார்வதிக்கு நான்கு கஜங்கள் முன்னல், தலையில் தொப்பியுடனும் வியர்வை தோய்ந்த வெள்ளைச் சராயுடனும், தன் பருத்த உடலைத் தாங்கிக் கொண்டு, அவன் நடக்க ஆயத்தமானன். ஆனல், அவர்களுடைய பொறுமை வீண் போகவில்லை. கடைசியில், ஒரு ஜட்கா வண்டி அகப்பட்டது. முன்பே ஏராளமான ஜனங்கள் அந்த வண்டியில் நிறைந்திருந்தார்கள். அதிலே இவர்களையும் வண்டிக்காரன் ஏற்றிக் கொண்டான். தூரம் ஐந்து மைல்களுக்கும் குறைவாகும். என்றாலும், ஐந்து ரூபாய் சத்தம் கொடுக்க, இவர்கள் ஒப்புக் கொண்டார்கள். கங்கையை நெருங்கியதும், அதன் குளிர்ந்த காற்றுப் பார்வதியின் மேனியிலே பட்டது. அவளது உள்ளம் தாமரை போல் மலர்ந்தது. தோட்டத்தில் கண்கொள்ளாமல் மொய்த்துப் பூத்த வெண்மையான பூக்களைப் போல், நதிக்கரையோரம் கூடியிருந்த ஏழை ஜனங்களை மகாதேவன் கண்டான். அவனுக்கு என்னவோ ஒரு பயம் உண்டாயிற்று.

ஒவ்வொரு நிமிஷமும் கூட்டம் அதிகரித்துக் கொண்டே இருந்தது. இருவரும் வண்டியை விட்டு இறங்கிக் கூட்டத்திலே கலந்தார்கள். கூட்டத்தில் கேட்கும் கூச்சல்கள், பிரார்த்தனைகள், பேச்சுகள், வியாபாரிகளின் பேரங்கள், பிச்சைக்காரர்களின் புலம்பல்கள், விளையாட்டுச் சாமான் வியாபாரிகள் போடும் கர்ண கடூரமான கூச்சல்கள் - இவை அனைத்தையும் மீறிய உரத்த குரலில், பார்வதிக்கு மகாதேவன் உற்சாக வார்த்தைகள் கூறிக் கொண்டிருந்தான். இதன் காரணம், நிர்ப்பந்தத்தால் இருவரும் மிக நெருங்கியதனால் ஏற்பட்ட ஒரு திடீர் அன்போ என்னவோ! அவன் பார்வதியை இழுத்துப் பிடித்துக் கொண்டு உல்லாசமாய்ச் சென்றான். கூட்டத்தின் மத்தியில் புகுந்து செல்லும் போது, கூட்டத்தின் நெருக்கம் அவர்களைத் திணற அடித்தது. கூன், குருடு, அங்கவீனர், நோயாளிகளான பிச்சைக்காரர்களின் தொல்லையி லிருந்து தப்புவது பிரம்மப் பிரயத்தனமாய் இருந்தது. குஷ்டத்தினால் குன்றியவர்களும் கால் கை யற்றவர்களும் வழியெல்லாம் கூச்சல் போட்டுக் கொண் டிருந்தார்கள்.

"ஆற்றுக்கு வாருங்கள்" என்று, இவர்களை வெள்ளை உடை அணிந்த ஒருவன் அழைத்தான். அவன் நெற்றியில் இட்டிருந்த சந்தனப் பொட்டும், பூச்சும், அவன் ஒரு புரோகிதனென்று தோற்றியது. யாரும் வழிகாட்டி இல்லாமல் ஏங்கிய மகாதேவனுக்கு, இவனுடைய அழைப்பு மகிழ்ச்சி யளித்தது. இரண்டு நதிகளும் சங்கமமாகும் இடத்தில் ஸ்நானச் சடங்குகள் ஒரு புறம் நடக்கும். அந்தச் சடங்குகளுக் கெல்லாம் தலைமை வகிக்கும் பிராமணன் ஒருவன் உண்டு. அவனிடம் இந்த இருவரையும் அந்த வழிகாட்டி அழைத்துச் சென்றான். புரோகிதனும் இந்தத் தரகனும் கூட்டாகத் தொழில் செய்பவர்கள். உலகம் சுற்றிய மகாதேவனுக்கு, ஐரோப்பியத் தரகர்களிடம் நல்ல அநுபவம் உண்டு. கங்கைக் கரையில் இருந்தாலும், பிரஞ்சு மாஸேல் துறைமுகத்தில் இருந்தாலும், தரகன் தரகனே என்று அவனுக்குத் தெரியும். ஆனால், இவன் யோசிப்பதற்கே புரோகிதன் இடம் கொடுக்கவில்லை. இவர்கள் வந்ததுமே, இவர்களைத் தன் அருகே அமர்த்தி, இவர்களின் காதில் ஏதோ மந்திரத்தை முணுமுணுத்தான்; மூக்கைத் தொட்டான்; உடலில் திருநீற்றைத் தெளித்தான். இவர்கள் இருவருக்கும் இந்துஸ்தானி தெரியாது. புரோகிதனுக்கோ, தமிழும் தெரியாது; ஆங்கிலமும் புரியாது. தரகன் மட்டும் ஏதோ கொஞ்சம் கொச்சை ஆங்கிலம் பேசுவான். இந்த மாதிரி சந்தர்ப்பங்களில்தான் கைச்சாடை பாஷை ரொம்பவும் உதவியா யிருக்கிறது.

பல மந்திரங்களை முணு முணுத்த பின்பு, தரகன் இவர்களது யாத்திரையின் நோக்கத்தை உணர்ந்தவன் போல் மகாதேவனின் வேட்டியைப் பார்வதியின் சேலையோடு முடிச்சுப் போட்டு, இவர்களை ஆற்றுக்கு அழைத்துச் சென்றான். அந்த முடிச்சோடு இருவரும் கங்கை-யமுனை சங்கமத்தில் மூழ்கி, தண்ணீர் சொட்டச் சொட்ட எழுந்தார்கள். சுற்றிலும் சூரிய தேவனைப் பூஜிக்கும் ஆண் பெண்களின் தோத்திரங்களும், வேத கோஷங்களும் ஒலித்தன. தரகன் மீண்டும் புரோகிதன் இருக்கும் மேடைக்கு இவர்களை அழைத்துச் சென்றான். அங்கே தலைமைப் புரோகிதன் இவர்கள் மீது ஏதோ பச்சரிசியைத் தூவி மந்திரம் ஓதி வாழ்த்திச் சந்தனப் புகையை முகரச் செய்தான். மகாதேவனுக்கும் பார்வதிக்கும் என்று மில்லாத ஓர் அன்பு பொங்கியது. இருவரும் கை கோத்துக் கொண்டு புன்னகையோடு, கடவுளின் பிரதிநிதிக்கு முன்னே நின்றார்கள். மந்திரங்கள் உருவேற உருவேற இருவர் மனமும் ஒன்றிப்போகும் என்ற ஆவலோடு அவர்கள் நின்றார்கள். கங்கையும் யமுனையும் ஒன்றுகூடி இருப்பதைப் போல், தானும் தன் கணவனும் ஐக்கியப் படவேண்டும் என்று பார்வதி ஸ்மரித்துக்கொண் டிருந்தாள்.

தன் கோரிக்கை பலித்தால், இன்னும் இருபது வருஷங்கள் கழித்து மீண்டும் இங்கே வருவதாக அவள் தன் மனதுக்குள் தமிழிலே பிரார்த்தனையும் செய்து கொண்டாள்.

திடீரென்று, தலைமைப் புரோகிதன் வெள்ளி ரூபாயைச் சுண்டுவதைப் போல், ஏதோ சைகை காட்டினான். சோர்ந்து அரைத் தூக்கத்திலிருந்த மகாதேவன், இதைக் கவனித்தும் கவனியாததுபோல் இருந்தான். புரோகிதன் மீண்டும் அதே மாதிரி சைகை காட்டி, பத்து விரல்களையும் நீட்டி, "காணிக்கை!" என்றான். மகாதேவன் தலை நிமிர்ந்து பார்க்கவும், தரகனும் கையை நீட்டியபடி, கொச்சை ஆங்கிலத்தில் "ஆயிரம் ரூபாய்கள்" என்று கூசாமல் சொன்னான். மகாதேவன் ஆச்சரியத்துடன் கண்ணைத் திறந்து மிரள மிரள விழித்தான். "ஆயிரம்... சடங்குக்கு... விளங்குகிறதா?... இப்போது கொடு" என்றான் தரகன். அவன் வார்த்தைகள் மகாதேவனை மண்டையிலடித்தது போல் பளீர் என்று விழுந்தன. மகாதேவன், மனைவியை முறைத்துப் பார்த்த வண்ணம், தலையை ஆட்டிக் கொண்டே, "இல்லை" என்று அழுத்தமாய்ச் சொன்னான். தரகன் மேடையைத் தட்டிக் கொண்டே, "கொடு" என்று மறுபடியும் கேட்டான். பார்வதியோ தன் கணவனிடம் கடவுள் என்ன தொகை கேட்கிறார் என்று புரியாதவளாய், தன் பிரார்த்தனைக்குச் செவி சாய்க்க அவர் கேட்கும் தொகையைக் கொடுத்துவிடும்படி கணவனுக்குச் சைகை செய்தாள். தான் இந்த விஷயங்களில் மிகவும் சிக்கனமாய் இருப்பதாகத் த்ன் மனைவியிடம் காட்டிக் கொள்ளக் கூடாது என்பதற்காக, தரகனிடம் மகாதேவன் ஐம்பது ரூபாய்கள் தருவதாகச் சொன்னான். "எவ்வளவு!" என்று புரோகிதன் தரகனைக் கேட்டான். தரகன் ஹிந்துஸ்தானியில் விஷயத்தைக் கூறவும், புரோகிதன் "அட கடவுளே! இந்த இரண்டு கருமிகளையும் பார்த்தாயா!" என்று சம்ஸ்கிருதத்தில் முணுமுணுத்தான். தரகன் ஆங்கிலம், ஹிந்துஸ்தானி, பஞ்சாபி இந்த எல்லாம் கலந்த கதம்ப பாஷையில், "மாடு தின்னும் அசுத்தர்கள் தானே இந்தத் தெற்கத்தியான்கள்! தங்கள் பாவத்தைப் போக்கிவைத்த அடியார்களை என்ன நினைத்திருக்கிறார்கள் இவர்கள்! ஏதோ பிச்சைக் காசு மாதிரி அல்லவா சில்லறையை வீச வருகிறார்கள்?" என்று திட்டிக் கொண்டிருந்தான். 'இந்த வீண் சச்சரவிலிருந்து தப்பினால் போதும் என்று எண்ணிய மகாதேவன், "போகிறது. நூறு ரூபாய் தருகிறேன்" என்று தனக்குள் மிகவும் தாராளமாய்க் கூறினான். தரகன் இந்தத் தம்பதிகள் இருவருடைய ஆடைகளையும் சேர்த்து முடிந்த முடிச்சை அவிழ்ப்பதில் முனைந்தான். தான் தன் கணவனிடம் ஐக்கியப்பட்ட சின்னத்தை தரகன் அழிக்க முயற்சிப்பதைப் பார்த்த பார்வதி, மகாதேவனின் கைகளைப் பிடித்துக்கொண்டு அழ ஆரம்பித்தாள். மகாதேவன் அவள் தலையைத் தடவிக்கொண்டே, "இதென்ன அசட்டுத்தனம்! புத்திசாலிப் பெண்ணாய் நடந்துகொள்" என்று ஆங்கிலத்தில் சொன்னான்.

"உடனே ஆயிரம் ரூபாய் கொடு. இல்லாவிட்டால் உன் மண்டையை உடைப்பேன்" என்று, கோபத்தால் சிவந்த கண்களுடன், தரகன் எஞ்சினியரைக் கேட்டான். புரோகிதனும் இந்தச் சச்சரவில் கலந்து கொண்டான். இவர்களைச் சுற்றி ஒரு கூட்டம் கூடிவிட்டது. அதில் சிலர் தென்னிந்தியர்களைத் திட்டியும் மற்றும் சிலர் போற்றியும் பேசினார்கள். திருவிழாவுக்கு வந்து இறங்கியதும் கூட்டத்தைக் கண்டு பயந்த அதே உணர்ச்சி, மகாதேவனுக்கு இப்போது மீண்டும் ஏற்பட்டது. அவன் கண் கலங்கிய வண்ணம், புரோகிதனை நோக்கி, மண்டியிட்டுக் கை கூப்பி, "கொஞ்சம் கிருபை காட்டுங்கள். இரு நூறு ரூபாய் பெற்றுக் கொண்டு எங்களை விட்டு விடுங்கள்" என்று கெஞ்சினான். புரோகிதன் "அது முடியாது" என்று நிர்த்தாட்சண்யமாய் மறுத்துவிட்டான். தரகன் யாத்திரிகனின் மனஉறுதி கலைந்துவிட்டதைக் கண்டு கொண்டதால்,

"எழுந்திரு நீ இந்த மாதிரி ஏமாற்ற முடியாது. ஆயிரம் ரூபாய்க்குக் குறைந்து ஒரு செப்புச் சல்லியும் வாங்க முடியாது" என்று கம்பீரமாய்க் கூறினான். "இப்படி ஒரே கண்டிப்பாய்ச் சொல்லாதீர்கள். இவர்கள் இந்தப் பக்கத்துக்குப் புதிசு போல் இருக்கிறது" என்று வேறு சில யாத்திரிகர்கள் இவர்களுக்கு ஒத்தாசையாய்ப் பரிந்து பேசினார்கள். "எங்கள் விஷயத்தில் நீங்கள் தலையிடவேண்டாம். உங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு போங்கள்" என்று தரகன் அவர்களை அதட்டிவிட்டான்.

மகாதேவன் கதுப்பு மிகுந்த தன் யௌவனக் கன்னங்களில் கண்ணீர்த் துளிகள் சோரப் பொருமிக் கொண்டே, பார்வதியைத் தன் அருகிலே இழுத்துக்கொண்டான். தாங்கள் கங்கையில் குளிப்பதற்கு முன் கரையில் கழற்றி வைத்துச் சென்ற தன் சட்டை ஜேபியில் இருந்த பணப் பையைத் துழாவினான். ஆனால், அதை அங்கே காணோம். திகிலுற்ற மகாதேவன் அடுத்த ஜேபியில் தேடினான். அதிலுமில்லை. தான் முதலில் தேடிய ஜேபியில்தான் அதை வைத்ததாக, அவனுக்கு நன்றாய் ஞாபகமிருந்தது. கலவரத்துடன் தன் கால் சட்டையை எடுத்து அதன் இரண்டு ஜேபிகளிலும் தன் கைகளைத் திணித்தான். அங்கேயும் அது காணவில்லை. மகாதேவனின் முகம் சவத்தைப்போல் வெளுத்தது. தரகனையும் புரோகிதனையும் கோபத்துடன் மாறிமாறி நோக்கினான். "ஆயிரம் ரூபாய்!" என்று தரகன் மறுபடியும் ஒரு முறை கத்தினான்.

"என் பணத்தை நீ திருடிக்கொண்டாய்! பணப்பையைத் தருகிறாயா? போலீஸைக் கூப்பிடட்டுமா?" என்று மகாதேவன் கர்ஜித்தான். அதிசயித்தான் தரகன். "தலையாரியைத் திருடன் பயமுறுத்துகிற கதையாய் அல்லவா இருக்கிறது!" என்று கூட்டத்தைப் பார்த்துக் கூறிக்கொண்டே, மகாதேவனை அடிப்பதற்காகக் கையை ஓங்கினான். பார்வதி விசித்து விசித்து அழுது கொண்டிருந்தாள். அவளது குற்றமற்ற அபிலாஷை பூர்த்தியடைய ஆரம்பித்த சடங்கு அல்லவா இந்தச் சந்தடியில் வந்து முடிந்தது! மகாதேவன் ஆத்திரத்துடன் தரகனையும் புரோகிதனையும் ஒரு முறை நோக்கினான். படித்துப் பட்டம் பெற்ற நாகரிக கனவானாகிய தானும், இந்தக் காட்டுமிராண்டிகளைப் போல் நடக்கலாமா? கூட்டத்திலே யாராவது போலீஸ்காரன் நிற்கிறானா என்று சுற்று முற்றும் பார்த்தான். ஒருவனையும் காணோம். "இவர்களிடம் சிக்கியது சிக்கிவிட்டீர்கள். இன்னும் அதிகத் தொந்தரவுகளுக்கு ஆளாகாமல் தப்ப விரும்பினால், இப்போதே போய் விடுங்கள்" என்று, ஆங்கிலம் நன்றாய்ப் பேசக்கூடிய யாரோ ஒரு யாத்திரிகன் கூறினான். மகாதேவன் தங்கள் துணி மணிகளைச் சுருட்டி எடுத்துக்கொண்டு, பார்வதியையும் அணைத்து அழைத்துக்கொண்டு, அந்த இடத்தை விட்டுச் சென்றான். ஆஹா! இதோ பார்வதி அவனுக்கு எவ்வளவு அருகிலே இருக்கிறாள்! இதற்குமுன், அவள் தனக்கு இவ்வளவு அருகில் இருந்ததாக, அவனுக்கு ஒரு நாளும் தோன்றியதே யில்லை.

*

ஜனாதிபதி சந்தேகம்

அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் தமது பூட்ஸைத் துடைத்துக் கொண்டிருந்தார். அப்போது, ஓர் ஆடம்பரப் பேர்வழி உள்ளே வந்தார்.

"ஜனாதிபதி அவர்களே, என்ன இது? உங்கள் பூட்சை நீங்களே துடைத்துக்கொண் டிருக்கிறீர்களே!" என்று ஆடம்பரப் பேர்வழி கேட்டார்.

"ஆமாம்; நீங்கள் யார் பூட்சைத் துடைக்கிறீர்கள்?" என்று கேட்டார் லிங்கன்.

விளையாட்டுக் கருவிகளின் மூலம், அவன் மனதிற் கிசைந்தாற்போல கைகளை உபயோகிக்கும் பழக்கத்தை யடைகிறான். விளையாடும் பொழுதும், தன் வீட்டிலும் விளையாட்டுக் கருவிகளிலுங்கூட மறைந்திருக்கிற அழுக்கு அபாயத்திலிருந்து தினசரி லைப்பாய் சோப்பின் உபயோகத்தினால் காப்பாற்றிக் கொள்கிற அந்த பழக்கம், மகனைக் காப்பாற்றுகிற தென்பதை தாயார் கவனித்து வருகிறாள்.

லைப்பாய் ஒரு நல்ல சோப்பைக் காட்டிலும் சிறந்தது. அது ஒரு நல்ல பழக்கம்

L 80-50 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

ஆஸ்துமா வியாதியுள்ளவர்களுக்கு நான் இதைத்தான் சொல்லுவேன்

தற்சமயத்திற்கு குணமளிக்கும் மருந்துகளை வாங்குவது முற்றிலும் வீண்.

"புரோஹித் சுவாஸஹரி" தற்சமயத்திற்கு மட்டும் அல்ல. "ஆஸ்த்மா"வின் மூலகாரணங்களையும் கண்டித்து நீடித்த குணத்தை அளிக்கும். சாப்பிட ஆரம்பித்ததுமே திணரலை நிறுத்தி ஜீரணத்தையும் அதிகரிக்கிறது. நாளடைவில் பலத்தையும் கொடுத்து ஆஸ்த்மாவை வேரோடு ஒழிக்கும்.

"ஆஸ்த்மா," திணரல் (கஷ்ட சுவாசம்) முதுகுவலி, தொண்டை கரகரப்பு, இருமல், இன்னும் இதைப்போன்ற ஈரல் சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கு "சுவாஸஹரி" ப்ளெயின் (நீலப்பெட்டி) சாப்பிடவேண்டும். அஜீரணம், வயிறு உப்பிசம் உள்ள ஆஸ்த்மா வியாதி உள்ளவர்கள் "சுவாஸஹரி" காம்பௌண்ட் (சிவப்பு பெட்டி) உபயோகிக்கவேண்டும்,

ஒவ்வொரு மருந்து கடைகளிலும் கிடைக்கும்.

3, 6, 12, அவுன்ஸ் அளவுகளில் முறையே ரூபாய் 3-6-0, 5-12-0, 10-0-0 ஆக விலை.

தயாரிப்பவர்கள் :—

புரோஹித் பார்மஸி, கோலாப்பூர்
எம். எஸ். எம்.

ஸ்டாக்கிஸ்டுகள் :— சென்னை :

1. அப்பா அண்டு கோ, சைனாபஜார்
2. அமிருத் ரத்னாகர் பார்மஸி
கோவிந்தப்ப நாயக்கன் தெரு

திருவாங்கூர் :
K.C. மாத்யூ & கோ,
கெமிஸ்ட்ஸ் &
ட்ரக்கிஸ்ட்ஸ்,
கோஷாஞ்சேரி



புரோகித்ஸ் ஸ்வாஸஹரி

திண்டுக்கல் திருமணம்

சொர்ணம்மாள்
வெங்கடாஜலபதி

சென்ற 21–6–45 தேதி திண்டுக்கல் கீழரத வீதியிலுள்ள என் கிருஹத்தில் என் சகோதரன் சிர. வெங்கடாஜலபதிக்கும், நாகல் நகர் ஸ்ரீ எம். கே. வி. சுப்பையர் அவர்கள் குமாரத்தி ஸௌ. சொர்னம்மாளுக்கும், என் சகோதரி ஸௌ. சூரியகாந்திக்கும், நாகல் நகர் ஸ்ரீ என். வி. ஜி. பால்சாமி ஐயர் அவர்கள் குமாரன் சிர. ராஜாராமுக்கும், நடைபெற்ற விவாஹ முகூர்த்தங்களின்போது பாராட்டுச் செய்திகளும், சன்மானங்களும் அனுப்பி வைத்த எண்ணிறந்த நண்பர்கள், பந்துக்கள், வியாபாரிகள் ஆகிய அனைவருக்கும் இதன் மூலம் நான் நன்றி செலுத்துவதுடன், தனித் தனியாக பதிலளிக்க இயலாமைக்காக அன்னவர்களின் மன்னிப்பைக் கோருகிறேன்.

S. P. கிருஷ்ணய்யா

Partner, Messrs.
S. V. பால்சாமி ஐயர் & பிரதர்ஸ்
நூல் வியாபாரம்
திண்டுக்கல், மதுரை & சேலம்

CIBOL சைபால்

(ரிஜிஸ்டர்டு)

முகப்பரு, சேத்துப் புண், சொறி, சிரங்கு, வேனல் கட்டி, தீப்பட்ட புண், கரப்பான் முதலியவைகளுக்கு கைகண்ட மருந்து.

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள் :

THE SOUTH INDIAN Mfg. Co., MADURA.

சென்னை நகர் & ஆந்திரா பிரதேசத்திற்கு ஏஜண்டுகள்

ராஜன் ட்ரக் ஸ்டோர்ஸ்,

155, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி. மதராஸ்

கோடை காலத்திற்குத் தகுந்த குளிர்ந்த பானங்கள்

கும்பகோணம்

டி. எஸ். ஆர்.

கம்பெனியின்

குங்குமப்பூ

நன்னாரி, ரோஸ், ஆரஞ்சு

முதலிய சர்பத்துகள்

சென்னை ஏஜண்டுகள் :

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்

திருவல்லிக்கேணி

கோவை ஸ்டாக்கிஸ்ட் :

B. பால பட்டாபி

வைசியர் தெரு :: கோவை

காசா - நூலா?

மகாத்மா காந்தி

சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் ஸ்ரீ பரதன் குமரப்பா எனக்குப் பின்வருமாறு எழுதி யிருக்கிறார்: "காந்திஜி என்ன காரியம் செய்து விட்டார் என்று ஜனங்கள் என்னைக் கேட்கிறார்கள். 'கதருக்குப் பரிவர்த்தனையாக நூல் கொடுக்க வேண்டும் என்று அவர் சொல்கிறார். இதன் மூலம் அவர் கதரைக் கொன்று விடப் போகிறார். அவரது போதனையைக் கேட்டு, கதரையே உடுத்துவதென்று பிரதிக்ஞை செய்திருக்கும் நாங்கள் என்ன செய்வது? எங்களுக்கு நூற்கத் தெரியாது; அதைக் கற்க விருப்பமும் இல்லை. நாங்கள் கதரை விட்டு விடுவதா? நூல் வேண்டும் என்ற இந்த விதி, காந்திஜியின் முரண்டுப் பிடியைத்தான் காட்டுகிறது' என்று அவர்கள் சொல்கிறார்கள்." ஸ்ரீ பரதன் குமரப்பாவின் கடிதம் இங்கிலீஷில் இருக்கிறது. அதன் சாராம்சத்தை நான் இங்கே தந்திருக்கிறேன்.

நாம் கதர் நூலை இழுக்கும் ஒவ்வோர் இழுப்பையுமே பொறுத்திருக்கிறது அஹிம்சா தர்ம சுயராஜ்யம். இதை ஜனங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அப்படி உணர்ந்து கொண்டவர்கள், என் கோரிக்கையில் எவ்வித முரண்டுப் பிடியும் இல்லையெனக் காண்பார்கள். அதற்குப் பதிலாக, என் கோரிக்கை அவர்களுக்கு மிகவும் பிடித்தமா யிருக்கும்.

'கதர் வாங்கப் பணம் மட்டில் போதாது; கொஞ்சம் நூலும் கொடுக்கவேண்டும்' என்று காந்திஜி விதி செய்துவிட்டார். இதை ஆட்சேபிப்போருக் கெல்லாம் அவர் சமாதானம் சொல்கிறார். **'கிராம உத்தியோக்'** பத்திரிகையில் வெளிவந்துள்ளது இந்தக் கட்டுரை. தமது பத்திரிகையில் வரும் கட்டுரைகளைச் **'சக்தி'**யில் வெளியிட அனுமதி அளித்துள்ள 'கிராம உத்தியோக்' ஆசிரியர் ஸ்ரீ பரதன் குமரப்பாவுக்கு நமது வந்தனம் உரியதாகும்.

என் கோரிக்கையில் முரண்டுப் பிடி ஒன்றையே காண்பவர்கள், அஹிம்சா தர்மம் எப்படி வேலை செய்கிறது என்பதை அறியாதவர்களே யாவார்கள். நமக்கு அஹிம்சா தர்மத்தின் மூலம் சுதந்தரம் கிடைக்க வேண்டுமானால், நூல் நூற்பதும் நமது முயற்சியில் ஒரு முக்கியமான பகுதியா யிருக்க வேண்டும். இதை நான் இந்தியாவுக்குத் திரும்பி வந்த நாள் முதல் தொண்டை வறளக் கத்திக் கொண்டு வருகிறேன். 'சர்க்காவே நமது கைத்துப்பாக்கி; கதிர்களே நம் தோட்டாக்கள்; இந்தத் தோட்டாக்களைக் கொண்டு தான் நாம் சுயராஜ்யத்தை அடைய வேண்டும்' என்று, காலஞ் சென்ற மௌலானா முகம்மதலி சொல்லுவது வழக்கம். அன்று அவர் சொன்ன இது, இன்றைக்கும் பொருத்தமாகவே யிருக்கிறது.

நகரங்கள், கிராமங்கள் ஆகிய சகல இடங்களிலும் கதர் பரவ வேண்டுமானால், நூலுக்குப் பரிவர்த்தனையாகவே கதர் கிடைக்கும்படி செய்ய வேண்டும். இது என் அனுபவத்தில் தோன்றிய விஷயம். இன்று ஒரு ரூபாயில், ஓர் அணு மதிப்புள்ள நூலே கேட்கிறோம். ஆனால், இது ஓர் ஆரம்பமே யாகும். ஜனங்கள் நூல் நூற்கக் கற்றுப் பழகிவிடும்போது, முற்றிலும் நூலுக்கு மாத்திரமே கதர் கொடுக்கப்படும். முற்றிலும் நூலுக்கே கதர் தரவேண்டும் என்று, நாட்கள் செல்லச் செல்ல ஒவ்வொருவரும் தாமே வற்புறுத்துவார்கள் என்று நான் நம்புகிறேன். இப்படி நடவாமல், அவர்கள் முணு முணுத்துக் கொண்டே நூலைக் கொடுப்பார்களானால், அஹிம்சா தர்மத்தின் மூலம் சுயராஜ்யம் கிடைப்பது அசாத்திய மாகும். சுயராஜ்யம் கிடைக்க, கட்டாயம் ஏதோ முயற்சி செய்து தான் ஆகவேண்டும். கேவலம் பிச்சை கேட்பதன் மூலம் அதைப்

பெறமுடியாது. துப்பாக்கியின் பலத்தால் ஒருவித சுதந்தரத்தை அடைவது சாத்தியம் தான். ஆனால், அது உண்மையான சுயராஜ்யமா யிராது. என் சம்பந்தப்பட்ட மட்டில் அதில் எனக்குச் சிரத்தையில்லை.

துப்பாக்கி மூலம் சுயராஜ்யம் அடைவது என்ற கருத்தை நினைத்தாலே, என் தலை கிறு கிறுக்கிறது; மலைபோன்ற சங்கடங்கள் என் கண் முன்னே தோன்றுகின்றன. இந்தக் கட்டுரை, துப்பாக்கி மூலம் சுயராஜ்யம் பெற விரும்புவோருக்காக எழுதப்படவில்லை. அவர்கள் ஏன் கதரை உடுத்தத்தான் வேண்டும்? அவர்கள் நோக்கி லிருந்து பார்த்தால், கதர் சிறிதும் உபயோகமற்றது என்று நிரூபித்து விடலாம். கிராமவாசிகள் கதரைத் தங்களுக்காக உற்பத்தி செய்யாமல் நகரங்களில் விற்பதற்காகவே உற்பத்தி செய்து விட்டு, கோடிக் கணக்கான தாங்கள் மட்டில் ஆலைத் துணிகளையே அணிந்து வருவார்களானல், கதரால் எவ்விதப் பயனு மில்லை. இந்தக் கட்டுரையின் வாசகர்கள் இதை உணர்ந்து கொள்ள வேண்டும். ஏழை மக்களின் ஜேபியில் ஏதோ சில செப்புக் காசுகளைப் போட்டுவிடுவதால் மட்டும், நாம் எப்படித் திருப்தி அடைய முடியும்?

"இன்று ஏழைகள் தான் கதரை உற்பத்தி செய்து வருகிறார்கள். அந்தக் கதரை இந்தப் புதிய விதி கொன்று விடக் கூடும். நகர்களில் வசிக்கும் எவரோ சிலர் மட்டுமே ஒரு கௌரவத்துக்காகக் கதர் உடுத்தி வருவார்கள்" என்ற ஒரு சந்தேகத்தைச் சிலர் கிளப்பி யிருக்கிறார்கள். இந்த அபிப்பிராயம் அறியாமையையே காட்டுகிறது.

பாமர மக்கள் ஏதோ ஒரு கௌரவத்துக்காக உணவு உண்ணவில்லை; உயிர் வாழ்வதற்காகவே உண்ணுகிறார்கள். அதே போல, உடையையும் கௌரவத்துக்காக உடுத்துவதில்லை; தங்கள் உடம்பின் பாதுகாப்புக் காகவே உடுத்துகிறார்கள். ஆகையால், ஒவ்வொரு வீட்டிலும் அடுப்பு எப்படி முக்கியமோ அவ்விதமே ஒரு சர்க்காவும் இருக்க வேண்டும்; தேக வலிவுள்ள ஒவ்வொரு நபரும் நூல் நூற்க வேண்டும். அப்போதுதான் எல்லாரும் கதர் உடுத்துவார்கள்; சுயராஜ்யமும் கிடைக்கும்.

தேக வலிவுள்ளவர்கள் தங்களுக்காக மட்டிலு மல்லாமல், நொண்டி முடங்கள், பலவீனர்களுக் காகவும் நூல் நூற்கவேண்டும். தேக சிரமப்பட்டுப் பணத்தையும் செலவிட்டு, விளையாட்டுச் சங்கங்கள் நடத்தவில்லையா? இதே போல, சுயராஜ்யச் சங்கங்கள், அதாவது சர்க்கா சங்கங்களையும் ஏன் நடத்தக் கூடாது? அந்தச் சங்கங்களில் ஜனங்கள் பஞ்சைப் பட்டைகள் போட்டு, நூல் நூற்று, நூலைக் கொடுத்துக் கதரைப் பரிவர்த்தனையாக ஏன் வாங்கக் கூடாது? உண்மை என்ன வென்றால், மனமில்லாத இடத்திலே தான் பாதகமான வாதங்க ளெல்லாம் தோன்றுகின்றன; மனமுண்டானால், அந்த மனமே சாதகமான வாதங்களை யெல்லாம் கண்டு பிடித்துக் கொள்ளும். மனது மட்டில் திடமாயிருக்கு மானல், விளையாட்டுக்களை யாரும் கைவிட மாட்டார்கள்; இதே போல், சர்க்காவையும் கைவிட மாட்டார்கள். விளையாடுவதற்கு மன உறுதி பெற முடியுமானல், சுயராஜ்யம் அடைய மன உறுதி பெறுவதும் சாத்தியமே யல்லவா?

நூலைக் கொடுத்தே கதர் வாங்க வேண்டும் என்ற பரிவர்த்தனை முறையை எதிர்த்து ஒரு பலமான வாதம் செய்யப்படுகிறது. அதாவது: "நகரஜனங்கள் தங்களுக்கு வேண்டிய நூலைத் தாங்களே நூற்றுக்கொள்வார்களானல், ஏழை மக்கள் கதர் உற்பத்தி செய்வது ஒழிந்து விடும். கதரின் மூலம் அந்த ஏழை மக்களுக்கு, இப்போது கிடைத்து வரும் அற்ப உதவியும் நின்று விடும். கிராம வாசிகள் தாங்கள் உற்பத்தி செய்த கதரைத் தாங்களே உடுத்துவார்கள் என்ற நம்பிக்கை வெறுங் கனவாகவே முடிந்துவிடும்" என்கிறார்கள்.

நகரவாசிகள் சோம்பேறித் தனத்தாலோ கோபத்தாலோ கதர் உடுத்து

வதை நிறுத்திவிடுவதாகவும், கிராம வாசிகள் கதருக்குக் கிராக்கி யில்லாததால் நூற்பதையும் நெய்வதையும் நிறுத்தி விடுவதாகவுமே வைத்துக் கொள்வோம். நாட்டுக்கு அதனால் என்ன பெரிய நஷ்டம் வந்துவிடப் போகிறது? ஏழை மக்கள் கதருக்குப் பதிலாக வேறு தொழில்களைக் கைக் கொண்டு, எப்படியோ தங்கள் ஜீவனத்தை நடத்திக் கொள்வார்கள். இப்படிப்பட்ட ஜனங்கள் கோடிக் கணக்கில் இருக்கமாட்டார்கள்; லட்சக் கணக்கில் தான் இருப்பார்கள். நூல் நூற்பவர்களைப்போல் நான்கு மடங்கும் அதற்கு மேலாகவும் கூட, பீடி சுற்றுவோர் சம்பாதிக்கிறார்கள். ஆலைத் தொழிலாளர்களில் பலர் பணக்காரர்கள் ஆகி யிருக்கிறார்கள். இதற்கு அர்த்தமென்ன? இன்று பட்டினியால் வாடுவோர், மேலும்பட்டினி கிடந்து சாகவேண்டியதுதான்; அவர்களில் நன்றாய்ச் சம்பாதித்து வரும் சிலர், மற்றவர்மீது சவாரி செய்ய வேண்டியதுதான் என்றே அர்த்தமா?

இந்தக் கோலத்தைக் கண்டு நகர ஜனங்களுக்குத் திருப்தியே என்றால், நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. அப்போது, அஹிம்சா தர்மம், சத்தியம் இவற்றின் ஆட்சி யிராது; ஹிம்சையின் ஆட்சியே இருக்கும். அப்படியானால், கதருக்கு இடமில்லை, இடம் இருக்கமுடியாது என்று நான் ஒப்புக் கொள்ளுகிறேன். அப்போது நமக்கு இஷ்டமிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரிதான், கட்டாய ராணுவப் பயிற்சி ஏற்பட்டேதீரும். ஆனால், நான் சொல்லும் விஷயம், பட்டினியால் வாடும் கோடிக் கணக்கான மக்களைப் பற்றியதாகும். அவர்கள் வாழவேண்டுமானால்-நன்றாய் வாழவேண்டுமானால்-சர்க்காவே நமது நடு நாயகமா யிருக்க வேண்டும்; நூல் நூற்கத்தேவை யில்லாதவர்களும் தாங்களாகவே நூற்க முன்வர வேண்டும். அஹிம்சா தர்ம ஆயுதங்களைக் கைக்கொள்ள விரும்புவோர், வேறு வழியில்லையே என்ற காரணத்தினால், அவைகளைக் கைக் கொள்ள லாகாது. ஆகையால், கதருக்கு நூல் கொடுக்கவேண்டும் என்ற புதிய விதி இருந்தே யாகவேண்டும்; வரவர அதிகமாகவும் அதைப் பிரயோகிக்கவேண்டும். இப்படித் தான் என் மனதுக்குத் தோன்றுகிறது.

இதே காரணத்தினால், சகல கதர்க் கடைகளையும் மூடி விட நேர்ந்து, கதர் உடுத்துவோர் சகலரும் கதரைக் கைவிட்டு விடுவார்களானாலும், அதை நான் சத்தியத்தின் ஜயம் என்றே மதிப்பேன். ஏனென்றால், அப்போது நான் "ஜனங்களுக்கு அஹிம்சையில் நம்பிக்கை யில்லை. அவர்கள் ஏன் கதர் உடுத்தினார்கள் என்றால், அறிமையால் தான் உடுத்தி வந்திருக்கிறார்கள்; கதரை உடுத்தினால், எப்படியோ சுயராஜ்யம் வந்துவிடும் என்று தங்களைத் தாங்களே அவர்கள் ஏமாற்றிக் கொண் டிருந்திருக்கிறார்கள்" என்று அறிந்து கொள்வேன். இப்படி உடுத்தும் கதர் சுயராஜ்யத்தைக் கொண்டு வராது என்றும், சுயராஜ்யம் வந்ததும் இந்தக் கதரை ஜனங்கள் கைவிட்டு விடுவார்கள் என்றும், நான் அறிவேன். அப்படி யிருக்க, ஜனங்கள் தங்களை இப்படி ஏமாற்றிக் கொள்ள, நான் இடம் கொடுக்கக் கூடாது. இடம் கொடுத்தால், காலஞ் சென்ற சிந்தாமணி சொன்ன தீர்க்கதரிசனம் தான் நிறைவேறும்.

நூறு பேரா?

ஜெர்மனியில் பிறந்த ஐன்ஸ்டீன் என்ற சயின்ஸ்நிபுணரின் 'ரெலட்டிவிட்டி' (பரஸ்பரக் கவர்ச்சி) என்ற தத்துவம் உலகெங்கும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால், அவர் ஒரு யூதர். ஆகையால், நாஜிகளுக்கு அவரைப்பிடிக்காது. நூறு ஜெர்மன் நிபுணர்கள் அவர் தத்துவத்தைத் தவறு என்று மறுத்தார்கள். அவரை ஒருவர் இதைப் பற்றிக் கேட்டார். "என் தத்துவம் தவறு என்றால், அதை மறுக்க நூறு பேர் தேவையில்லை. ஒரே ஒரு புரொபஸர் போதுமே" என்று அவர் பதில் அளித்தார்.

"காந்தி இறந்ததும், ஜனங்கள் கதரைக் கேலி செய்து நகைப்பார்கள்; அவரையும் கேலி செய்து நகைப்பார்கள். தங்கள் வீடுகளிலுள்ள சர்க்காக்களை யெல்லாமே ஜதையாக அடுக்கி அவர் உடம்பை அதன் மீது வைத்துக் கொளுத்தி விடுவார்கள்" என்றே அவர் சொன்னார்.

கையால் நூற்ற நூல் அஹிம்சையின் சின்னமாகும். அப்படி அது விளங்கவில்லை யென்றால், நான் இன்னும் உயிரோடிருக்கும் போதே என் பிழையைத் திருத்திக்கொண்டு, சர்க்காக்களில் முடங்கிக் கிடக்கும் மரத்தை யெல்லாம் ஏன் மிச்சப் படுத்தலாகாது? ஆனல், சிந்தாமணியின் தீர்க்க தரிசனம் உண்மையாகும் என நான் நினைக்கவில்லை. இந்தியாவின் கோடிக் கணக்கான மக்கள், ஹிம்சையின் மூலம் சுயராஜ்யம் அடைய முடியாது என்று, ஜனங்கள் அறிந்து கொண்டு விட்டார்கள். உலகத்திலே இந்தியா ஓர் உன்னத ஸ்தானம் வகிக்கிறது, அல்லது வெகு சீக்கிரத்திலே வகிக்கப் போகிறது. அது அஹிம்சா தர்மத்தின் மூலமே சாத்தியமாகும். அஹிம்சா தர்மம் காரிய சாத்தியமே என்பதைக் கோடிக்கணக்கான நம் மக்கள் நிரூபிக்க வேண்டுமானல், சர்க்காவை நடு நாயகமாய்ச் செய்து கொள்வதன் மூலமே அது முடியும். சுதந்தர ஆர்வம் நகர மக்களிடம் பலமாயிருப்பதால், இதை உணர்ந்து கொள்ளுவது அவர்களின் கடமையாகும்: அஹிம்சா தர்ம சுயராஜ்யம் அடைய வேண்டுமானல், அவர்கள் நூல் நூற்கவேண்டும்; கதர் உடுத்த வேண்டும்.

✲

குற்றவாளிகள் நாடு எது?

நம் தேசத்தில் தீவாந்தர சிட்சை விதிக்கும் குற்றவாளிகளை அந்தமானுக்கு அனுப்பி வந்தார்கள் அல்லவா? இதே மாதிரிதான், ஆதி காலத்தில், இங்கிலாந்தில் தீவாந்தரசிட்சை விதித்த குற்றவாளிகளை ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பிவந்தார்கள். காலக்கிரமத்தில் அங்கே ஜனத்தொகை பெருகிவிட்டது. பிறகுதான், ஆஸ்திரேலியா ஒரு குடியேற்ற நாடாயிற்று. சாதாரண ஆங்கிலேயர்களும் அங்கே குடியேறத் தொடங்கினர்கள்.

ஒரு சமயம் ஓர் ஆங்கிலேய வாலிபன், தொழில் புரிவதற்காக ஆஸ்திரேலியாவுக்குப் போக விரும்பினன். அவன் தாய் "ஐயையோ! இதென்ன இது! குற்றவாளிகள் அனுப்பப்படும் நாட்டுக்குப் போகிறேன் என்கிருயே!" என்று ஆட்சேபித்தாள். வாலிபன் கேட்கவில்லை; போய்விட்டான்.

வாலிபன் ஆஸ்திரேலியாவில் ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டு, அங்கேயே நிரந்தரமாய் வசிக்கத் தொடங்கினன். கொஞ்ச காலத்துக்கெல்லாம் தாய் தன் மகனைப் பார்க்க ஆஸ்திரேலியாவுக்குச் சென்ருள். சில மாதம் தங்கினள். பிறகு, இங்கிலாந்துக்கு ஒரு முறை வந்து விட்டுப்போகும்படி மகனை அழைத்தாள்.

"ஐயையோ! இதென்ன இது! குற்றவாளிகளை அனுப்பும் நாட்டுக்கு என்னைக் கூப்பிடுகிருயே! நான் வரமாட்டேன்" என்று மறுத்துவிட்டான் மகன்.

விடுதலை

தீ வைத்துக் கொள்ளையடித்த குற்றத்துக்காகச் சிக்காகோ நகரில் சிறைப்பட்டிருந்த ஒரு கைதி, ஒரு துடைப்பத்தை கையில் எடுத்துக் கொண்டான். பெருக்கிக்கொண்டே, காவலரைக் கடந்தான்; கூடத்தைக் கடந்தான்; கதவைக் கடந்தான்; வெளியே போனன். போயே போய் விட்டான்!

பணமே....!

திரு. ஜ. ர.

'பணமே, உன்னால் என்ன குணமே' என்று, பரம உற்சாகத்துடன் பாடினார் ஒரு கனவான்.

"பாங்கியிலே போன மாதம் வரை மிச்சப்படுத்திய பணமும், கஜானாவிலே அடுத்த மாசம் வாங்கப்போகிற சம்பளப் பணமும் பத்திரமா யிருக்குமானால், நானும் திண்ணையிலே உட்கார்ந்து அவருக்குமேல் பாடுவேன். அவர் ஏன் பாடமாட்டார்?" என்றார் மற்றொரு நண்பர்.

'பணமே, உன்னால் என்ன குணமே'—இந்தப் பாட்டின் கருத்து வாஸ்தவமா? அல்லது 'பணம் லட்சுமி' என்பது வாஸ்தவமா? இரண்டும் வாஸ்தவம் இல்லாம லிருக்கலாம். ஆனால், ஒன்று மட்டில் அனுபவ சித்தம். அதாவது 'பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்.' வேதாந்தமாய்ப் பேசும் நண்பர்கள் 'மூன்று நிலைமைகளில் மூன்றும் உண்மை' யென்பார்கள். வேதாந்தம் பெரியோர் விஷயம். தற்போது சமூகம் உள்ளநிலைமையில், 'பணமே, உன்னால் என்ன குணமே' என்பது உருப்படாமற் போக வழி காட்டும் சூத்திரமாகும்.

நேற்று தினம் உங்கள் ஜேபியிலே பத்து ரூபா யிருந்தது. நண்பர்களெல்லாம் உங்களோடு பரம சல்லாபம் செய்தார்கள்; புதிய நண்பர்கள் கூடச் சிருஷ்டியானார்கள். இன்று ஜேபி சூன்யம். நண்பர்களைத் தேடிக் கொண் டிருக்கிறீர்கள். இன்னும் அகப்படவில்லை அல்லவா? ஜேபி கனத்தவர் பெரிய மனிதர்—இதுதான் தற்காலம் கண் கண்ட பிரமாணம்.

ஆனால், இந்தப் பணம் யாரிடம் சேர்கிறது? அந்த ரகஸ்யத்தை அறிந்த நிபுணர்களிடம் தான் சேர்கிறது என்று ஒரு நண்பர் சொல்லக் கேட்டிருக்கிறேன். நான் பார்த்த வரையில், இந்த நிபுணர்கள் ஒரே விதமா யில்லை; அவர்கள் கையாளும் ரகஸ்யமும் ஒரேவிதமா யில்லை; பலனும் ஒரேவிதமா யில்லை. "கடன் வாங்கியோ, வழிபறி செய்தோ தடபுடலாய்ப் பணத்தைச் செலவழித்துக் கொண்டே யிருப்பவர்களிடம் தான் பணம் மேலும் மேலும் சேர்கிறது; ஆகையால், பணம் சேர்க்க அதுவே ரகஸ்யம்" என்று ஒரு கோஷ்டியாரின் அபிப்பிராயம். இந்தத் தந்திரத்தைக் கையாளுவோர் சிலரிடம் பணம் ஏராளமாய்ச் சேர்வதை நானே கண்டிருக்கிறேன். என்றாலும், இதே தந்திரத்தைக் கடைப் பிடிக்கும் மற்றும் சிலரிடம் சதா காலமும் வறட்சியா யிருப்பதையும் நான் பார்த்திருக்கிறேன். "வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி, குழந்தை குட்டிகளைக் கூட அவசியம் நேர்ந்த காலத்தில் பட்டினி போட்டு, தம்படி தம்படியாய்க் கணக்கிட்டுப் பணத்தைப் பதுக்கிப் பதுக்கி வைத்துக் காக்கும் புருஷோத்தமர்களிடமே பணம் சேரும்" என்று சொல்லும் கோஷ்டியாரு முண்டு. இந்தத் தந்திரத்தைக் கடைப் பிடிப்போரிலும் இரண்டு வகைக ளிருப்பதை நான் கண்டிருக்கிறேன். ஒரு சாராரிடம் பணம் சேர்கிறது; மற்றவரிடம் தரித்திரம் தான் விடாமல் பற்றிக் கொண்டிருக்கிறது. ஆகையால், ரகஸ்யம் மனிதர்களிடம் இல்லை; பணத்துக்குள்ளே தான் இருக்கிறது என்றே எனக்குத் தோன்றுகிறது.

பணத்தில் அப்படி என்ன இருக்கிறது? எத்தனை எத்தனையோ சக்திகளும் உண்மைகளும் பணத்தில்

பணம் என்றால் என்ன? 'ஓ! அது எல்லாருக்கும் தெரியுமே!' என்று பதில் சொல்லி விட்லாம். 'பணம் என்பது பரந்தாமனின் மற்றொரு பெயர்' என்று நினைப்போரும் இருக்கிறார்கள். உண்மையிலே, பணம் ஒரு விசித்திரமான பிறவி. விபரீதமான வேலைகள் செய்யக்கூடியது. ஆனால், இது ஒரு பொருளாதாரக் கட்டுரையல்ல. நண்பர்கள் படிக்கப் பயப்படவேண்டாம்.

அடக்கமா யிருக்கின்றன. பணத்தில் சரித்திரம் இருக்கிறது; சாஸ்திரம் இருக்கிறது; தர்மாதர்மம், நட்பு, மனோதத்துவம் முதலிய எத்தனையோ சங்கதிகள் பணத்தில் அடக்கம்; அல்லது பணத்துக்கு அடிமை. பணத்திலே இவையெல்லாம் இருக்கலாமா கூடாதா என்பது வேறு சங்கதி. உள்ள விஷயம் என்ன? இன்று பணத்தில் இவையெல்லாம் இருக்கத் தான் இருக்கின்றன.

அர்த்த சாஸ்திரம் ஒரு முக்கிய சாஸ்திர மல்லவா? சந்திரகுப்தன் முதலிய மன்னர்களின் முகரிட்ட நாணயங்கள் வழங்கிய நாட்டிலே, ஆறுயிரம் மைலுக் கப்பாலுள்ள ஒரு வெள்ளைக்கார ராஜாவின் தலை போட்டு வழங்கிவரும் ரூபாயில் சரித்திரம் இல்லையா? நமது முக்கால் வாசி தர்மாதர்மப் பேச்செல்லாம் பணத்தைப்பற்றித் தானே? ஆனல், பணத்திலே மனோதத்துவம் எங்கே யிருக்கிறது என்று கேட்கிறீர்களா? மனித மனோதத்துவம் பணத்தில் இல்லாமல் போனல், பணம் என்பதே இருக்காது; 'பணமே, உன்னல் என்ன குணமே' என்ற பாட்டைப் பாடி பஜனை செய்வதில், இந்நேரம் நீங்களும் நானும் சேர்ந்து ஈடுபட்டுக் கோஷித்துக்கொண் டிருக்கலாம். பணத்தில் மனோவசிய மிருக்கிறது. அதனல் தான் பணம் பணமா யிருக்கிறது.

நான் மிகச் சிறு குழந்தையா யிருந்த காலத்தில் நடந்த ஒரு சம்பவத்தை என் சின்னம்மா அடிக்கடி கூறுவது வழக்கம். 'ஓடுகிற பாம்பைப் பிடிக்கிற காலம்' என்பார்க ளல்லவா? அந்தக் காரியத்தை நான் உண்மையிலேயே ஒரு நாள் செய்துவிட்டேனும்.

இப்போதென்ருல் செத்த பாம்பைக் கண்டால்கூட ஓடுகிற காலம். அப்போது எனக்கு இரண்டு அல்லது மூன்று வயதுதான் இருக்குமாம். என்ன தெரியும்? ஏதோ ஒரு குட்டிப் பாம்பு ஓடியிருக்கிறது. அதன் தலையைப் பிடித்து தூக்கிவிட்டேன். பாம்பின் தலை என் கைக்குள் இருக்கிறது; உடம்பு தொங்கலாடுகிறது. நம் பெரியவர்களைப் பற்றிக் கேட்கவேண்டுமா? குழந்தையின் உயிரைக் காப்பாற்றுவதில் அவர்களுக்கு மிகுந்த கவலை ஏற்பட்டது. ஆனலும், அவரவருடைய உயிரைப் பத்திரம் செய்து விட்டல்லவா குழந்தையிடம் வரவேண்டும்? என்னைச் சூழ இரண்டு கஜ தூரத்துக் கப்பால் பலரும் நின்று கொண்டார்கள்.

"இந்தா மிட்டாய்."

"இந்தா சீடை."

"அதைப் போட்டுவிட்டு வா."

இப்படி ஆளுக்கொன்று கூறி, என்னென்னவோ 'ஜாலம்' செய்து பார்த்தார்கள். நான் மசிய வில்லையாம். பாம்பைப் பிடித்த வண்ணமே ஓடுவேன். அவர்களும் ஓட்டம் பிடித்து விடுவார்கள். இவ்வாருக வெகு நேரம் சென்று விட்டது. குழந்தை பிழைக்கிறதா போகிறதா என்பது அவர்களுக்கு நிச்சயப்பட வில்லை. கடைசியாக ஒரு நண்பர் வந்து சேர்ந்தார். அவர் ஒரு தந்திரம் செய்தார். நாலு காலணக் காசுகளை எடுத்து, 'கல, கல' என்று சத்தம் செய்து, என்னிடம் சுண்டி வீசினர். நான் பாம்பை விட்டெறிந்து விட்டு, ஓட்டமாய் ஓடி, அந்தக் காசுகளைப் பொறுக்கிக் கொண்டேனும். காசு என்ருல், சிறு குழந்தைகளுக்குக்கூட அவ்வளவு ஆசை! 'காக்கை உட்கார்ந்ததும் பனம்பழம் விழுந்தது' மா யிருக்கிறது இந்த நியாயம் என்பீர்கள். சரி, இதைத் தள்ளிவிடுங்கள். பணத்துக்கு ஒரு மனோவசிய சக்தி இருக்கிறது என்பதற்கு வேறு சில பிரமாணங்களும் காட்டுகிறேன்.

முதலில் நமது ரூபாயை எடுத்துக் கொள்ளுவோம். அதில் எவ்வளவு வெள்ளி இருக்கிறது? சற்றேறக் குறையக் கால்ரூபாய் மதிப்பு வெள்ளி தானே இருக்கிறது? கால் ரூபாய் வெள்ளியில் ஒரு தலையையும் பூவையும் போட்டால், அது எப்படி ஒரு ரூபாய் மதிப்புடைய தாகிறது? சர்க்கார் சட்டம் என்கிறீர்களா? கால் ரூபாய் வெள்ளி ஒரு ரூபாயாக

வழங்க வேண்டும் என்று சட்டம் எதுவும் இல்லை. "நாணயம் வேறே, வெள்ளி வேறே. நாணயத்தின் மதிப்பை நிர்ணயிப்பது, அதன் அளவும் புழக்கமும் கைத்தொழிலும் வர்த்தகமும் பரிவர்த்தனையும்" என்று பொருளாதார சாஸ்திரிகள் சொல்லுவார்கள். ஆனல், இன்னென்றும் இருக்கிறது. அது தான் ஜனங்களின் நம்பிக்கை.

தற்போது நமது நாணயமான ரூபாய் பிரிட்டிஷ் ஸ்டர்லிங்குடன் பிணைக்கப் பட்டிருக்கிறது. அதாவது இந்திய சர்க்கார், ஒரு ரூபாய்க்கு 16 பென்ஸ் பரிவர்த்தனை விகிதம் என்று சட்டம் செய்து வைத்திருக்கிருர்கள். 12 பென்ஸ் ஒரு ஷில்லிங்; 20 ஷில்லிங் ஒரு ஸ்டர்லிங். ஆகவே, நம் ரூபாய்களுக்கு வெளி உலகத்தில் ஸ்டர்லிங்குகளாகக் கொடுக்க, நமது சர்க்கார் உத்திரவாதம். ஆனல், அந்த 'ஸ்டர்லிங்' என்பது என்ன? அதை விசாரியுங்கள். அது பிரிட்டிஷ் நாணயம். நாணயம் என்றல் பவுன, வெள்ளியா, தங்கமா? அதொன்றுமில்லை. 'ஸ்டர்லிங்' என்றல், 'ஸ்டர்லிங்'-அவ்வளவுதான். அது பிரிட்டிஷ் பாங்கியின் நோட்டு. சட்டப்படி அதற்கு எவ்வித மதிப்பும் கிடையாது. பிரிட்டிஷ் வியாபாரம், ஜனங்களின் நம்பிக்கை, சர்க்கார் சட்டம், பாங்கியின் நடவடிக்கைகள் ஆகிய இவற்றைக் கொண்டு, அந்த ஸ்டர்லிங் உயிர் வாழ்கிறது; ஒரு மதிப்பையும் பெற்றிருக்கிறது. சாதாரணப் பார்வைக்கு இதெல்லாம் ஆச்சர்யமா யிருக்கிறது, அல்லவா?

பணம் ஒரு மாயாவி; விசித்திரப் 'பிராணி'. பணத்தைப்பற்றி எத்தனையோ நிபுணர்கள் எத்தனையோ நூல்கள் எழுதிவிட்டார்கள்; இன்னும் எழுதி வருகிருர்கள். பணத்தைப் பற்றி எத்தனையோ சித்தாந்தங்கள் தோன்றி மடிந்துவிட்டன; அல்லது திரிந்து வருகின்றன. பணத்தைப் பற்றிய பல விஷயங்களில் நிபுணர்களுக்குள்ளேயே பல பலத்த அபிப்பிராய வேற்றுமைகள் இன்னும் இருந்துவருகின்றன. 'பண்டிதர்களுக்குள்ளே அபிப்பிராய வேற்றுமை ஏற்பட்டால், மாணுக்கர் பாடு கொண்டாட்டம் தான்' என்பது ஆங்கிலப் பழமொழி. கொண்டாட்டமோ திண்டாட்டமோ, பணம் நமது வாழ்வையே சூழ்ந்து கொண்டிருக்கும் போது, அதன் இரகசியங்கள் சிலவற்றை நாம் அறிந்துகொள்ள வேண்டாமா?

ஒரு புதிய பணக்காரரைப் பழைய நண்பர் ஒருவர் பார்க்க வந்தாராம். நண்பருக்குப் பணக்காரர், தம்முடைய மாளிகையின் பற்பல அபூர்வங்களையும் காட்டினர். "இந்த அறையைச் சலவைக்கல் தளவரிசை செய்ய, ஐயாயிர ரூபாய் ஆயிற்று; அந்தத் தூண் மட்டில் முன்னூற்று இருபத்தி யேழே முக்கால் ரூபாய் ஆயிற்று. தொழுவத்தில் அறுபத்தைந்து கறவை மாடுகள் வாங்கிக் கட்டியிருக்கிறேன்" என்றெல்லாம் சொல்லிக்கொண்டே வந்தார். நண்பர் எதைக் கண்டும் ஆச்சர்யப்படவில்லை. கடைசியில், பணக்காரர் தம் வீட்டு வாசலிலே யிருந்த ஒரு மகிழ மரத்தைக் காட்டினர். "இது அதோ அந்த மலைமேலே இருந்தது. பெரிய மரமாகவே யிருந்தது. அப்படியே பெயர்த்து இங்கே கொணர்ந்து நட்டு விட்டேன்" என்றுர். நண்பர் இதற்கும் ஆச்சர்யப்படவில்லை. "கடவுளுக்குமட்டும் பணம் இருந்தால், அவர் எதையும் செய்ய வல்லவர் என்பதை இது நன்ருய்க் காட்டுகிறது" என்ருராம்!

கடவுள் செய்யவேண்டிய பல காரியங்களை இந்தக் காலத்தில் பணமே செய்துவிடுகிறது என்பது உண்மை. என்ருலும், அதைக் கடவுள் படைக்கவில்லை. பணத்தை மனிதன் தான் படைத்தான். இயற்கையை விட்டுப் புறப்பட்டு, மனிதன் இயற்றி வரும் நாகரிக யாத்திரையிலே பிறந்த சாதனங்களுள் ஒன்று பணம். வேறு பல சாதனங்களைப் போலவே இன்று பணமும் துஷ்பிரயோசனம் செய்யப்பட்டு வருகிறது. அபேதவாதிகள் பணம் என்ற சாதனமே தேவையில்லாத சமூகத்தைப் படைக்க விரும்புகிருர்கள். அந்தச் சமூகம் வருகிற போது வரட்டும். அதுவரையில், பணம் துஷ்பிரயோசன மாவதால்

உள்ள தீமைகளை ஒழிக்கவோ குறைக்கவோ மார்க்க மில்லையா?

பணம் என்பது என்ன? பொருளாதார சாஸ்திரிகள் கூறும் ஒரு சுருக்கமான விவரணம் உண்டு. நாணயம் என்பது, பண்டங்களையும் வேலையையும் வாங்கக்கூடிய சாதனமே யாகும். உழைப்புக்கு ஊதியம் உண்டு. உழைப்பின் மதிப்பை அளவிடுவதற்கே பணத்தைப் பொதுவாகப் பயன் படுத்துகிறோம்; பயன் படுத்த வேண்டும். ஆனால், இந்நாளில் பல சந்தர்ப்பங்களில், உழைப்பின் மதிப்பைக் குலைக்க வந்த பிசாசைப் போல் உபயோகமாகிறது பணம். பல சமயங்களில், பல இடங்களில், காலை முதல் மாலை வரையில், உழைத்து உழைத்து உடல் வாடுபவன் அரைப்பட்டினி கிடப்பதையும், மேனி நலுங்காமல் சோம்பி உட்கார்ந்திருப்பவன் சுகபோகம் துய்ப்பதையும் நாம் காண்கிறோம். இது இயற்கையின் நியதியா? ஆண்டவன் திருவுள்ளமா? அல்ல, அல்ல. சொத்தும், பணமும் துஷ்பிரயோசனமாவதே இதன் காரணம்.

உழைப்பை மதிப்பிடும் துலாக்கோலே பணம் என்ற சித்தாந்தம் நம் தர்மம், சட்டம், சம்பிரதாயம் ஆகிய சகல ஒழுக்க முறைகளிலும் ஊறிப்போக வேண்டும்; அப்போது தான், பணம் சீர்படும். எத்தனை அர்த்த சாஸ்திரங்கள் எழுதினாலும் அந்தப் பலன் ஏற்படாது.

பணத்தின் லீலை

வணக்கமும் அமரிக்கையும் உள்ள பிராம்மணன் ஒருவன் தட்சிணேசுவரத்துக்கு அடிக்கடி வருவதுண்டு. கொஞ்ச நாள்களுக்குப் பின் அவன் வரவேயில்லை. அவனுக்கு என்ன நேர்ந்ததென்பதும் எங்களுக்குத் தெரியவில்லை. ஒருநாள் நாங்கள் பொன்னகருக்குப் படகு மார்க்கமாகச் சென்றோம். படகிலிருந்து கீழே இறங்கும்போது, அந்தப் பிராம்மணன், பிரபுக்களைப்போல், கங்கைக் கரையில் உட்கார்ந்துகொண்டு காற்று வாங்குவதைக் கண்டோம். அவன் என்னைக் கண்டதும், "என்ன சுவாமி, சௌக்கியமா?" என்று கம்பீரத் தொனியுடன் கேட்டான். அவனது குரலில் இருந்த மாறுபாட்டைக் கவனித்ததும், நான் இருதயனிடம் "இவனுக்கு ஏதோ கொஞ்சம் பணம் கிடைத்திருக்கிறது போலிருக்கிறது. என்ன மாறுதல் உண்டாகி இருக்கிறது, பார்த்தாயா!" என்றேன். இருதயன் விலாவலிக்கச் சிரித்தான்

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

அதிசயம்! அதிசயம்!

முதல் முதலாக நான் ரேடியோவைக் கண்டபோது, ஒரு சந்தோஷம் அனுபவித்தேன். ஒரு ஞாயிற்றுக்கிழமை. காலை நேரம். நான் விருந்தாளியாய்ச் சென்றிருந்த வீட்டுக்காரர், ஒரு பெட்டியின் ஏதோ சில குமிழிகளைத் திருகினர். உடனே, ஒரு பாதிரியாரின் பிரசங்கம் கூடத்தில் வந்து ஒலிக்கத் தொடங்கியது. மந்திரத்தால் கட்டுண்டதுபோல் வியப்புடன் பிரசங்கத்தைக் கேட்டேன். சற்று நேரத்தில், பிரசங்கம் சலிப்புத் தட்டிவிட்டது. சோர்ந்து தலை குனிந்தேன்.

சட்டென்று ஒரு யுக்தி தோன்றியது. வீட்டுக்காரரைப் பார்த்து, "இதை நாம் நிறுத்த முடியாதோ?" என்று கேட்டேன். அவர் "ஆஹா!" என்று சொல்லி, ஒரு குமிழியைத் திருகி, பாதிரியை அமுக்கி விட்டார். என்ன அதிசயம்! நினைத்தால் ஒரு பாதிரியின் பிரசங்கத்தைத் தக் கிளட்பிவிடலாம். இது ஓர் அதிசயம்! நினைத்தால், அந்தப் பிரசங்கத்தை ஓய்ச்செய்து விடலாம். இது அதையும் விட அதிசயம்! ஆஹா! ஒரு புதிய சகாப்தம் தோன்றிவிட்டது என்று நான் தட்சணமே கண்டு கொண்டேன்.

—மார்ட்டின் ஆர்ம்ஸ்டிராங்,

பாதுகாப்புக்கு

Godrej

கோத்ரெஜ்

கோத்ரெஜ் பாதுகாப்புப் பொருட்களை வாங்கி, உங்கள் விலையுயர்ந்த சாதனங்களை பத்திரமாக வைத்திருங்கள். இதர தயாரிப்புகளில் கிடைக்காத **விசேஷ பாதுகாப்பம்சங்களை**, கோத்ரெஜ் இணைப்பற்ற பேழைகள், பணப் பெட்டிகள், கஜானாப் பெட்டிகள், காபினட்டுகள், அலமாரிகள், பூட்டுகள் முதலியவை உங்களுக்கு அளிக்கின்றன. நம்தேசத்தின் ஐசுவரியத்தின் பெரும்பாகத்திற்கு காவலனாக இருக்கும் பெருமை கோத்ரெஜுக்கு உண்டு. விரிந்த நம் நாடெங்கும் சர்க்கார்களும், பாங்கிகளும், வர்த்தக ஸ்தாபனங்களும், பொது மக்களும் தங்கள் செல்வங்களைப் பாதுகாப்பதற்கு கோத்ரெஜையே நம்பியிருக்கின்றனர்.



16 மூலை வளைவு இணைப்பற்ற பேழை

6 பேடன்ட் காற்றுக் கட்வாத அலமாரி



பேடன்ட் பால் - ஸ்லைட் பைலிங் காபினட்



ஷெல்விங் ராக் தட்டுகளும் சிறிய அறைகளும் கூடியது

கோத்ரெஜ் அண்ட் பாய்ஸ் மான்யுபாக்சரிங் கோ., லிமிடெட்

பம்பாய் ✲ கல்கத்தா ✲ சென்னை ✲ டெல்லி ✲ கான்பூர்

ஹைதராபாத் (டெக்கான்) ✲ நாடு முழுதும் ஏஜன்ஸிகள்

இந்தியாவின் இயந்திர சகாப்தத்தின் ஆரம்பகர்த்தாக்கள்

உங்கள் சரும ஆரோக்கியத்தையும் அழகையும் பாதுகாக்க, தாவர எண்ணைகளால் செய்யப்பட்ட

Godrej

கோத்ரெஜ் ஸ்நான சோப்புகளையே உபயோகியுங்கள்.

புத்தகங்கள்

புதிய சீனு: வெ. சாமிநாத சர்மா 6 8

அன்பையும் அறத்தையுமே லட்சியங்களாகக் கொண்டு, புத்தர் பிரானின் போதனைகளை நடைமுறையில் கடைப்பிடித்து ஒழுகியவர்கள் சீனர்கள். அத்தகையவர்கள் இன்று வீழ்ச்சியுற்றிருப்பதற்குக் காரணம் என்ன? அதன் எதிர்காலம் எவ்வாறிருக்கும்? சீனுவின் ஆரம்பகால சரித்திரத்திலிருந்து, புதிய சீனுவின் தோற்றம்வரை எல்லா விபரங்களும் இந்நூலில் அடங்கி யிருக்கின்றன.

பிளேட்டோவின் அரசியல்: வெ. சாமிநாத சர்மா 6 0

இதில் அரசியலின் ஒவ்வொரு பிரிவும் வெகுதெளிவாக சம்பாஷணை மூலம் விளக்கப்பட்டிருக்கிறது. தேசத்துக்கும் மக்களுக்குமுள்ள தொடர்பு; எந்த மாதிரியான மக்களுக்கு எத்தகைய அரசியல் இருக்கவேண்டும்? நீதி வழங்குதல் என்றால் என்ன? என்பன போன்ற விஷயங்களை பிளேட்டோ தெளிவாக விளக்கியிருக்கிறார்.

மானிட ஜாதியின் சுதந்திரம்: இங்கர்ஸால் 1 0

அறியாமையை ஒழித்து மனித சமூகத்தை அடிமைத் தனத்திலிருந்து மீட்க அரும்பாடு பட்டவர் இங்கர்ஸால். அவருடைய விறுவிறுப்பான பிரசங்கங்களில் ஒன்றே இப்புத்தகம்.

சூரிய நமஸ்காரம்: டி. வி. திருவேதி 1 0

சூரிய நமஸ்கார முறைகளையும், மந்திரங்களையும் சித்திர விளக்கங்களோடு இந்நூல் விவரிக்கிறது.

பாரதியார் சரித்திரம்: செல்லம்மா பாரதி 2 0

மகாகவி பாரதியாரின் சரிதத்தை அவர் மனைவியார் செல்லம்மா பாரதியும், மகள் தங்கம்மா பாரதியும் எழுதியது. புதுக்கிய இரண்டாம் பதிப்பு படங்களுடன்.

மாணவருக்கு: காந்திஜி 6 0

மாணவருக்கென காந்தியடிகள் அவ்வப்பொழுது எழுதியதும், பேசியதும். அ. லெ. நடராஜன், வெ. ராமசாமி தமிழாக்கியது. திருத்திய இரண்டாம் பதிப்பு. கையால் செய்த காகிதத்தில் அச்சிடப் பெறுகிறது.

[தபால் செலவு தனி]

சக்தி காரியாலயம்

சென்னை : மதுரை : கோயமுத்தூர்

பலனுக்கு வழி

கொத்தமங்கலம் சுப்பு

பொய்யும் பெரட்டும் பேசாமப் போய்ப்
புளுதி பெரட்டு, மச்சானே ;
பொன்னு வெளையும் புஞ்சையிலே
பொட்டுத் தொவரை போடலாம்.

களவுந்திருட்டும் செய்யாமப் போய்க்
கரம்பையை உழு, மச்சானே ;
கண்டாங்கிக்கும் பருத்தி கண்டு
காளியம்மைக்கும் சாத்தலாம்.

வம்புந் தும்பும் பேசாமப் போய்
வயலே உழுது போட்டுட்டா,
கம்பும் வரகுந் தூவி வச்சுக்
கஞ்சி காச்சிக் குடிக்கலாம்.

கள்ளுங்குடியும் இல்லாமப் போய்க்
கொல்லையை உழு, மச்சானே ;
எள்ளும் விதைச்சு, வெள்ளிக்கிளமை
எண்ணெய் தேச்சு முளுகலாம்.

சக்திவேல்

அகிலன்

குடை கவிழ்த்தாற் போல் பம்பவிட்டு வளர்ந்திருக்கிறதே அந்தப் பிரம் மாண்டமான பழைய காலத்து ஆல மரத்தடியில்தான், நாலு மூலைச் சதுரமான செம்பூராங்கல் மேடைமீது கம்பீரமாக நிற்கிறது சக்திவேல். வேலுக்கு அருகே, மண்ணால் செய்யப் பட்டுக் கரிப்புகை சூழ்ந்து கிடக்கும் ஒரு விளக்கு மாடம். மாடத்துக்கு அப் பால் சாம்பிராணித் தூபம் போடு வதற்காகப் பெரிய இரும்புக் கொப் பரை. அந்தக் கொப்பரைக்கு நேர் உயரே, சற்று ஒதுப்புறமாக ஒரு வெண்கல மணி. ஆல மரத்தின் முரட்டுக் கிளை யொன்றிலிருந்து பித் தளைச் சங்கிலியின் உதவியால் அந்த மணி தொங்கிக் கொண்டிருக்கிறது.

சக்திவேல் கோவிலில் வருஷம் ஒரு முறை திருவிழா. பக்கத்துக் கிராமங் களிலிருந்து ஏராளமான ஜனங்கள் வந்து சாமிக்குப் பால் பொங்கலிட் டுக் கொண்டாடுவார்கள். அந்தத் திருவிழாத்தான் இன்றைக்கும்.

இன்று காலை திருவிழாக் கூட்டத் தில் யாரோ ஒரு பெண்ணை, சரவண முத்து கண்டான். சரவணமுத்து சபல சித்தம் படைத்தவன் அல்ல. எத்தனையோ பெண்களை அவன் கண் டிருக்கிறான். எவளையும் கணத்தில் மறந்துவிடுவதுதான் அவன் சுபாவம். ஆனால், இவளை மட்டில், அவ்வளவு சுலபமாய் அவனால் மறக்க முடிய வில்லை. "சீ! இதென்ன மூடத் தனம்!" என்று தனக்குத்தானே பல முறை சொல்லிக்கொண்டான்; சிரித் துக்கொண்டான். அங்கும் இங்கும் அலைந்து தன் அலுவல்களைச் செய்து கொண்டிருந்தான். ஆனால், அவன் மனதுதான் அவளை மறக்க முயன்று கொண்டிருந்தது; கண்கள் மட்டில், அவளை மறுமுறை சந்திக்கமாட் டோமா என்று ஆவல் கொண்டிருந் தன. எவளைக் கண்டாலும், அவளா யிருக்குமோ என்று முகத்தை ஏறிட் டுப் பார்ப்பான். வேறு யிருக்கக் கண்டு, சட்டென்று வேறுபுறம் திரும் பிக் கொள்வான். "சீ! என்ன முட் டாள்தனம்?" என்று மறுபடியும் சொல்லிக்கொள்வான்.

இரவு பத்துமணிக்கு மேல், கோவி லுக் கெதிரே, ஒரு மணல் பொட்ட லில், ஒரு கருங்கல் மீது, ஆயாசம் தீர உட்கார்ந்திருந்தான். அவன் மனம் நிலைகொள்ளாமல், ஏக்கம் நிறைந்திருந்தது. கிராமாந்தரப் பெண் கள் நிலாப்பாட்டுப் பாடிக் கொண்டே, கும்பல் கும்பலாய்க் கும்மியடித்துக் கொண்டிருந்தார்கள்:

பட்டப்பகல் போலே—நிலவொளி
பாய்ந்து வருகையிலே
வெட்ட வெளிதனிலே—நினையே
வேண்டினேம் வேலவனே!

ஆரம்பத்தில் இந்தப் பாட்டை ஒரு பெண் பிள்ளைமாத்திரம் தனிக்குரலில் பாடினாள். அவள் பாடி முடித்தவுடன், பிற பெண்களெல்லாம் அதையே திரும்பவும் சேர்ந்தாற்போல் பாடினார் கள். பாட்டு அமுத வெள்ளம்போல் சுற்றிலும் பரவி ஒலித்தது. சரவண முத்துவும் அதிலே லயித்துப்போனான்.

"முதல் முதலில் பாட்டைத் தொடங்குகிறாளே அந்தப் பெண் மாத் திரம், நாம் இன்று காலையில் சந்தித்த அந்த அழகியா யிருந்தால்!... ஆஹா! என்ன இனிமையான குரல்!,.." என்று அவன் எண்ணினான்.

அடுத்த நிமிஷம், தான் அசட்டுத் தனமாய் மனக்கோட்டை கட்டுவதாக அவன் கருதினான். ஆனால், அவ்

'பட்டப் பகல் போலே-நிலவொளி பாய்ந்து வருகையிலே' முதன் முதலில் அவளை அவன் கண்டான். சரவணமுத்து சபல சித்தக்காரன் அல்ல. ஆயினும், அவளிடம் ஏனோ அவன் மனது பறிகொடுத்தான். அடுத்த சந்திப்பு, பயங்கரமான ஒரு சந்தர்ப் பத்திலே நிகழ்ந்தது. விதி! இருவரும் சேர்ந்து வாழக் கடவுளின் சித்தமா? அப் படியானல், அந்தக் கடவுள் கடைசியிலே ஏன்...?

விதம் அவனால் மனக்கோட்டை கட்டாமல் இருக்கவும் முடியவில்லை. மெல்ல அவன் எழுந்தான். கும்மியடிக்கும் அந்தப் பெண்கள் கூட்டத்தின் அருகே சென்றான். பாட்டை ஆரம்பித்து வைக்கும் அந்தப் பாடகி எவளாய்த்தான் இருக்கும் என்று பார்க்க முயன்றான். விசித்திரம்! விசித்திரம்! இவள் அவளேதான்; காலையில் அவன் கண்ட குமரிதான் இந்தப் பெண்களின் மத்தியில் நின்று கொண்டு அலட்சியமாகப் பாட்டைத் தொடங்கினாள்! இதைக் கண்டவுடன் அவன் உள்ளம் குதூகலத்தோடு ஆகாயத்தில் பறப்பது போல் தோன்றியது. பேசாமல் அந்த இடத்தை விட்டு வெளியேவந்து மீண்டும் பாறையின் மேல் துண்டை விரித்துப் போட்டுப் படுத்து விட்டான்.

2

சரவணமுத்து காட்டுப்பட்டியில் காடு காவல் மேஸ்திரி கறுப்பத் தேவனிடம் சேவகனா யிருக்கிறான். கொஞ்சம் நிலபுலம் உண்டு. அவன் தகப்பனுக்கும் காடு காவல் வேலை தான். அவனுக்கு வயதாகி அவன் உபகாரச் சம்பளம் பெற்ற பின்பு, அதே வேலையை இப்போது சரவணமுத்து பார்த்து வருகிறான். இது வரையில் சரவணமுத்து இரண்டு மேஸ்திரிகளின் கீழே வேலை பார்த்து வந்திருக்கிறான். அவர்களுக்கெல்லாம் இவன் மீது அலாதிப் பிரியம். இப்போது வந்திருக்கும் கறுப்பத் தேவன் மூன்றாவது மேஸ்திரி. தேவனின் குணங்கள் ஒன்றும் தனக்குப் பிடிக்கவில்லை யென்று, ஆரம்பத்திலிருந்தே சரவணமுத்து தன் தகப்பனிடம் புகார் செய்திருக்கிறான்.

ஒரு நாள் அந்திநேரம். காட்டுப்பட்டியை அடுத்த மலைச்சரிவில், உசில மரத்து நிழலில், கறுப்பத்தேவனை உட்காரச் சொல்லிவிட்டு, தான் மாத்திரம் காட்டுக்குள் சுற்றிப் பார்த்துவிட்டு வருவதற்காகச் சரவணமுத்து புறப்பட்டான். கறுப்பத்தேவன் பக்கத்திலிருந்த சுனைத்தண்ணீரை அள்ளிக்குடித்துவிட்டு, நடந்த களைப்புத்தீர அங்கேயே சற்று அயர்ந்து படுத்தான். திறந்த வெளியா யிருந்ததால், சரியாகத் தூக்கம் வரவில்லை.

காட்டுக்குள் சென்ற சரவணமுத்து நாலாபக்கமும் போய்ப் பார்த்து விட்டு, கையில் கருங்காலிக் குச்சி ஒன்றை நறுக்கிச் சீவிக் கொண்டே, மெதுவாகத் திரும்பினான். காட்டுக் கொடிகளில் கண் விழித்து நோக்கும் விதம்விதமான மலர்களையும் அந்த மலர்களைச் சுற்றிச் சுழன்றுகொண்டிருந்த வண்டினங்களையும் வேடிக்கை பார்த்துக் கொண்டும், ஏதோ ஒரு ராகத்தைச் சீட்டியடித்துக் கொண்டும், அடிமேல் அடிவைத்து நடந்து கொண்டிருந்தான்.

அவன் நடை திடீரென்று தடைப்பட்டது. ராகமும் அப்படியே பாதியில் நின்றுவிட்டது. சந்தடி செய்யாமல் உற்றுக் கேட்டான். ஏதோ ஒரு குரல்; தீனமான ஒரு பெண்ணின் குரல்; பரிதாபமாகக் கதறும் அபயக் குரல்!

சரவண முத்துவின் கால்கள் ராட்சச வேகம் பெற்று விட்டன. கல்லையும் முள்ளையும் பாராமல், குரல் வந்த திக்கை நோக்கிப் பிசாசு போல், அந்தக் காட்டின் மத்தியில் ஓடினான். குறுக்கே நின்ற புதர்களில் கால்கள் உரசி ரத்தம் பீறிட்டுக் கொண்டு வந்தது.

சரவணமுத்து அந்தச் சத்தம் பிறந்த இடத்தை நெருங்கி விட்டான். அங்கே அவன் கண்டதென்ன? கறுப்பத்தேவன் எவளோ ஒரு பெண் பிள்ளையை முரட்டுத் தனமாகக் கையிலே பிடித்திருந்தான். அவனது இரும்புப் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்வதற்காக, அந்தப் பெண் அலறிய வண்ணம் திமிறிக் கொண்டிருந்தாள்.

"என்ன மிருகத்தனம்! தேவனா இப்படிப்பட்ட அடாத செய்கைக்குத் துணிந்தான்! அவள் யார்...அந்தப் பெண்?...யாரா யிருந்தா லென்ன? உதவியற்றுத் தனியே தவிக்கும் ஒரு பெண்தானே!"

சரவணமுத்து புலிபோல் கறுப்பத் தேவன் மீது பாய்ந்து அவனைக் கீழே தள்ளினன். அடுத்த கணம் கறுப்பத்தேவனின் முகத்தில் பளீர் பளீரென்று எண்ணற்ற அறைகள் மாறி மாறி விழுந்தன. ஒரு வழியாக அவன் பேச்சு மூச்சற்றுப் பிரக்ஞை இழந்தவுடன், அவனை அந்த இடத்தி லிருந்து சிறிது தூரத்தில் புரட்டித் தள்ளிவிட்டு, "உஸ்...அப்பாடா!" என்று தரையில் உட்கார்ந்தபடியே, சரவணமுத்து பெருமூச்சு விட்டான். அவன் பார்வை அங்கே நின்று கொண்டிருந்த பெண்ணின்மேல் இப்போது தான் விழுந்தது.

அவனுக்கு ஆச்சரியம் தாங்கமுடிய வில்லை. வைத்த கண் வாங்காமல் அவளையே நோக்கிவிட்டு, "நீ சக்தி வேல் திருநாளைக்கு வந்திருந்தே, இல்லையா?" என்ருன்.

பிரமித்து நின்ற அந்தப் பெண், "ஆமாம், வந்திருந்தேன்" என்று மெலிந்த குரலில், நன்றிகனியப் பதிலளித்தாள்.

"நிலாக் கும்மியின்போது நீதானே ஆரம்பத்தில் பாடினது?"

"ஆமாம்."

"சரி...நீ இங்கே எப்படி இந்த நேரத்திலே தனியா வந்தே? காட்டுக் குள்ளே உன்னைப் போல் ஒருத்தி தனியே வரலாமா?"

"வீட்டிலே அப்பனுக்கு உடம்பு சரியில்லே. ரெண்டு சுள்ளிக் குச்சி கொண்டு போவோமின்னு வந்தேன். இங்கே வந்தா இந்த மாதிரி..." என்று கூறி, அதற்கு மேல் ஒன்றும் சொல்ல முடியாமல் தலை குனிந்து கண்ணீர் விட்டாள்.

"அது கிடக்கட்டும்; நீ எந்த ஊரு? உங்க ஆயா உன்னைத் தனியே விட் டுட்டு வீட்டிலே என்ன செய்யரு? உனக்குத்தான் புத்தி வேண்டாம்? என்ன துணிச்சல் உனக்கு!"

"நான் இருக்கிறது பொன்னம் பட்டி. எனக்கு ஆயா இருந்தா நான் ஏன் இப்படித் தனியா வர்ரேன்? அது தான் செத்துப் போயிட்டுதே."

இன்னும் அநேகம் கேள்விகளை அவளிடம் கேட்க வேண்டுமென்று தோன்றியது சரவணமுத்துவுக்கு. ஆனல், அவைகளை யெல்லாம் அவன் அவளிடம் கேட்கவில்லை. கேள்விகள் அவன் நெஞ்சில் துடிதுடித்துக்கொண் டிருந்தனவே யல்லாமல், வெளிவர அவைகளுக்குத் தைரியம் இல்லை.

"சரி, பெண்ணே. பதனமாய் வீட் டுக்குப் போ. போவியா? இல்லை, நான் கொண்டுவந்து விடட்டுமா?"

"வேண்டாம். நானே போகிறேன்" என்ருள். ஆனல், அவள் நகரவில்லை. தலை குனிந்த வண்ணம் தயங்கித் தயங்கி நின்ருள்.

"ஏன் நிக்கிறே?"

"நீங்க யாருன்னு சொல்லலியே! ...இந்தப் படுபாவியை உங்களுக்கு முன்னடியே தெரியுமோ?"

சரவணமுத்துவுக்குத் தன் விவரங் களை அவள் கேட்டதில் அடங்காத களிப்பு. தன்னையும் தேவனையும் பற்றிய தகவல்களை அவளுக்குத் தெரிவித்தான்.

"ஆமாம்; அந்தச் சக்திவேல் திரு விழாவில், என்னைக் கண்டது உங்க ளுக்கு என்ன இவ்வளவு ஞாபகம்?" என்று அவள் கேட்டாள். அந்தக் குரலிலே சிறிது செருக்கும் வெட்க மும் தோய்ந்திருந்தன.

"அதுவா...அது எனக்குத் தெரி யாது" என்று சொல்லிக் கல கல என்று சிரித்தான் சரவணமுத்து.

பிறகு, அவள் நடந்தாள்.

"இந்தா, உன் பேர் என்ன?" என்று கேட்டான் சரவணமுத்து.

அவள் பாதி திரும்பியும் திரும்பா மலும் "மீனன்னு கூப்பிடு வாங்க" என்று சொல்லிக்கொண்டே அகன் ருள்.

"மீன! மீன!" என்று தனக்குத் தானே உச்சரித்துக்கொண்டு திரும் பிய சரவணமுத்து, "இந்தச் சனி யனை எப்படி வீட்டிலே கொண்டு போய்ச் சேர்ப்பது?" என்று எண்ணி னன். அப்போதுதான் அவன் உடம்பு கொஞ்சம் நடுங்கியது.

எப்படியோ தேவனை வீட்டில் கொண்டுபோய்ச் சேர்த்தான்.

3

கறுப்பத்தேவன் சும்மா விடுவானு? அவன் தன் வேலைத்தனத்தைக் காண்பித்துவிட்டான். சரவணமுத்து வின்மேல் பொய்க் குற்ற மொன்று சாட்டி, அதற்கு வேண்டிய சாட்சியங் களையும் தயார் செய்து, அவனைப் பற்றி மேல் அதிகாரிகளுக்கு எழுதி ஞன். ஒரு பெரிய காட்டு மரத்தை வெட்டிப் பக்கத்து ஊரில் ஒருவனிடம் சரவணமுத்து விற்றுவிட்டதாக, அவன் பழி சுமத்தினுன்.

மேல் அதிகாரிகளிடமிருந்து உடனே உத்தரவு வந்துவிட்டது. சரவணமுத்துவை வேலையை விட்டு நீக்கியிருப்பதாகவும், அவன் மீது கோர்ட்டில் வழக்குத் தொடரப்போவ தாகவும், அவனைப் பிடித்துப் போலீ சாரிடம் ஒப்புவிக்கவேண்டு மென் றும், அதில் கண்டிருந்தது. அதன் படியே சரவணமுத்து போலீசாரிடம் ஒப்புவிக்கப்பட்டான். அதிகாரிகள் அவன்மீது வழக்குத் தொடர்ந்தார் கள். சரவணமுத்துவுக்கு ஒரு வரு ஷக் காவல் தண்டனை விதிக்கப்பட் டது. சரவணமுத்து சிறையில் அடை பட்டான்.

மறுநாள் சாயங்காலம் காட்டுப் பட்டியில் சக்திவேல் சன்னதியில் மூன்று பேர் நின்றுகொண் டிருந்தார் கள். சரவணமுத்துவின் தகப்பன், மீஞ, அவள் தகப்பன் இந்த மூன்று பேரும் தான். தன் மகனுக்கு நேர்ந்த கஷ்டத்தைச் சரவணமுத்துவின் தகப்பனுல் பொறுக்க முடியவில்லை. சக்தி வேலை இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டே பொங்கிப் பொங்கி அழுதான். தள்ளாத வயதில் அவன் இப்படி அழுது கொண்டிருப் பதைக் காண, மற்ற இருவருக்கும் சகிக்கவில்லை. அவர்களும் அவனேடு சேர்ந்து கதறினுர்கள். அவன் வாய் விட்டுப் புலம்பத் தொடங்கினுன்:

“அட சத்தி! எனக்கு விவரந் தெரிஞ்ச காலத்திலே யிருந்து உன் னைத்தாண்டா நம்பி யிருக்கேன். மனிசத் துணையாலே ஆகாத காரியம் உன்னுலே ஆகுமின்னு நினைச்சதெல் லாம் பொய்யாப் போச்சேடா! ஒரு பாவமும் அறியாத என் மகனை இப்படிச் சிறையிலே தள்ளிட்டானு களே பாவிகள்! உன்னையே கதி யின்னு உன் காலடியிலே கிடக்கிற என்னை நீ இப்படிச் சோதிக்கலாமா?” என்று கூறி, அப்படியே சுருண்டு விழுந்தான்.

மீனுவுக்கும் அந்தச் சக்தி வேலின் மேல் கோபங் கோபமாய் வந்தது. நம்பினவர்களை நட்டாற்றில் கைவிடு வதற்கு ஒரு தெய்வமிருந்தால், அதைப் போல் தெய்வமொன்று இல்லா திருப்பதே மிகவும் உத்தம மென்று அவள் கருதினுள். “அட சக்தி! நீ மாத்திரம் அடுத்த வருசத்துக்குள் இத்தனை அக்கிரமத்துக்கும் காரண மான அந்தக் கறுப்பத்தேவனை ஒழிக் காம விரு, அப்புறம் சொல்கிறேன் உன்னை! நீ சக்தியுள்ள தெய்வமா யிருந்தால், உனக்கு இந்தப் பேர் நிலைத்து நிற்கவேணுமா யிருந்தால், அடுத்த வருசம் இதே நாளைக்குள் அந்தப் பாழும் பயல் மேஸ்திரி மண்ணேடு மண்ணைய்த் தொலைய வேண்டும்! இல்லா விட்டால் நீ சக்தி வேலில்லே; சாதாரணத் துருப்பிடித்த இரும்பு வேல்தான்! காடு காவலுக் காகச் சரவணமுத்து தன் வீட்டு மூலை யில் சார்த்தி வைத்திருந்தாரே, அந்த மாதிரி மழுங்க வேல்!” என்று மீனு தனக்குள் கறுப்பத் தேவனின் மீதிருந்த வயிற்றெரிச்சலை யெல்லாம் சக்திவேலின் மேல் திருப்பி, அதோடு சபதமும் போட்டாள்.

4

மீனுவைச் சந்திப்பதற்கு முன்பு சரவணமுத்துவைச் சிறைக் கனுப்பி யிருந்தால், அவனுக்குச் சிறைவாசம் ஒன்றும் அவ்வளவு கஷ்டமா யிருந்திருக்காது. ஆனுல், இப்போதோ அவனுக்குத் தனிமை யில் கணநேரப் பொழுதுபோவது கூட ஒரு யுகமா யிருந்தது. தினந் தினம் பொழுது விடிவதையும், இரவு வந்து மறைந்து அடுத்த நாள் கீழ் வானம் வெளுப்பதையும், மிக ஆவ

லோடு எதிர்பார்த்திருந்தான். அவனுடைய சிறை நண்பர்களிடமெல்லாம் தனக்கு ஒரு வருஷம் முடிய இன்னும் எத்தனை நாட்கள் போகவேண்டும் என்று கேட்பது தான் வேலை.

ஒருமுறை அவன் தந்தை அவனைக் காண அனுமதி வாங்கிக்கொண்டு சிறைக்கு வந்திருந்தான். சரவண முத்து அவனைப் பார்த்துக் கேட்ட முதல் கேள்வி இதுதான்: "மீனு சுகமா யிருக்காளா?"

"இப்போ கூட உன்னைப் பார்க்கணும்னு தான் அவ இங்கே வர்ரேன்னு பிடிவாதம் பிடிச்சா! நான் தான் கூட்டி வரலே" என்றான் தகப்பன்.

"ஏன் கூட்டி வரப்படாது? அடுத்ததரம் மறந்திடாமல் அழைச்சுக் கிட்டு வா" என்றான் சரவணமுத்து.

ஆனல், அடுத்த தடவை அவர்கள் பார்க்க விரும்பியபோது, அனுமதியே கிடைக்கவில்லை.

5

ஒவ்வொரு நாளாகக் கழிந்து, ஒரு வருஷமுடிவு நெருங்கிவிட்டது. நாள்கள் செல்லச் செல்ல ஒரு விதத்தில் மீனுவுக்குச் சொல்லமுடியாத சந்தோஷம். ஆனல், அந்தச் சந்தோஷத்தை அவளால் பூரணமாக அனுபவிக்க முடியவில்லை. அவளுக்குச் சக்திவேல் சாமியின்பேரில் எல்லையற்ற ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது.

"இன்னும் அந்த மேஸ்திரி முதலில் இருந்ததுபோலவே ஒரு குறையும் இல்லாமல் இருக்கிறானே! அப்படியானல் நாம் அன்றைக்கு வேண்டிக் கொண்டோமே, அது தெய்வந்தானு? அல்லது அத்தனையும் பொய்யா? அந்தப் பழிகாரனுக்கு இன்னும் ஏன் ஒரு கேடும் இல்லை?" என்று மீனு உள்ளுக்குள்ளே பொருமிக் கொண்டாள்.

இன்று இரவோடு அவள் சாமியை வேண்டிக் கொண்டு ஒரு வருஷம் ஆகப்போகிறது. இந்தக் கடைசி நாளிலும் முக்கால்வாசிப் பொழுதுக்குமேல் ஒரு பலனும் காணுமல் சென்று விட்டது. இன்னும் சில மணி நேரந்தான் பாக்கி. இந்தக் குறுகிய நேரத்தில் எதுவும் விசேஷ சம்பவங்கள் நடந்துவிடக் கூடுமென்று மீனு கிஞ்சித்தேனும் நம்பவில்லை. "ஒரு வருஷ காலமாய் ஒன்றுஞ் செய்ய முடியாத இந்தக் கையாலாகாத தெய்வம் இனிமேல் தான் கறுப்பத் தேவனைப் புரட்டித் தள்ளிவிடப் போகிறதாக்கும்!" என்று நினைத்துக் கொண்டு, தன் வஞ்சம் தீர்த்துக் கொள்ளச் சக்திவேல் கோவிலுக்குத் தனியே காளி தேவிபோல் வந்து சேர்ந்தாள்.

கோவிலில் இரவின் நிசப்தம் பயங்கரமா யிருந்தது. வழக்கமாக வந்து கூடும் காக்கைக் கூட்டங்கள் கூட எப்போதோ உறங்கி விட்டன. என்றுமில்லாதபடி யாரோ அன்று அங்கே விளக்குப் போட்டு விட்டுப் போயிருந்தார்கள். மாடத்துக் குள்ளிருந்த அந்த அகல் விளக்கின் தீபம் காற்றின் வேகத்தால் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தது. இவை ஒன்றையும் சட்டை செய்யாமல், மீனு சக்திவேலுக் கருகில் நின்றுகொண்டு, தன் மனக் கசப்பை யெல்லாம் படபடப்போடு கொட்டித் தீர்த்தாள். நிசப்தத்தைத் தகர்த்துக் கொண்டு அவள் குரல் உக்கிரமாய்க் கிளம்பியது.

"அட சக்தி! உனக்கு சக்தியிருந்தால் நான் சொல்கிறதைக் கேட்டுக் கொள்: இனி மேல் உனக்கு இங்கே வேலை கிடையாது! எங்கேயாவது ஜனங்களில்லாத இடத்துக்கு ஓடிப்போ! உன்னைக் கையெடுத்துக் கும்பிடுகிறார்களே, அத்தனை பேரும் மூடர்கள்! உனக்குத் திருவிழாக் கொண்டாடுகிறவர்களும் அப்படித் தான்! - போதும்! உன்னை நம்பி நாங்கள் மோசம்போனதெல்லாம் போதும்! நீ எங்களைக் காப்பாற்றியதெல்லாம் போதும்! இனி நீ எங்களுக்குச் செய்யவேண்டிய உதவி, நீ இந்த இடத்தை விட்டுச் சொல்லிக் கொள்ளாமல் ஓடிப்போவதுதான்! நீ இருக்கிற இடத்திலே எவனுவது வழிப்போக்கன் வந்து இளைப்பாற

லாம்...வெட்கங்கெட்ட தெய்வமே! இனி உன்னைக் கையெடுத்துக் கும்பிட்டால் நான் மறு ஜாதி!... உன்னை நினைத்து நினைத்துக் கதறுகிறாரே அந்தக் கிழவர், அதைக் கேட்டாவது உன் நெஞ்சு இளக வேண்டாமா? உன்னைப் போல் உன் நெஞ்சும் இரும்புதானா? அவர் ஜெயிலிலேயிருந்து வந்தவுடன், அந்தப் பாவிப் பயல் அவருக்கு இன்னும் என்ன தீங்கு செய்யப் போகிறானோ?''

மீனா கடவுளை முழு வேகத்தோடு தாக்கிக்கொண்டு நின்ற இந்தச் சமயத்தில், ஆலமரத்தின் இலைச் சருகுகளில் சரசர என்று ஒரு சத்தம் கேட்டது. தன்னுடைய பேச்சை நிறுத்தாமல், சத்தம் வந்த திக்கில் மெதுவாகத் திரும்பிப் பார்த்தாள். ஏதோ சிறிது தூரத்தில் நிழலை ஒத்த ஓர் உருவம் தட தட என்று ஓடுவது போல் தெரிந்தது. அதைப் பார்த்தவுடன் கணப்பொழுது மீனாவின் இதயம் திக்கென்று துடிப்பற்று நின்றது. அடுத்த நிமிஷத்தில் அதைப் பற்றிக் கவலைப்படாமல், அவள் மென்மேலும் கடவுள்மீது வசை மாரி பொழிய ஆரம்பித்தாள். சத்தம் சிறிது சிறிதாகக் குறைந்துகொண்டே போய்க் கடைசியில் முற்றிலும் நின்று விட்டது.

மீனா வீட்டுக்குத் திரும்பிய போது, அவள் தாழிடாமல் சாத்திவிட்டு வந்திருந்த வீட்டுக் கதவு அப்படியே இருந்தது. சந்தடி செய்யாமல் உள்ளே நுழைந்து, விரித்துக் கிடந்த படுக்கையில் படுத்துக்கொண்டாள். இரண்டு நாட்களாக அவளும் அவள் தகப்பனும், சரவணமுத்துவின் வீட்டில் தான் வாசம். சரவணமுத்துவை வரவேற்பதற்காக, அவர்கள் அங்கே வந்து தங்கி யிருக்கிறார்கள்.

மீனாவுக்கு அதன் பிறகு தூக்கமே வரவில்லை. சக்திவேல் கோவிலில் தன் கண்ணில்பட்ட விபரீதமான நிழலுருவத்தைப் பற்றியும், மறு நாள் தான் சந்திக்கப்போகும் தன் சரவணமுத்துவைப் பற்றியுமே திரும்பத் திரும்ப எண்ணிக் கொண்டு, இரவு கழியும் வரை விழித்திருந்தாள்.

அடிமையே அனர்த்தம்

நாம் அடிமைப்பட்டிருக்கும்வரை, நம்மால் இங்கிலாந்துக்கு அனர்த்தந்தான். இதைப்பற்றிச் சந்தேகமே வேண்டாம். இங்கிலாந்தே இதை ஒப்புக்கொள்கிறது. அது தனது மூட வழியிலே நம்மைத் திருப்தி செய்ய முயன்று கொண்டே யிருக்கிறது. அது நம்மை ஏன் திருப்தி செய்ய வேண்டும்? நாம் ஓயாமல் தொந்தரவு செய்வதால்தானே? இங்கிலாந்திடமிருந்து பிரிந்துவிடவேண்டும் என்று போராடுவதில் நாம் வெற்றி பெற்றால், நமக்குப் பரிபூர்ண சுதந்தரம் வந்துவிடும். ஆனால், இங்கிலாந்தே அதனால் நம்மைப் பார்க்கிலும் அதிக நன்மையை அடையும். ஏனென்றால், நம்மைப் பற்றிய கவலை அதற்கு ஒழிந்துவிடும்.

—டெரன்ஸ் மாக்ஸ்வினி

6

அடுத்த நாள் சூரியோதயத்துக்குள் ஊரெங்கும் இதே பேச்சு. முதல் நாள் இரவு கறுப்பத்தேவன் பக்கத்துக் கிராமத்திலிருந்து சக்திவேல் சன்னதி வழியாகத் தனியே வந்து கொண்டிருந்தானாம். ஆலமரத்தடியில் வந்தவுடன், அவனை என்னவோ அரட்டியது போலிருந்ததாம். பயந்து போய் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓட்டம் பிடித்தானாம். ஓட ஓடச் சத்தம் அவனைத் தொடர்ந்து வருவது போல் இருந்ததாம். வழியிலேயே வாயாலும் மூக்காலும் ரத்தம் கக்கிச் சோர்ந்து விழுந்து மாண்டு விட்டானாம். அவன் முதுகிலே வேல் குத்தியதுபோல் ஒரு காயமும் இருந்ததாம். இப்படி ஊர் ஜனங்கள் பேசிக் கொண்டார்கள். இதை யெல்லாம் கேட்ட மீனா யாருடனும் பேசவில்லை. வெகு நேரம் மௌனமாய் வீட்டிலே உட்கார்ந்திருந்தாள். பின்பு, குளத்தில் ஸ்நானம் செய்துவிட்டு, நெற்றியில் குங்குமம் இட்டுக் கொண்டு, கையில் தேங்காய் பழத்

தட்டுடன் சக்திவேல் கோவிலுக்குப் பயபக்தியுடன் புறப்பட்டாள். அங்கே புஷ்பத்தால் தெய்வத்தை நன்ருக அலங்கரித்த பிறகு, தேங்காய் உடைத்துவைத்து, சாம்பிராணி சூடத் தீபாராதனை செய்வித்து, தான் செய்த பிழையை மன்னிக்கும்படி வேண்டினுள். அவள் கண்கள் அரை குறையாய்த் திறந்திருந்தன. அவை களினின்றும் கண்ணீர் பொங்கி ஊற் றெடுத்தோடியது. மண்டியிட்டவாறே, ஈசனை மனங்கனியத் தொழுதுகொண் டிருந்தாள்.

அப்போது, மேலே இருந்த வெண் கலமணியிலிருந்து 'டாண்...டாண்!' என்ற ஓசை கணீரென்று எழுந்தது. மீனு ஆச்சரியத்தோடு நிமிர்ந்து மேலே நோக்கினுள். அங்கே மரக் கிளையில் சாய்ந்த வண்ணமே குறும் புப் பார்வையோடு நின்று கொண் டிருந்தான் சரவணமுத்து. அவன் உதடுகள்,

> **சுற்றிநில்லாதே, போ !—பகையே**
> **துள்ளி வருகுது வேல் !**

இந்தப் பாட்டின் அடியை மெதுவாகப் பாடிக் கொண்டிருந்தன.

மீனு திகைத்து நின்ருள். என் னவோ ஒரு பயமும் ஏக்கமும் அவ ளைப் பிடித்து ஆட்டின. "அப்படியா னுல்...?" என்று ஏதோ கேட்க வாயெடுத்தாள். இதற்குமேல் வார்த் தைகள் வெளிவரவில்லை.

சரவணமுத்து கல கல என்று பேய் போல் சிரித்தான்: "ஆமாம், மீனு! ஆமாம். துருப்பிடித்த சக்தி வேலை நான் சுத்தம் செய்து விட் டேன்" என்ருன்.

"என்ன காரியம் செய்தீர்கள்?" என்று கத்தினுள் மீனு. அவள் உடலம் நடுங்கியது. அவள் கண்கள் வெறித்து விழித்தன.

சரவணமுத்து மெல்ல நெருங்கி, அவளை யணைந்து, முகம் திருப்பி, "மீனு! ஏன் இப்படி விழிக்கிறே? நடந்தது நடந்துவிட்டது. இந்தச் சீமையில் இனி எனக்கு இடமில்லை. உன்னைப் பார்க்கவே இந்நேரம் இங்கே நின்றேன். இனி நான் கண் காணுத சீமைக்குப் போய் வாழவேண் டியது தான். போகுமுன் எனக்கு ஒரே ஒரு வரம் கொடு: ஒரே ஒரு முத்தம்..." என்ருன்.

மீனு உணர்வற்ற மரம்போல் அவச மாய் நின்ருள்.

சரவணமுத்து தன் விருப்பத்தைப் பூர்த்திசெய்து கொண்டான். பிறகு, கண்ணீருடன் அவளைவிட்டு நகர்ந் தான். அவன் கண் மறையும் தூரம் செல்லும் வரையில், கல் சிலைபோல் நின்ற அவள், அவன் மறைந்ததும், "ஐயோ! போகாதே! என்னைவிட்டுப் போகாதே!" என்று அலறினுள்.

இல்லை; அவன் போய்விட்டான். இனி என்று வருவானே?

*

சிம்லாவில் நடந்தது.

வைசிராய் மாளிகையின் புல் வெளியில் மௌலானு ஆஜாது வந்தாரோ இல்லையோ, ஜின்னு வெகு ஆடம்பரமாய் முதுகைத் திருப்பிக் கொண்டார். ஆனுல், பண்டித பந்துடன் மட்டும் ஜின்னு வெகு சரஸ மாய்ப் பேசிக்கொண்டிருந்தார்.

பிரயாணத்தால் களைத்திருந்த மௌலானு, ஒரு பக்கமாய்ப் போய் உட்கார்ந்து கொண்டார். இது வைசிராயின் பரிவாரங்களுக்குத் தர்ம சங்கடமாய்ப் போய்விட்டது. ஏனெனில், வைசிராய் தம்பதிகள் வரும் போது யாரும் உட்கார்ந்திருப்பது வழக்கமில்லை. ஒரு காரியதரிசி முணு முணுத்தார். பலன் இல்லை. பிரெடா ஸ்டார்க் என்ற ஆங்கில ஆசி ரியை சமயோசிதமாய் நடந்து இந்தச் சங்கடத்தைப் போக்கினுள்.

அவள் மௌலானுவிடம் சென்று ஏதோ பேசத் தொடங்கினுள். ஒரு பெண்ணுக்கு மரியாதை செய்வதற்காக, மௌலானு எழுந்து நின்று கொண்டார். வைசிராயின் கௌரவம் காப்பாற்றப்பட்டது.

—பம்பாய்க் கிரானிக்கள்

ராஷ்டிரபதி மௌலானா அபுல்கலாம் ஆஜாது சிம்லாவில்
ஆர்ம்ஸ்டெல் மாளிகையில் ஓய்வெடுத்துக் கொள்கிறார்

1– ஆஜாதும் பஞ்சாப் பிரதம யந்திரி மல்லிக் கிஸார் ஹயத்கானும்

2 – வைஸிராய் காரில் வைஸிராய் மாளிகைக்கு மகாத்மா காந்தி வந்திறங்குகிறார்

1 – ஜின்னா சாகேபும் வேவலும் கை குலுக்குகிறார்கள்

2 – காந்திஜி மாலைப் பிரார்த்தனைக்குப் புறப்பட்டுச் செல்கிறார்



1 – வைஸிராயை காந்திஜி கண்டு திரும்பிய போது, நிருபர்களும் ஜனங்களும் சூழ்ந்து கொள்கிருர்கள்

2 – சில பௌத்த மதத் தலைவர்கள், ஜவஹர்லால் நேருவைச் சந்திக்கிருர்கள்



1–ஜின்ன சாகேபும் ராஜாஜியும் கை குலுக்குகிருர்கள்





2 – திரளான கூட்டத்துக்கு, மாடியிலிருந்தபடியே ஜவஹர் பிரசங்கம் செய்கிருர்

3 – ரிக்ஷாவில் ஐரோப்பியக் கட்சித் தலைவர் ஸர் ஹென்ரி ரிச்சார்ட்ஸன்

1 – பத்திரிகை நிருபர்களுக்கு ஜின்னா சாகேப் பேட்டி

2 – காரியக் கமிட்டிக்குச் சென்ற ஸ்ரீமதிகள் கமலா தேவியும் சரோஜினி தேவியும்

1 – அஹ்ரார் தலைவர் மௌலானா அபிபுல் ரஹ்மானும் நிருபர்களும்



2 – ரிக்ஷாவில் ஷெட்யூல் வகுப்புத் தலைவர் ஸ்ரீ. என். சிவராஜ்





சிம்லா மகா நாட்டுப் படங்களை, ஜவஹரும்
ஆஜாதும் பார்வையிடுகிறார்கள்.

யார் சீக்கியன்?

கோவை அ. அய்யாமுத்து

மக்கள் பூண்டொழுகும் மதங்கள் பல. நாம் வாழும் இந்தப் பிரபஞ்சத்தையும், இதில் நமது நிலே யாதென்பதையுந் தீர்மானிப்பதையே மதமென்று சொல்லத் தகும்.

பிரபஞ்சம் என்ருலென்ன? இது எப்போது சிருஷ்டிக்கப் பட்டது? எப்படி உருவாகி அமைந்தது? தானுகத்தோன்றியதா? அல்லது ஒருவரால் படைக்கப்பட்டதா? படைத்தவர் இதனின்று பிரிந்தும் தனித்தும் இதன் புறம்பே இருக்கிருரா? யார் அந்தப் படைப்பாளி? அவரது உறைவிட மெங்கே? அவருடைய குணங்கள் யாவை? நான் யார்? எனக்கும், அவருக்கும், அவரது படைப்புக்கும் உள்ள தொடர்புகள் எவ்விதம்? என்று இப்படிப்பட்ட கேள்விகள் பல யுகங்களாக மக்களின் மனதில் புகுந்து கொண் டிருக்கின்றன. இத்தகைய கேள்விகளுக்கு மனிதன் அளிக்கும் பதிலே அவனது மதம் எனப்படும். இந்தக் கேள்விகளுக்குச் சீக்கியர் அளிக்கும் பதில் யாதென்று இந்தக் கட்டுரையில் சுருக்கமாகக் கவனிக்கலாம்.

நாம் வாழும் இந்தப் பூமண்டலத்தைப் போல் எண்ணற்ற பூமண்டலங்கள் இருக்கின்றன என்று சீக்கியரின் குருமார் கூறுகிருர்கள். அவை இவ்வளவென்று வரையிட்டுக் கூற, மனிதனுடைய மனதுக்குச் சக்தி கிடையாது. கடலிலே கலக்கும் நதிக்குக் கடலின் ஆழமும் பரப்பும் எவ்வாறு தெரியாதோ அவ்வாறே, இந்தப் பிரபஞ்சத்தின் பரப்பை, நமது மனதால் உணர முடியாது என்பதே அவர்களின் முடிவு.

இந்தப் பிரபஞ்சம் எந்த ஆண்டிலே, எந்த மாதத்திலே, எந்தத் தேதியிலே, எந்த நேரத்திலே தோன்றியதென்று கூற, எந்த மனிதனுலும் இது வரையில் முடிந்ததில்லே - இனி எக்காலத்தும் முடியாது என்பதே இந்தக் குருமாரின் நம்பிக்கை. இந்த ஆராய்ச்சியில் இறங்குவது வீண் வேலே. இதைத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமும் மனிதனுக் கில்லே. சர்வ சக்தியுள்ள கடவுளுக்கு முன் மனிதன் ஒரு துரும்பு. இந்தத் துரும்பால் கடவுளேயும் அவரது படைப்பையும் எப்படிச் சீர்தூக்கிப் பார்க்க முடியும்? சர்வகலா வல்லவ னெருவன் தனது அந்திய காலத்திலே பாடுகிருன்:

அந்தோ நான் கற்றேன்
அளப்பரிய தத்துவங்கள்!
மருத்துவமும் மநுமுறையும்
மதத்தின் பல கோட்பாடும்!
என்னென்ன தான் கற்றும்
இருக்கின்றேன் அந்தகனுய்!
வீணுய்ச் சுமந்தலேந்தேன்
விஞ்ஞான சாத்திரத்தை,
விமலன் அடியிணே காண
முடியாத மடையேனுய்!

பரந்ததும் பலப்பலவானதுமான இந்தப் பிரபஞ்சத்தை எப்படி நிர்ணயிக்க முடியாதோ, அவ்வாறே இதைப் படைத்தவனேயும் மதிப்பிட்டுக் கூற முடியாதென்பதே சீக்கியரின் கொள்கை. உடலேக் கொடுத்தவன் அவனே. உடலில் உறையும் ஆன்மாவைக் கொடுத்தவனும் அவனே. பிறப்பதும் இறப்பதும் அவனது ஆணேப்படியே நடைபெறுகிறது. எல்லாமும், எல்லோரும் அவனது அதிகாரத்தில் அடங்கியவர்கள்.

'கடவுள் ஒருவரே. அவருக்குப் பிரதிநிதிகள் இல்லே. அவர் தமது சக்தியை எவரிடமும் பகிர்ந்தளித்துவிடவில்லே' என்று குரு நானக் கூறு

ஒரு சிறு சமூகம். அப்படியிருந்தும், அவர்களுக்கும் இந்திய சர்க்காரிலே ஒரு 'மந்திரி பதவி' உண்டு என்று அங்கிகரித்தது பிரிட்டன். இது கண்டு அவர்களின் தலேவர் தாரா சிங் சமீபத்தில் களிபொங்கி விட்டார். இந்திய சரித்திரத்திலும் சரி, இன்றும் சரி, வீரத்தால் தனியிடம் பெற்ற ஓர் அதிசய ஜாதியார் சீக்கியர்கள். அவர்களின் மதக் கோட்பாடுகள் உன்னதமானவை.

கிறார். கடவுள் பிறப்பும் இறப்பும் அற்றவர். ரூப மற்றவர். எங்கும் நிறைந்தவர். சர்வ சக்திமான். அவருக்குச் சமமானவரோ எதிராளியோ இல்லை. அவர் பிறப் பெடுக்கவும் இல்லை; இறக்கவும் இல்லை. எந்தத் தனிப்பட்ட கூட்டத்தினரோ தேசத்தினரோ அவரிடம் ஏகபோக உரிமை கொண்டாட, அவர் இடமளித்தது மில்லை.

கடவுள் மனித ரூபத்திலும் மிருக ரூபத்திலும் இந்த உலகில் அவதரித்தார் என்ற கொள்கைக்கு எதிரானவர்கள் சீக்கியர்கள். குரு நானக் விக்கிரக வணக்கத்தை நிராகரித்தவர். கடவுளை வணங்க அர்ச்சகர் தேவையில்லை, அவதாரங்களும் தேவையில்லை. தீர்க்க தரிசிகளிலும், தேவ குமாரர்களிலும் குருநானக் நம்பிக்கை கொள்ள வில்லை. மனிதனுடைய மனோ வாக்குக் காயங்களுக்குப் புறம்பானவர் கடவுள் என்பதே சீக்கியருடைய ஆதி குருவின் கருத்து.

கடவுள் எங்கும் எதிலும் வியாபித்து நிற்கிறார். ஆனால், எதுவும் கடவுள் அல்ல. நாம் கடவுளருளால் தோன்றியவர்கள். நாம் கடவுள் அல்ல. தாயிலிருந்து சேய் தோன்றியது உண்மை. ஆனால், தாய் வேறு, சேய் வேறு. அவ்வாறே கடவுளிடமிருந்து இந்தப் பிரபஞ்சமும் இதில் காணும் யாவும் தோன்றியது உண்மை. ஆனால், கடவுள் வேறு; சிருஷ்டிப்பொருள்கள் வேறு. சிருஷ்டிக்கப்பட்டது சிருஷ்டிகராக மாட்டாது.

கடவுள் விரும்பினார். நாம் தோன்றினோம். இதற்குமேல் கடவுளுக்கும் நமக்குமுள்ள தொடர்பை ஆராயத் தேவையில்லை என்கிறார்கள் சீக்கியர்கள். கடவுளைப் பற்றிய மெய்யறிவு தோன்றும் ஒரு காலம் ஒவ்வொரு மனிதனுக்கும் தானாகவே வரும். அந்தக் காலம் வரும் வரையில், மனிதன் தன் மூளையைக் கடவுளை அறியும் வேலையில் செலவழிக்கத் தேவையில்லை. மனிதனுக்குக் கடவுளிடத்து நம்பிக்கை வேண்டும். நல்ல காரியங்களை அவன் செய்து வர வேண்டும். இந்த இரண்டு முறைகளையும் கொண்டே, அவன் தன் ஆன்மாவைக் காக்க முடியும்.

மனிதனிடம் காணப்படும் தெய்விக சாரமே ஆன்மா எனப்படுவது. ஆன்மாவுக்கு அழிவு கிடையாது. தேகமே அழிவது. ஆன்மா தனது கர்மத்துக் கேற்றவாறு பல ரூபங்களை மாறிமாறி அடைந்து வருகிறது. ஆன்மா மோட்சமடையும் வரையில், இப்படிப்பட்ட ரூபங்கள் அடைந்தே தீரும். மனிதப் பிறவியே மேலான பிறவி.

ஆன்மா தன் கர்ம பலனை அனுபவித்தே தீரவேண்டும். சுகத்துக்கும் துக்கத்துக்கும் ஆன்மாவின் செயல்களே காரணமாம். என்றாலும், ஆன்மாவுக்குச் சுதந்தரமுண்டு. ஆன்மா தன்னிஷ்டப்படி நடந்து கொள்ளும் சுதந்தரத்தை ஆண்டவன் அதற்கு அளித்திருக்கிறார். மனிதன் தன் விதிக்குத் தானே எஜமான். மனிதன், தன் ஆன்மாவுக்குத் தானே தலைவன். அப்படியானால், கடவுளுக்கு என்ன வேலை என்ற கேள்வி பிறக்கலாம். கடவுள் ஆன்மாவுக்குச் சுதந்தரத்தை அளித்து விட்டார். அந்தச் சுதந்தரத்தைக் கடவுளின் அருளால் ஆன்மா அடைந்துள்ளது. ஆன்மா கடவுளின் சக்தியால் விளைந்தது; எனவே, கடவுளின் சக்தியாலேயே ஜீவிக்கிறது. ஆன்மாவை ஜீவிக்கச் செய்வதே-செய்திருப்பதே-கடவுளின் வேலை.

கடவுளோடு இரண்டறக் கலத்தலே, இந்து மதத்தின் லட்சியம். ஆனால், சீக்கிய மதத்தின் லட்சியம் அதுவல்ல. ஆண்டவனிடம் ஆன்மா ஐக்கியம் அடைவதாக, அவர்கள் ஒப்புக் கொள்வதில்லை. கடவுளை அறிவதே அவர்களுடைய இறுதியான லட்சியம். காதலனும் காதலியும் ஒருவரையொருவர் கண்டு கலக்க விரும்புவது போல, அவர்கள் கடவுளைக் காண விரும்புகிறார்கள். அவருடன் இரண்டறக் கலக்க விரும்பவில்லை. 'காதலன் வேறு; காதலி வேறு' என்பதே போல், 'எந்நாளும் கடவுள் வேறு, ஆன்மா வேறாகவே இருக்கும்' என்பதே சீக்கியர்களின் சித்தாந்தம்.

கடவுளை மனிதன் அறிய முடியும் போது, அவன் பிறப்பிறப்பாகிய பிணியினின்றும் சுகதுக்கமாகிய சுழலினின்றும் விடுதலை யுற்று, என்று மழியாத நித்திய ஜீவனைப் பெற்று வாழ்கிறான். தாயின் மடிமீதிருக்கக் குழந்தை கரைவதே போலவும், காதலனும் காதலியும் ஒருவரை யொருவர் அணைய விரும்புவதே போலவும், ஆன்மா ஈசுவர சந்நிதியில் வாழ விரும்புகிறது. அதுவே - அந்த நிலை பெறுவதே-சீக்கியரின் மோட்சம்.

இந்த மோட்ச நிலையை எவ்வாறு அடைவது? அதற்குக் குறுக்குப் பாதை கிடையாது. மோட்ச லோகத்துக்கு அனுமதிச் சீட்டும் கிடையாது; அதை அளிப்போரு மில்லை. சீக்கியர்களுடைய பத்துக் குருமார்களுடைய கருத்துக்களையும் போதனைகளையும் திருக்கிராந்தம் என்னும் புஸ்தகத்திலே காணலாம். அதுவே சீக்கியரின் வேத புஸ்தகம். மனிதன் தன் செயல்களினாலும் கடவுளின் கருணையாலும் மோட்ச நிலையை அடைய முடியும் என்று அந்தப்புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. நல்லொழுக்கமும், சத்கர்மமும் அவசியமானவை. ஆனால், கடவுளின் கருணை நிச்சயமான ஒன்றாகும். சதா சர்வ காலமும் ஆண்டவனைத் தன் நெஞ்சிலிருத்தி வணங்கும் ஒரு சின்னஞ் சிறு எறும்பும் மோட்ச நிலை அடைய முடியும். ஆனால், மன்னர்களும் மன்னாதி மன்னர்களும், தங்களுடைய செல்வத்தினாலே அந்த நிலையை அடைய முடியாதென்று குரு நானக் கூறியிருக்கிறார். எனவே, கடவுளை என்றும் ஓயாமல் வணங்கி அவர் சித்தப்படி நடப்பதே மனிதன் மோட்சமடையும் மார்க்கமாகும்.

கடவுளை வணங்கத் துறவி வேஷம் பூணத் தேவையில்லை. எந்தத் தொழிலைச் செய்தாலும் எந்தநிலையிலிருந்தாலும், எப்போதும் ஆண்டவனை நெஞ்சில் போற்றிக்கொண்டிருந்தால் போதுமானது. அதுவே ஆன்மாவை மோட்ச நிலைக்கு இட்டுச் செல்லும். அதுவே ஆண்டவனின் கருணையைப் பெறும் வழி. கர்மத்தை - சத்கர்மத்தை - மனிதன் ஓயாமல் செய்து கொண்டிருக்க வேண்டு மென்பதே ஆண்டவனின் சித்தம்.

இந்த உலகத்தையும் இதிலுள்ள சகல ஜீவராசிகளையும் படைத்தவர் ஒரே கடவுள். எனவே, இந்த உலகிலுள்ள சகலரும் உடன்பிறந்தவர்களாகிறோம். எல்லோரையும் சகோதரர்களாகப்பாவித்து நடப்பதே சீக்கியரின் தர்மம். கடவுளின் திருஷ்டியிலே எல்லோரும் சமமானவர்களே. உயர்ந்தோரு மில்லை, தாழ்ந்தோரு மில்லை என்று குரு நானக் போதிக்கிறார். இவ்வாறு சகோதர வாஞ்சை பூண்டு நடக்கும்போது, நெஞ்சில் அன்பைத் தவிர, பகைமைக்கு இடமேது? தன்னைப் போலவே எல்லோரும் சமமாக உடன் வாழப் பிறந்தவர்கள் என்று மனிதன் உணரும் போது, பாவங்கள் எங்கிருந்து தோன்றும்? தீய செயல்களில் எப்படி ஈடுபட முடியும்?

கடவுளே தந்தை, மனிதர் யாவரும் சகோதரர் என்ற எண்ணம் மேலோங்கும் போது, காமக் குரோத லோப மோக அகங்காரங்களெல்லாம் இருந்த இடம்தெரியாமல் மறைந்து, உண்மை வாழ்வும், சகிப்புத் தன்மையும், தன்னடக்கமும், தர்ம சிந்தையும், கருணையும், பொறையும், போது மென்ற திருப்தியும், விசுவாசமும் மேலோங்கித் திகழும்.

எளிய வாழ்க்கையும், என்றுங் குன்றாத வீரமும், மறையாத உண்மையும், மறவாத சொல்லும், மங்காத வாஞ்சையும், தளராத நெஞ்சமும், அசையாத நம்பிக்கையும், அதற்கேற்ற பொறுமையும், எல்லையில்லா அன்பும் உள்ளவனே சீக்கியன்.

'உண்மை யாவற்றிலும் உயர்ந்தது. ஆனால், அதனினும் உயர்ந்தது உண்மையோடு வாழ்தல்.'

—நானக்.

வாழ்வும் சாவும்

சாகத் துணியாதவனின் வாழ்வு ஒரு வாழ்வல்ல. வாழத்துணிந்தவனுக்குச் சாவு சாவல்ல.

—ஸர் ஹென்றி நியூபோல்ட்.

அது கனவா?

மொப்பஸாங்

அவள் மேல் எனக்கு ஒரே காதல் வெறி. எதற்காகக் காதலிக்க வேண்டும்? ஒருவன் காதல் கொள்வது எதற்காக? உலகத்திலுள்ள இத்தனை பேரில், ஒரே ஒருத்தியிடம் மட்டும் ஏன் இப்படிச் சொக்கிப்போக வேண்டும்? பித்துப் பிடித்த மாதிரி, ஒரே ஒருத்தியைப்பற்றி ஏன் சிந்தித்த வண்ண மிருக்க வேண்டும்? சதா அவள் பெயரையே உருப்போட்டுத் திரிவது ஏன்? கடவுளைத் தோத்தரிப்பது போல, ஒரே ஒரு பெயரை அல்லும் பகலும் பஜனை செய்து வருவது எதனால்?... எல்லாம் விநோதமாய்த் தான் இருக்கிறது?

எங்கள் கதையைச் சொல்லட்டுமா? கதை பழைய கதை தான். காதலில், புதியது பழையது என்று என்ன இருக்கிறது? எல்லாம் ஒரே மாதிரி தானே. அவளைக் கண்டேன்; காதல் கொண்டேன். அவள் பேச்சிலும், நடையிலும், சல்லாபத்திலும், உல்லாசத்திலும் மனம் பறிகொடுத்து, இரவு பகலென்று பாராமல், சதா அவள் நினைவாகவே, அவள் தாசனாகவே இருந்து வந்தேன். உலக நினைப்பே அற்றுவிட்டது.

அப்புறம், அவள் மாண்டு போனாள். எப்படி மாண்டாள்? - அதுதான் எனக்குத் தெரியவில்லை. அவள் மாண்டபிறகு, நடந்தவொன்றுமே எனக்கு நினைவில்லை. என் மனம் உடைந்து விட்டது. ஒரு நாள் மாலை, நனைந்த உடையோடு, வீடு திரும்பினாள். வெளியில் ஒரே அடை மழை. மறுநாள் இருமிக் கொண்டே இருந்தாள். ஒரு வாரம்போல் இருமல் விடவில்லை. படுத்த படுக்கை தான். அப்போது என்ன நடந்ததென்று, இப்போது எனக்குச் சரியாய் நினைவில்லை. வைத்தியர்கள் வந்து வந்து போனார்கள். என்னென்னவோ சீட்டுக்களை எழுதி வைத்துவிட்டுப் போனார்கள். மருந்துகள் வாங்கினார்கள். யாரோ பெண்கள் அவளுக்கு மருந்தைக் கொடுத்துக் குடிக்கச் செய்துவந்தார்கள். அவள் கை சூடாயிருந்தது; நெற்றி நெருப்பாய்க் கொதித்தது; கண்ணில் ஒளி வீசிற்று; துயரமும் அதில் படிந்திருந்தது. நான் ஏதோ கேட்டதற்குப் பதில் சொன்னாள். இன்னது சொன்னாள் என்று நினைவில்லை. எல்லாம் மறந்து போயிற்று... எல்லாம், ஒன்று பாக்கியில்லாமல் எல்லாம் தான்! அவள் மடிந்தாள். அப்போது, அவள் மெல்ல, வலிவற்று, நெடுமூச் செறிந்தது எனக்கு நன்றாய் நினைவிருக்கிறது. கூட இருந்த தாதி 'த்ஸொ, த்ஸொ' என்றாள். எனக்கு விஷயம் விளங்கி விட்டது; நன்றாய் விளங்கிவிட்டது.

அதற்கு மேலே எனக்கு ஒன்றும் தெரியாது; ஒன்றுமே தெரியாது. ஒரு பாதிரியைக் கண்டேன். "உன் ஆசைநாயகியா?" என்று கேட்டார். அவளை அவர் அவமதித்ததாக எனக்குப் பட்டது. அவளோ, இறந்து விட்டாள்; இறந்தவளைப் பற்றி இழிவாகப் பேச யாருக்கும் உரிமையில்லை. பாதிரியை வீட்டை விட்டுத் துரத்தி விட்டேன். இன்னொருவர் வந்தார். மிகவும் பட்சமானவர்; கனிவானவர். அவளைப் பற்றி என்னிடம் அவர் பேசியபோது, எனக்குக் கண்ணீர் வந்து விட்டது.

மரணச் சடங்கைப் பற்றி என்னைக் கலந்தார்கள்; என்ன சொன்னார்களென்று நினைவில்லை. சவப் பெட்டி வந்தது; அதில் சுத்தியலால் ஆணி

சிறு கதை என்றால், உடனே நினைவில் வரக்கூடிய நிபுணர் கை டி மொப்பஸாங். சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த பிரஞ்சு நாவலாசிரியர். அவருடைய சிறு கதைகள் அன்று முதல் இன்று வரையில் நித்திய சௌந்தர்யம் பொலிந்து இணையற்று விளங்குகின்றன. மனித வாழ்க்கையின் மேற்பூச்சை, இந்தக் கதையிலேதான் அவர் என்ன நிர்த்தாட்சண்யத்துடன் அழித்து விடுகிறார்! இது சுப. நாராயணன் மொழிபெயர்ப்பு.

அறைந்து இருத்தினார்கள்... இவை நினைவிருக்கின்றன. அட கடவுளே, கடவுளே!

அவளைப் புதைத்து விட்டார்கள்! புதைத்தே விட்டார்கள்! அவள்! - அந்தக் குழியில்! யாரோ வந்தார்கள் சிநேகிதைகள். எனக்கு அங்கே இருக்கப் பிடிக்கவில்லை; நழுவி ஓடி விட்டேன். முதலில் ஓடினேன்; அப்புறம் நடந்தேன்; தெருவழியே சுற்றிவிட்டு, வீடு சேர்ந்தேன். மறு நாள், யாத்திரை கிளம்பினேன்.

நேற்றுப் பாரிசுக்குத் திரும்பினேன். என் அறையை, எங்கள் அறையை, பார்த்தேன். எங்கள் அறை, எங்கள் படுக்கை, எங்கள் தட்டு முட்டுச் சாமான்- செத்தவர்கள் விட்டு விட்டுப் போகிற மிச்சம் மீதிகள்-இவற்றைப் பார்த்ததுமே, எனது பழைய துக்கம் பூராவும் பொங்கியெழுந்து, என் நெஞ்சை அடைத்துக் கொண்டு விட்டது. ஜன்னலைத் திறந்து கொண்டு, அதன் வழியே குதித்து விழுந்து மாண்டு போகலாமா என்று கூடத் தோன்றியது. இந்தச் சாமான்களைப் பார்க்க, எனக்குச் சகிக்கவில்லை. அவளைப் பேணிக் காத்துவந்த இந்த அறையின் நாலு சுவருக்கு மத்தியில் இருக்கவே, எனக்குப் பிடிக்கவில்லை. சுவர்களில், நம் கண்ணுக்குத் தெரியாமலிருக்கும் இடுக்குகளில், அவள் உடலின் ஆயிரக் கணக்கான அணுக்கள் படிந்து கிடக்கும். அவள் சருமம், அவள் மூச்சு எல்லாம் ஆயிரம் ஆயிரம் அணு ரூபத்திலே, கண்ணுக்குத் தெரியாத சுவர் வெடிப்புக்களினிடையே, பொதிந்து கிடக்கும். - இங்கே, என்னால் தங்கியிருக்க முடியவே முடியாது. நழுவிப் போவதென்று தீர்மானித்து, தொப்பியைக் கையிலெடுத்துக் கொண்டேன். கதவை நெருங்கிய போது, கூடத்தில் இருந்த பெரிய நிலைக் கண்ணாடி என் கண்ணில் பட்டது. அவள் தான் இதை அங்கே வைத்திருந்தாள். வெளியே போகுமுன், உச்சி முதல் உள்ளங்கால் வரையில், ஒருமுறை தன் உருவத்தை இந்தக் கண்ணாடியிலே பார்த்துக் கொள்ளுவாள். அலங்காரம் சரியாயிருக்கிறதா என்று பார்த்துக் கொண்ட பிறகு தான், அவள் வெளிக் கிளம்புவாள்.

எத்தனையோ தரம் அவள் உருவத்தைப் பிரதிபலித்திருக்கும் இந்த நிலைக் கண்ணாடியின்முன், நான் சட்டென்று நின்றேன். எத்தனை தரம்! -ஒரு தரமா, இரண்டு தரமா? எண்ணற்ற தடவைகள் அவள் உருவத்தைப் பிரதிபலித்ததாலே, அவள் உருவம் அப்படியே கண்ணாடியில் வார்ப்படமாகியே இருக்கவேண்டும். நடுங்கிய வண்ணம் அங்கே நின்று கொண்டே யிருந்தேன். கண்ணைக் கண்ணாடியில் பதித்து விட்டேன். தட்டையாய், ஆழமாய், சூன்யமாய்க் காணப்பட்ட அந்தக் கண்ணாடியிலே, என் பார்வை லயித்துவிட்டது. நான் எப்படி அவளைச் சர்வாங்கமாய்த் தழுவி என் வசமாக்கியிருந்தேனோ, என் காமப் பார்வை எப்படி அவள் உருவம் பூராவையும் தொட்டணைத்து ஒன்று சேரத் தழுவிற்றோ, அதே போல இந்தக் கண்ணாடியும் அவளைச் சர்வாங்கமாய்த் தனக்குள் அடக்கி வைத்திருந்திருக்கிறது. கண்ணாடியின் மேல் எனக்கே காதல் பிறந்ததுபோல் தோன்றிற்று. கண்ணாடியைத் தொட்டுப் பார்த்தேன்; சில்லென்றிருந்தது. ஐயோ! பழைய நினைவுகள் தரும் தொல்லை கொஞ்ச நஞ்சமா! துக்ககரமான கண்ணாடி, அனலாய் எரியும் கண்ணாடி, கொடூரமான கண்ணாடி!-மனிதரை இவ்வளவு தூரம் வாதனையடையச் செய்யலாமா? மனத்திலுள்ள எல்லாவற்றையும், மனம் அறிந்த எல்லாவற்றையும், மனத்துக்குள்ளே இருந்துகொண்டு தன்னைத் தானே சோதனை போட்டுப் பார்க்கிற எல்லாவற்றையும், மனத்தில் எழுந்த அன்பின் அல்லது காதலின் பிரதிபிம்பமாக மனத்துடன் நிரம்புகிற எல்லாவற்றையும் மறந்துவிடக் கூடிய மனிதன் பாக்கியவானே! நான் படும் அவஸ்தை சொல்லி முடியாது!

வெளியே போனேன். என்னையறியாமலே, என் விருப்பத்துக்கு மாறாகவே, மயானத்தை நோக்கிப்போய்க்கொண்டிருந்தேன். எளிய

முறையில் அமைந்திருந்த அவள் புதை குழியின் மேலுள்ள வெள்ளைப் பளிங்குச் சிலுவையின் மேல், கீழே வரும் சில சொற்கள்தான் பொறிக்கப் பெற்றிருந்தன :

காதலித்தாள், காதலிக்கப் பெற்ருள், இறந்தாள்.

அதோ, அங்கே, பூமியின் கீழே கிடந்து அழுகுகிருள்! என்ன பயங்கரம்! நிலத்திலே நெற்றியை முட்டி மோதி, அழுது பொருமினேன். வெகு நேரம் அங்கே தங்கினேன். வெகு நேர மிருக்கும். அப்புறம், இருட்டுவது தெரிந்தது. தவித்துத் துடிக்கும் காதலர்க்கு உண்டாகிற ஆசை மாதிரி, எனக்கு ஒரு விநோதமான கிறுக்கு ஆசை உண்டாயிற்று. இரவை, எனது கடைசி இரவை, அவளது சவக் குழியின் மேல் கிடந்தழுத வண்ணமே கழிக்க விரும்பினேன். யாரும் என்னைப் பார்த்தால், துரத்தி விடுவார்களே! இதற்கு வழி என்ன? எனக்கா தெரியாது! எழுந்து, செத்தவர் நாட்டில் சுற்றித்திரிய ஆரம்பித்தேன். நடந்து நடந்து அலேந்தேன். உயிருள்ளவர்களாகிய நாம் வாழும் நாட்டுக்கும், செத்துப்போனவர்கள் வாழும் நாட்டுக்கும், எவ்வளவு வித்தியாச மிருக்கிறது? நமது நகரத்தைவிட இது எவ்வளவு சிறியதா யிருக்கிறது? அப்படியிருந்தும், இருப்பவர்களைவிட இறந்தவர்களின் தொகை எவ்வளவு அதிகம்! நமக்குப் பெரிய வீடுகள் வேண்டும்; விசாலமான தெருக்கள் வேண்டும்; ஊற்றின் நீரைப் பருகி, திராட்சைக் கொடியிலிருந்து கிடைக்கும் திராட்சை மதுவை அருந்தி, மைதானங்களிலிருந்து வரும் ரொட்டி உணவை உட்கொண்டு ஒரே காலத்தில் வாழும் நாலு சந்ததியார்க்குத் தேவையான ஏராளமான இட வசதி வேண்டும்.

இறந்தொழிந்த சந்ததிகள் அனைத்திலும், மனித சமுதாய ஏணிப் படியின் உச்சியில் தொடங்கி இன்று வாழ்கிற நம் வரைக்கும், யார் மிஞ்சியிருக்கிருர்கள்? ஒருவருமில்லை; ஒன்றுமே மிஞ்சவில்லை! கொடுத்ததைப் பூமி திரும்பவும் பெற்றுக்கொண்டு விடுகிறது. எல்லாரும் கண் காண இடத்தில் போய் அழிந்தொழிந்து விடுகிருர்கள்—போய்வாருங்கள்!

மயானத்தின் கடைசிப் பக்கத்தை அடைந்ததும், இதுதான் மயானத்தின் மிகப் பழைய பகுதி யென்று எனக்குச் சட்டென்று தெரியவந்தது. வெகு நாளைக்கு முன் செத்துப் போனவர்கள் இங்கே மண்ணோடு மண்ணாய்க் கலந்து போயிருப்பார்கள். புதை குழியின் மேல் நிறுத்தி வைத்திருந்த சிலுவைகள் கூட மக்கி இற்றுப் போய்விட்டன. நாளைக்கு யாரும் செத்தால், அவர்களையும் இந்த இடத்திலேதான் புதைப்பார்கள். இங்கே, எங்கு பார்த்தாலும் ரோஜாச் செடியும் பச்சை மரமும் அடர்ந்து, எதேச்சையாய் வளர்ந்து நிற்கும். களை பிடுங்கி, கவாத்துச் செய்வது கிடையாது. சோகம் நிறைந்த அழகிய காட்சிதான். மனிதச் சதையை எருவிட்டு வளர்த்த பூவும், செடியும், மரமும்!

நான் தனியா யிருந்தேன் - யாரும் இல்லாத பரிபூரணத் தனிமை. ஒரு மரத்தின் பின்னுலே ஒளிந்துகொண்டேன். கொத்துச் செடியும் புதரும் அடர்ந்திருந்ததால், என்னை யாரும் கண்டுபிடித்து விட முடியாது. காத்துக் கொண்டிருந்தேன். கவிழ்ந்துபோன கப்பலிலிருந்து தப்பியவன், மரத் துண்டைப் பற்றிக்கொண்டு உயிருக்காகப் போராடுவதைப் போல், நானும் மரத்தைக் கெட்டியாய்ப் பற்றிக் கொண்டு, புதரில் ஒளிந்து கிடந்தேன்

நன்ருய் இருட்டியதும், ஒளிவிடத்திலிருந்து வெளிப்பட்டு, மெதுவாய், ஓசைப்படாமல், அடிமேல் அடி எடுத்து வைத்து, செத்தவர்கள் நிரம்பிய அந்த இடத்தினூடே நடந்து திரியத் தொடங்கினேன். வெகு நேரம் இப்படி அலேந்தேன். அவள் சமாதியை மீண்டும் கண்டு கொள்ள முடியவில்லை. கையை அகல நீட்டிய வண்ணமே போனேன். அதனுல், என் கை, கால், முழங்கால், மார்பு, தலை - எல்லாமே சமாதிகளோடு முட்டி மோதிக் கொள்ளும். அப்போதும் அவளைக் கண்டு பிடிக்க முடியவில்லை. பொட்டையன் வழிதேடி யலைவது

போல். தடவித் தடவித் தடுமாறி னேன். சமாதிக் கற்கள், சிலுவை கள், இருப்புக் கிராதிகள், உலோகத் தாலான பூச் சுருள்கள், உலர்ந்து சருகாய்ப்போன பூச்சுருள்கள் எல் லாம் என் கையிலும் காலிலும் தட்டுப் பட்டன. கற்களின் மேல் விரலை வைத்துத் தடவிப் பார்த்துப் பெயர் களைப் படித்தறிந்தேன். அப்பா! என்ன கொடுமையான இரவு! என்ன கொடுமை! மறுபடியும் அவளைக் கண்டு பிடிக்க முடியவே யில்லை!

நிலவு இல்லை. என்ன கோர இரவு! பயந்துவிட்டேன். இரண்டு பக்க மும் வரிசையாய்ப் புதை குழிகள். எனக்கு நடுக்கமாய்ப் போயிற்று. புதை குழி! புதை குழி! புதை குழி! புதை குழியைத் தவிர வேறேதுமே இல்லை! எனக்கு முன்னே, எனக்குப் பின்னே, இடப்புறம், வலப்புறம், எங்கே பார்த்தாலும் ஒரே புதை குழி மயந்தான்! ஒரு புதை குழியின் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டேன். இனி நடக்க ஏலாது. கால் தள்ளாடிப் போயிற்று. நெஞ்சு 'படக்குப் படக்' என்று அடிக்கும் சத்தம் என் காதுக்கே நன்றாய்க் கேட்டது! இதோடு, வேறே சத்தமும் கேட்டது. என்ன அது? இன்ன தென்று விவரிக்கமுடியாத, குழம்பிய சத்தம். இந்தச் சத்தம் என் கற்பனை தானா; இல்லை, கண்ணுக்குப் புரியாத இரவி லிருந்து எழும்பியதா; அதுவுமில்லா மல், மனிதப் பிணம் விதைத்திருக் கும் மர்ம பூமியின் கீழே இருந்து கிளம்பியதா? எங்குஞ் சுற்றிப் பார்த் தேன். எவ்வளவு நேரம் அங்கே தங்கி யிருந்தேனோ தெரியாது. குலை நடுக்கத் தால் செயலற்றுப் போனேன்; பயத் தால் உடம்பு விறைத்துவிட்டது; வாய் விட்டு அலறிவிடத் தோன்றிற்று; சாகத் தயாராகி விட்டேன்.

இருந்தாற்போல் இருந்து, திடீரென நான் அமர்ந்திருந்த சமாதிக் கல் மெல்ல அசைந்த மாதிரி தோன் றிற்று. அது அசையத்தான் அசைந் தது; சந்தேக மில்லை. யாரோ தூக்கி யிருக்கவேண்டும். தடாரென்று குதித் தெழுந்தேன். அடுத்திருந்த சமாதி யருகில் போய் நின்றுகொண்டேன். சற்று முன் நான் உட்கார்ந்திருந்த கல் நேராய்க் கிளம்பி நின்றதைப் பார்த்தேன். ஆம், தெளிவாய்ப் பார்த்தேன். கல் நிமிர்ந்ததும் செத்த மனிதர் காட்சியளித்தார். அம்மண மான ஒரே எலும்புருவம். அது முதுகை வளைத்து அணை கொடுத்துக் கல்லை நிமிர்த்திப் பிடித்தது. இரவு 'கும்' என்று இருண்டு தானிருந்தது; இருந்தாலும், நடந்தது முழுவதும் எனக்குத் தெளிவாகத் தெரிந்தது.

சிலுவையில் எழுதியிருந்த விஷயத் தையும் என்னால் படிக்கமுடிந்தது:

> ஜாக் ஒலிவாண்ட் இங்கே சிடக்கி ருர். ஐம்பத்தி ஒன்றும் வயதில் இவர் இறந்தார். தம் குடும்பத்தை நேசித்தார். பட்சமானவர், கண் ணியவான். இறைவன் திருவடி சேர்ந்தார்.

சமாதிக் கல்லின்மேல் எழுதியிருந் ததை மாண்ட மனிதனும் படித்துப் பார்த்தான். பாதையில் கிடந்த கூரான சிறிய கல் ஒன்றை எடுத்துக்கொண்டான். ஏற்கெனவே எழுதியிருந்த எழுத்துக்களை அந்தக் கல்லால் தேய்த்துச் சுரண்டினான். மெல்ல மெல்ல எழுத்துக்கள் தேய்ந்து மறைந்தன. எழுத்திருந்த இடத்தைக் கண்குழியினால் பார்த்தான். அப் புறம், ஆள் காட்டி விரலாயிருந்த எலும்பின் நுனியைக்கொண்டு, மினு மினுப்பான எழுத்துக்களால் - சிறு வர்கள் தீக்குச்சியினால் சுவர்களில் கீறும்போது கந்தகத்தால் ஏற்படும் மினு மினுப்பைப் போல்-எழுதினான்:

> இங்கே ஜாக் ஒலிவாண்ட் உறங்குகிறார். ஐம்பத்தி ஒன்றும் வயதில் இவர் இறந்தார். தகப்ப னுடைய சொத்தைப் பெறுவதற் காக அவரைக் கொடுமைப் படுத்தி அகாலமாய்ச் சாகடித்தார். மனைவி யைச் சித்திர வதைக் குள்ளாக் கினர். மக்களைக் கொடுமைப் படுத் தினர். அண்டை அயலாரை ஏமாற்றினர். முடிந்த வரைக்கும் எல்லாரையும் கொள்ளையடித்தார். நாதியற்றுச் செத்தார்.

எழுதி முடிந்ததும், செத்தவன், அசையாமல் நின்றுகொண்டு, தான் எழுதியதைப் பார்த்துக்கொண்டிருந் தான். திரும்பிப் பார்த்தேன். எல் லாப் புதை குழிகளுமே திறந்து கிடந்

தன. அவற்றில் இருந்து செத்தவர்கள் எல்லாருமே வெளிக் கிளம்பிவிட்டார்கள். சவக் குழிக் கல்லின்மேல் தங்கள் உறவினர் எழுதியிருந்ததை, எல்லாருமே அழித்துவிட்டு, உள்ளது உள்ளபடி உண்மையை எழுதி வைத்துவிட்டார்கள். அப்போது நான் கண்டதென்ன? எல்லாரும் தத்தம் அண்டை அயலாரைத் துன்புறுத்தியிருக்கிறார்கள். - அத்தனை பேருமே கசடர்கள், பொய்யர்கள், பாஷாண்டிகள், பித்தலாட்டக்காரர்கள், குண்டர்கள், பழிகாரர்கள், பொறாமைக்காரர்கள். திருடியிருக்கிறார்கள்; ஏய்த்திருக்கிறார்கள். இந்த உத்தமத் தந்தையர், பத்தினிப் பெண்டிர், பிரியமுள்ள புதல்வர்கள்; கற்பு நெறி பிறழாத இந்தப் புதல்வியர்; நேர்மை தவறாத இந்த வியாபாரிகள்; அப்பழுக் கில்லாதவர்கள் என்று சொல்லப்பட்ட இந்த மனிதரும் ஸ்திரீகளும் - இவர்கள் அத்தனை பேருமே மகா ஆபாசமான, மகா கேவலமான எல்லாக் காரியங்களையும் செய்திருக்கிறார்கள். தங்கள் சாசுவத வாழ்விடத்தின் வாயிற்படியில் இருந்தபடி, இவர்கள் அனைவரும், ஏக சமயத்திலே, உண்மையை - கொடூரமான, புனிதத்துவம் வாய்ந்த உண்மையை-எழுதிக் கொண் டிருந்தார்கள். இவர்களது ஜீவிய காலத்தில் இந்த உண்மைகள் யாருக்கும் தெரியாது; தெரிந்தாலும், எவரும் தெரியாததுபோலவேபாவனை பண்ணி விடுவார்கள்.

அவளும், தனது சமாதிக் கல்லில் ஏதாவது எழுதியிருப்பாளே! இப்போது எனக்குப் பயம் விட்டுப் போயிற்று. பாதி திறந்து கிடந்த சவப் பெட்டிகளினூடே, பிணங்கள், எலும்புக் கூடுகளினூடே, அவளை நாடி ஓடினேன். உடனே அவளைக் கண்டு விடலாமென்று நிச்சய மேற்பட்டுவிட்டது. சீலைத் துணியில் சுற்றியிருந்த அவளது முகத்தைப் பார்க்காமலே, அவளை நான் அடையாளங் கண்டு பிடித்துவிட்டேன். பளிங்குச் சிலுவையின் முன்பு

காதலித்தாள், காதலிக்கப்பட்டாள், இறந்தாள்

என்று எழுதியிருந்த இடத்திலே, இப்போது,

தன் காதலனை ஏமாற்றுவதன் நிமித்தம் ஒரு நாள் மழையில் வெளியே போய் வந்ததால், தடிமன் பிடித்துச் செத்தாள்

என்று எழுதியிருந்தது.

மறுநாள் காலையில், சவக் குழியின் மேல் மூர்ச்சை போட்டுக் கிடந்த என்னை, யாரோ கண்டு பிடித்தார்களாம்.

✲

காந்திஜியின் காரணங்கள்

நிருபர்: நீங்கள் ஏன் ஒரு போதும் நிலைக்கண்ணாடியில் உங்கள் முகத்தைப் பார்ப்பதில்லை?

காந்தி: என்னைச் சந்திக்கும் ஒவ்வொருவரும் என் முகத்தைப் பார்க்கும்போது, நிலைக்கண்ணாடியில் முகம் பார்க்க எனக்கென்ன தேவை?

நிருபர்: பருமனான மெத்தையில் ஏன் நீங்கள் படுப்பதில்லை?

காந்தி: இந்தியாவின் கோடிக் கணக்கான ஏழை மக்களோடு ஒன்றாய்க் கலந்துகொள்ள, என்னாலான காரியமெல்லாம் செய்வதே காரணம்.

நிருபர்: ரயிலில் ஏன் எப்போதும் மூன்றாம் வகுப்பிலேயே நீங்கள் பிரயாணம் செய்கிறீர்கள்?

காந்தி: இதற்கும் மேலே சொன்ன பதில் தான்.

நிருபர்: உங்கள் உணவிலே, ஏன் உப்பும் மசாலையும் சேர்த்துக் கொள்வதில்லை?

காந்தி: என் உடம்புக்குத் தேவையில்லாத பொருள்களை நான் ஏன் உட்கொள்ளவேண்டும்?

சிக்கியர்கள் - தேநீர் அருந்தும் நேரம்

சிக்கியர்களிடமுள்ள திடத்திற்கும் ஊக்கத்திற்கும் முக்கிய காரணம் அவர்கள் உணவில் ஏற்படுத்தியுள்ள கட்டுப்பாடு தான். உணவைக் கட்டுப்படுத்தினாலும் தேநீர் அருந்துவதை அவர்கள் தள்ளிவிட வில்லை.

சிக்கியர்கள் நடைமுறைக்கு ஒத்த பழக்கங்களையே அனுசரிப்பார்கள். எனவே, அவர்களுடைய பழக்க வழக்கங்கள் எல்லாம் அனுபவத்தில் தேர்ந்து எடுக்கப் பட்டவை. கண்ணை மூடிக்கொண்டு செய்ததையே திரும்பத் திரும்பச் செய்யும் வழக்கம் அவர்களிடம் கிடையாது. தேநீர் அருந்தும் பழக்கத்தை அவர்கள் ஏற்படுத்திக் கொண்டார்களானால், அது சுறுசுறுப்பும் வீரமும் கலந்த அவர்கள் வாழ்க்கைக்கு மிகவும் பொருத்தமானது என்பது தெரிகிறது அல்லவா?

இந்தியாவின் வடக்கேயுள்ள அவர்கள் தாய் நாட்டிலோ ஒன்று அசாத்தியமான உஷ்ணமா யிருக்கும்; அல்லது தாங்கமுடியாத குளிராய் இருக்கும். இந்த சீதோஷ்ண நிலையில் இதத்தைக் கொடுப்பது சூடான தேநீர்தான் என்பதை அவர்கள் நன்கு உணர்ந்து இருக்கிறார்கள். இங்கு, சூடான தேநீர் சாதாரணமாகப் பால், சீனியுடன் கலந்து விநியோகிக்கப்பட்டு பித்தளை லோட்டாக்களில் குடிக்கப்படுகிறது. கோடைக்காலத்தில், குளிர்மையையும், உற்சாகத்தையும் கொடுப்பது தேநீர்; குளிர்காலத்தில், குளிரிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதும் தேநீரே.

சிக்கியர்களை இந்தியா எங்கும் நீங்கள் காணலாம்; எட்டாக்கையிலுள்ள கிராமங்களிலுங் கூடப் புத்தப் புதிய ப்ரூக் பாண்ட் தேயிலை சிக்கியர்கள் பரவியதைக் காட்டிலும் அதிகமாக வியாபித்திருக்கிறது.

ப்ரூக் பாண்ட்

"இரு இலையும் ஒரு மொட்டும்"

காலத்திற்குகந்த காவலன். மற்றக்காரியங்களைப் போலவே, விமான மோட்டுவதையும், சந்தர்ப்பம் நேரும்போது, இந்தியாவால் சமாளிக்க முடியுமென்பதை இந்த யுத்தம் ஆரம்பமானதிலிருந்து எத்தனையோ இந்தியன் பைலட்டுகள் உலகறிய நிரூபித்துள்ளனர். வீரச்செயல்களும் அரும் பெரும் சாகசங்களும் ராயல் இந்தியன் ஆகாயப் படையை ஏற்கெனவே பெயரும் பெருமையும் ஓங்கச் செய்தாய்விட்டது—ஆனது, வருங் காலத்திற்கு ஓர் சுப சூசகமேயாகும். இன்று, இப்பெருமை வாய்ந்த, இளைய செர்வீஸில் பைலட்டுகள் ஆவதற்கு அதிக மதிகம் வீர இளைஞர்கள் அழைக்கப்படுகின்றனர். மீண்டும் சமாதானம் வரும்போது அவர்களுடைய அறிவு அவர்களுக்கும் இந்தியாவுக்கும் ஒரு ஆஸ்தியாகும். இன்றைப் போலவே அன்றும் ராயல் இந்தியன் ஆகாயப் படையுடன் பறந்திருக்கும் பைலட்டே காலத்திற்குகந்த காவலனவன்.

எப்படி மனுப் போடுவதென்பதை எந்த ரிக்ரூடிங் ஆபீஸரிடமிருந்தும் தெரிந்துக் கொள்ளலாம்.

பிரடெரிக் எங்கெல்ஸ்

வெ. ராமசாமி

டார்வின் உயிர் வர்க்கத்தின் வளர்ச்சியைப் பற்றிய உண்மையைக் கண்டு பிடித்தார். கார்ல் மார்க்ஸ் மனித சமுதாயத்தின் வளர்ச்சியைப் பற்றிய உண்மையைக் கண்டு பிடித்தார். அரசியல், மதம், கலை, சயன்ஸ் போன்ற காரியங்களில் எல்லாம் மனிதன் ஆவேசத்தோடு ஈடுபடுகிறான் என்பது உண்மையே. ஆனால், இவற்றில் ஈடுபடுமுன், அவன் உயிரோடு இருக்க வேண்டுமல்லவா? உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் மனிதன் உயிரோடிருக்க அத்தியாவசியமாகத் தேவைப்படுகிற காரியங்கள். உடனடியாகத் தேவைப்படுகிற இந்தப் பொருள்களையெல்லாம் உற்பத்தி செய்வதில், அவன் ஈடுபட்டுத்தான் ஆகவேண்டியிருக்கிறது. இவைகளை உற்பத்திசெய்கிற முறையைக்கொண்டே, ஒரு குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட ஒரு மக்கள் கூட்டம் பொருளாதாரத்துறையில் எவ்வளவுதூரம் முன்னேறியிருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ளமுடிகிறது. பொருளாதார முன்னேற்றம் என்ற இந்த அடிப்படையின் மீதே, அரசியல், நியாயம், கலை, மதம் என்கிற கட்டடங்களெல்லாம் எழுப்பப்பட்டிருக்கின்றன. எளிதில் தெரிந்து கொள்ளக் கூடிய சாமானியமான உண்மைதான் இது. ஆனால், உண்மை போல் தோன்றுகிற பொய்களைக் கொண்டு இன்றைய சமுதாயம் இதை மூடி வைத்திருக்கிறது. இவைகளையெல்லாம் நீக்கிவிட்டு, கார்ல் மார்க்ஸ் உண்மையை உள்ளபடியே நமக்குக் காட்டுகிறார். இது அவர் மனித சமுதாயத்துக்குச் செய்த பெரிய சேவை.

பொது உடைமைத் தத்துவத்தின் 'வேதம்' போன்றது கார்ல் மார்க்ஸின் நூல்கள். அவருக்கு உயிர்த் தோழராக இருந்து, அவர் நூல்களை எழுதுவதில் தாமும் பெரும் பங்கு எடுத்துக்கொண்ட அறிஞன் எங்கெல்ஸ். மார்க்ஸ் வேறே, எங்கெல்ஸ் வேறேயாக, நாம் பிரித்தெண்ண முடியாதபடி, அவ்வளவு தொடர்புடன் அவர்கள் வாழ்ந்தார்கள். மார்க்ஸை அறிய விரும்புவோர் எங்கெல்ஸையும் அறிவது அவசியமாகும்.

கார்ல் மார்க்ஸ் என்று சொன்னவுடனேயே, பிரடெரிக் எங்கெல்ஸ் நம் கண்முன் வந்து நிற்கிறார். உயிரும் உடலும் போல் வாழ்ந்த இந்த இரண்டு நண்பர்களையும் பிரித்து எண்ணுவது சாத்தியமான காரியமல்ல. மனித சமுதாய வளர்ச்சிக்கே திறவுகோல் போல இருக்கும் பேருண்மையை மார்க்ஸ் கண்டு பிடித்தார் என்றால், மார்க்சுக்கு உதவியாக இருந்து உலக மக்களுக்கு அதைத் தெளிவுபடுத்தி விளக்கிச் சொன்ன பெருமை எங்கெல்சைச் சார்ந்ததாகும்.

பிரடெரிக் எங்கெல்ஸ் ஜெர்மனியில் ரைன் மாகாணத்தில் பிரமென் என்ற நகரத்தில் 1820-ஆம் ஆண்டில் பிறந்தார். பிரஷ்ய அரசாங்கம் அப்போது ஜெர்மனியில் ஆட்சி செய்து கொண்டிருந்தது. இவர் தந்தை ஒரு குட்டி முதலாளியாக இருந்து, தொழிற்சாலையொன்றை நடத்தி வந்தார். இளம் எங்கெல்ஸ் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். ஆனால், கல்வி முற்றுப் பெறுமுன்பே, அவர் வர்த்தகத் துறையில் ஈடுபடும்படி ஆயிற்று. பிரமென் என்ற நகரிலுள்ள வர்த்தக நிலயம் ஒன்றில் அவர் வேலைக்கமர்ந்தார். அந்த வர்த்தக நிலயத்தின் சாமான்களை விற்பதுதான் அவர் வேலை. வர்த்தக நிலயங்களின் விற்பனையாளர்கள் இன்று கையாளும் தந்திரங்களையும் அவர்கள் செய்கிற சாமர்த்தியங்களையும், நாம் நன்றாக அறிவோம். ஆனால், இளம்பிராயத்திலிருந்த எங்கெல்ஸ், அந்தத் துறையில் அவ்வளவு சாமர்த்தியம் காட்டியதாகத் தெரியவில்லை. சாமான்களை விற்பதைவிட, சயன்ஸ், அரசியல் சம்பந்தமான புத்தகங்களைப் படிப்பதிலேயே, அவர் அதிக

ஆர்வம் காட்டினர். தத்துவ சாஸ்திரத்தில் அவருக்கு ரொம்ப ஈடுபாடு. கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே, அதிகார வெறி கொண்ட பிரஷ்ய அரசாங்கத்தையும் அந்த அரசாங்கத்தின் உத்தியோகஸ்தர்கள் செய்யும் அடாபிடித் தனங்களையும் அவர் வெறுக்க ஆரம்பித்தார். தத்துவ சாஸ்திரத்தில் அவர் அதிகமாக ஈடுபட ஈடுபட, இந்த வெறுப்பு இன்னும் அதிகப்பட்டது.

அந்தக் காலத்தில், ஜெர்மனியில் ஹெகல் பிரபலமான தத்துவ நிபுணராக விளங்கினர். அவருடைய தத்துவ போதனைக்கு அதிக மதிப்பு இருந்ததோடு, ஏராளமான சிஷ்யர்களும் அவருக்கு இருந்தார்கள். எங்கெல்சின் மனதையும் அவருடைய தத்துவபோதனை கவர்ந்தது. எங்கெல்சும் அவருடைய சிஷ்யரானர்.

ஹெகல் பிரஷ்ய சுயேச்சாதிகாரத்தை நியாயம் என்று சொல்பவர். அவர் அதை ரொம்பப் போற்றிப் பேசுவதும் உண்டு. அந்த அரசாங்கத்தின் சேவையில், பெர்லின் சர்வகலாசாலைப் பேராசிரியாக அவர் இருந்தார். ஆயினும், அவர் செய்து வந்த தத்துவ போதனை ரொம்பப் புரட்சிகரமானது. நியாயம், உரிமை என்கிற விஷயங்களில் ஹெகலுக்கு உறுதியான நம்பிக்கை இருந்தது. உலகத்தில் காணப்படும் எல்லாப் பொருள்களும் மாறிக் கொண்டும் வளர்ந்துகொண்டும் இருக்கின்றன என்று அவர் எண்ணினர். பிரஷ்ய அரசாங்கத்தில் வெறுப்பும் கோபமும் கொண்டிருந்த அவர் காலத்து இளைஞர்களுக் கெல்லாம் இந்தத் தத்துவ போதனை பெரிதும் ஆறுதலளித்தது. மாற்றமும் வளர்ச்சியும் எல்லாப் பொருள்களின் விஷயத்திலும் சட்டமாக இருக்கும்போது, அதிகார வெறி கொண்ட பிரஷ்ய அரசாங்கமும் மாறித்தானே ஆகவேண்டும் என்று அவர்கள் எண்ணினர்கள். இந்த எண்ணம் அவர்களுக்கு நம்பிக்கையையும் உற்சாகத்தையும் அளித்தது.

ஹெகலின் தத்துவம் மனதையும் எண்ணங்களையும் முக்கியமாகக் கருதுகிறது. மனதின் வளர்ச்சியிலிருந்து தான் இயற்கையின் வளர்ச்சியும், மனித சமுதாயத்தின் வளர்ச்சியும் ஏற்படுகின்றன என்பது ஹெகலின் கொள்கை. எல்லாப் பொருள்களும் சதா மாறுதல் அடைந்து கொண்டும், வளர்ந்து கொண்டும் இருக்கின்றன என்பதை ஹெகலின் சித்தாந்தத்திலிருந்து மார்க்சும் எங்கெல்சும் எடுத்துக் கொண்டார்கள். ஆனல், மனதும் எண்ணங்களும் எல்லா வளர்ச்சிக்கும் அடிப்படை என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார்கள். மனதின் வளர்ச்சியிலிருந்து இயற்கையின் வளர்ச்சி ஏற்படவில்லை. அதற்கு மாருக, இயற்கையின் வளர்ச்சியிலிருந்தே மனதின் வளர்ச்சி ஏற்படுகிறதென்பதை அவர்கள் நிலைநாட்டினர்கள். இயற்கையின் தோற்றங்களுக்கு மூலகாரணமாகவுள்ள சடப்பொருளே (matter), மனித சமுதாய வளர்ச்சிக்கும் அடிப்படையாக இருக்கிறது. ஆதலால், பொருள்களின் உற்பத்திச் சாதனங்களைப் பொறுத்தே, மனித சமுதாய வளர்ச்சியும் இருக்கிறது. இந்த உற்பத்திச் சாதனங்களின் அபிவிருத்தியை யொட்டியே,மனிதர்களுக்குள் காணப்படும் சம்பந்தா சம்பந்தங்களும் வேற்றுமைகளும் ஏற்படுகின்றன. ஒருவரை முதலாளி என்கிருேம், இன்னெருவரைத் தொழிலாளர் என்கிருேம். ஒருவரை உயர்ந்த ஜாதி என்கிருேம், இன்னெருவரைத் தாழ்ந்த ஜாதி என்கிருேம். இந்தப் பாகுபாடுகள் யாவும் உண்டாகக் காரணமா யிருந்தது மேலே சொன்ன உற்பத்திச் சாதனங்களின் வளர்ச்சிதான். சாமான்களை உற்பத்தி செய்யும் போது, மக்களில் ஒருவருக் கொருவரிடையே தோன்றும் தொடர்புகளின் நிலைமையிலிருந்தே சமுதாய வாழ்க்கை, அபிலாஷைகள், எண்ணங்கள், சட்டங்கள் ஆகிய இவைகள் யாவும் உருவாகக் காண்கிருேம்.

உற்பத்திச் சாதனங்களில் ஏற்படும் இந்த அபிவிருத்தி சொந்தச் சொத்துரிமையை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமுதாயத்தைச் சிருட்

டிக்கிறது. அதே அபிவிருத்தி பெரும்பான்மையான மக்களை ஏழையாக்கி, ஒரு சிலருடைய கையில் எல்லாச் சொத்தையும் கொண்டுபோய்ச் சேர்க்கிறது. உற்பத்திச்சாதனங்கள்மேலும் வளர்ச்சி யடைகிறபோது, இன்றைய சமுதாயத்தின் அடிப்படையாக இருக்கும் தனிச் சொத்துரிமை யழிந்து, சமதர்ம அமைப்பு உருவாகிறது. இன்று காணப்படும் சமுதாய சக்திகளில் எது சமதர்ம அமைப்பைக் கொண்டு வருவதில் கவலையுள்ளது, எதிர்காலத்தில் சமதர்மம் தான் நிலவப் போகிறதென்பதை உணர்ந்து எது அந்த உணர்ச்சியை ஊட்டுகிறது என்பதைக் கண்டு பிடிப்பது தான் சமதர்மிகள் செய்யவேண்டிய வேலை. பாட்டாளி மக்கள் தான் இந்தச் சமுதாய சக்தி என்பதை எங்கெல்ஸ், மான்செஸ்டரில் இருக்கும் போதே தெரிந்து கொண்டு விட்டார்.

1842-ஆம் வருஷம் எங்கெல்ஸ் மான்செஸ்டருக்குப் போனார். மான்செஸ்டர் அப்போது பிரிட்டிஷ் தொழிலுக்கு நடுநாயகமாக விளங்கியது. அங்குள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் எங்கெல்சின் தகப்பனார் பங்குதாராக இருந்தார். அந்த வர்த்தக நிலயத்தில் எங்கெல்ஸ் வேலைக் கமர்ந்தார். தொழிற்சாலையில் உட்கார்ந்து கொண்டு வேலை பார்ப்பதோடு எங்கெல்ஸ் நின்றுவிடவில்லை. அந்தப் பக்கத்திலுள்ள தொழிலாளர்களின் குடியிருப்புக்களையும், கட்டுத்தறிகளைப் போலக் காட்சியளிக்கும் அவர்கள் வசிக்கும் வீடுகளையும் அவர் அடிக்கடி போய்ப் பார்ப்பார். அவர்களின் கேவலமான வாழ்க்கை நிலையையும், அவர்கள் படும் துன்பங்களையும் பார்ப்பதோடு அமையாமல், அவை சம்பந்தமான புத்தகங்களையும், உத்தியோக அறிக்கைகளையும், அவர் படிக்க ஆரம்பித்தார்.

இந்த ஆராய்ச்சிகளின் பயனாக, இங்கிலாந்தில் தொழிலாளர்களின் நிலைமை என்ற புத்தகத்தை எழுதினார். இந்தப்புத்தகம் வெளிவருவதற்கு முன், தொழிலாளர்களின் கஷ்டங்களையும் வறுமையையும் பற்றி எத்தனையோ புத்தகங்கள் வெளியாகி இருந்தன. ஆனால், அந்தப் புத்தகங்களை எழுதியவர்க ளெல்லோரும் தொழிலாளர்களுக்கு உதவி செய்து அவர்களைக் கைதூக்கி விடவேண்டுமென்று சொன்னார்களே யன்றி, தொழிலாளர்களே ஒரு சக்தி, அவர்கள் தங்கள் சொந்த முயற்சியினாலேயே சமதர்ம அமைப்பைக் கொண்டு வரப்போகிறார்கள் என்று ஒருவரும் சொல்லவில்லை. எங்கெல்ஸ் தான் அதைச் சந்தேகத்துக்கு இடமின்றி இந்தப் புத்தகத்தில் எடுத்துச் சொன்னார். முதலாளித்துவ முறையையும், பூர்ஷ்வாக்களையும் இதை விடப் பலமாகக் கண்டிக்கிற புத்தகத்தை நாம் என்றும் காணமுடியாது. தொழிலாளர்களின் நிலையைப்பற்றிய உண்மையை இந்தப் புத்தகத்தைப் போல் எடுத்துச் சொன்ன புத்தகமும் இல்லை.

எங்கெல்ஸ் சமதர்மவாதியானது இங்கிலாந்திலேதான். மான்செஸ்டரில் பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபட்டு, பல சமதர்மப் பத்திரிகைகளுக்கு இவர் கட்டுரை எழுத ஆரம்பித்தார். 1844-ஆம் வருஷம் பாரிஸ் வழியாக ஜெர்மனி சென்றார். அப்போது பாரிஸ் நகரில் முதன் முதலாக அவர் கார்ல் மார்க்சைச் சந்தித்தார். பிரஞ்சு சமதர்ம வாதிகளின் சேர்க்கையால் கார்ல் மார்க்சும் சமதர்மவாதியாக மாறியிருந்த காலம் அது. இங்கே தான் இருவரும் சேர்ந்து 'புனிதமான குடும்பம்' என்ற புத்தகத்தை எழுதினார்கள். பாட்டாளி மக்கள் என்ன காரியத்தைச் சாதித்து விட முடியும், அவர்கள் மாக்களே யன்றி மக்களல்ல என்று பிரசாரம் செய்துவந்த பாயரையும் அவருடைய சகாக்களையும் தாக்கி எழுதிய புத்தகம் இது.

1844-ஆம் வருஷம் எங்கெல்ஸ் தம் சொந்த ஊராகிய பிரமெனுக்குப் போய்ச் சேர்ந்தார். அவருக்கு அங்கே ஒன்றுமே பிடிக்கவில்லை. அந்தச் சூழ்நிலை அவருக்கு வெறுப்பை யளித்தது; மனதும் இருப்புக்கொள்ளவில்லை. அங்கிருந்து வெளியே சென்று விடுவதென்று முயன்றார். ஆனால், தாயாரிடம் அவருக்கு ரொம்பப் பிரி

யம். தாயாரின் மனம் துக்கப்படக் கூடா தென்பதற் காகவே, அவர் அங்கே கஷ்டப்பட்டுக்கொண்டு எப்படியோ இருந்தார். அவர் தகப்பனர் வீட்டில் சர்வாதிகார அமுல் நடத்தினர். அரசியல் கூட்டங்களுக்கு எங்கெல்ஸ் அடிக்கடிப் போவார். இது அவருடைய தகப்பனருக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. பொதுவுடைமைச் சித்தாந்தத்தில் எங்கெல்சுக்கு அதிகமான ஈடுபாடு இருந்தது அவர் தந்தையாருக்கு ரொம்பக் கோபத்தை மூட்டியது. அந்தச் சமயத்தில் அவர் மார்க்சுக்கு எழுதிய முதல் கடிதத்தில் கீழ்வருமாறு குறிப்பிடுகிறர் :

"நான் வெளிப்படுவதற்கு இன்னும் சில நாட்களே இருக்கின்றன. ஆயினும், இந்தச் சில நாட்களையும் எப்படிக் கழிக்கப் போகிறேனே, தெரியவில்லை. தாயார்மீதுள்ள அன்புதான் இவ்வளவையும் சகித்துக் கொள்ளும்படி செய்கிறது. நான் போகக்கூடா தென்பதற்கு எங்கள் குடும்ப ஜனங்கள் சொல்லும் காரணங்கள் விசித்திரமானவை. பயங்காட்டி என் பயணத்தை நிறுத்தப் பார்க்கிறர்கள் !"

எங்கெல்ஸ் புறப்படுவதற்கு முயன்று கொண்டிருந்தார். அவர் தகப்பனர் அவர்களுக்குச் சொந்தமான தொழிற்சாலை நிலயத்தில் வேலை பார்க்கும்படி அவரை வற்புறுத்தினர். அந்தச் சமயம் எங்கெல்ஸ் ஒரு பெண்ணைக் காதலித்து வந்தார். அதனல் இன்னும் சில நாட்கள் அங்கேயே தங்கலாம் என்று அவர் எண்ணினர். எனவே, தொழிற்சாலை நிர்வாக நிலயத்தில் இரண்டு வாரம் அவர் வேலை பார்த்தார். அந்தச் சமயத்தில் அவர் மார்க்சுக்கு எழுதிய கடிதம் வருமாறு :

"வர்த்தகம் என்பது வெறுக்கத் தக்க, கேவலமான ஒரு காரியம். பிரமென் நகரமும் வெறுக்கத் தக்க ஒரு நகரமே. இங்கே பூர்ஷ்வாக்கள் காலத்தை வீணக்குகிற முறையைப் பார்க்கும்போது, என்னல் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. பூர்ஷ்வாவாக இருப்பதோடு அமையாமல், ஒருதொழில்முதலாளியாகவும் இருந்துவிட்டால், கேட்கவா வேண்டும்? பாட்டாளி மக்களுக்கு நேரடியான விரோதியாக இருப்பவன்தான் தொழில் முதலாளி. தொழிலாளர்களின் நிலைமையைப் பற்றி ஒரு புத்தகம் எழுதிக் கொண்டிருக்கிறேன். அதுதான் எனக்குச் சிறிது மனச் சாந்தியை அளிக்கிறது. ஒரு பொதுவுடைமை வாதி வெளித்தோற்றத்தில் ஒரு பூர்ஷ்வாவாகவும், தெருவில் சாமான்களை விலை கூறி விற்கும் அங்காடியாகவும் இருக்கலாம். ஆனல், அதே சமயத்தில் அந்த ஆசாமி பொதுவுடைமைப் பிரசாரத்தில் ஈடுபடுவதும், வர்த்தகத்துறையில் பங்கு கொண்டு அங்காடியாக இருப்பதும் முடியாத காரியம். மேலும், சமயத்தில் தோய்ந்திருக்கும் உயிரற்ற இந்த ஜனங்களின் வாழ்க்கையையும் இனி என்னல் சகித்துக்கொள்ள முடியாது. இப்படியே இன்னும் கொஞ்ச காலம் இருந்தேன் என்றல், சுக போகத்தையும், தன்னலத்தையும் அடிப்படையாகக் கொண்ட இவர்களின் போலிச் சித்தாந்தத்துக்கு அடிமையாகிப் பொதுவுடைமையிலும் அதைப் புகுத்தி விடுவேன் என்று அஞ்சுகிறேன்."

எவ்வளவு உணர்ச்சி வேகத்தோடு எங்கெல்ஸ் இந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறர் !

1844-ஆம் வருஷம் ஜெர்மானியர்களின் பொது வாழ்க்கை, இன்றைய இந்தியர்களின் பொது வாழ்க்கையை ஒத்திருந்தது. எல்லோரும் ஆவேசத்தோடு அரசியல் பிரசினைகளில் கலந்துகொண்டார்கள். அரசாங்கத்துக்கு விரோதமாகப் பொது ஜனங்களிடையே கோபம் பொங்கிக்கொண்டிருந்தது. நாஸ்திகர்களாக இருக்கிறர்களென்று சமயத் தலைவர்கள் இளைஞர்களைத் தாக்கிக் கொண்டிருந்தார்கள். வேலைக்காரர்களை அடாவடித்தனமாக நடத்துகிறர்களென்று பூர்ஷ்வாக் குடும்பங்களில் பெற்றேரோடு பிள்ளைகள் சண்டை போட்டுக் கொண்டார்கள். எதைச் சொன்னலும் அதை எதிர்த்துச்

88852

சொல்ல வேண்டு மென்ற ஒரு மன நிலை ஏற்பட்டது. இந்த மன நிலையின் காரணமாக எல்லோரும் தங்களைப் பொதுவுடைமை வாதிகள் என்று சொல்லிக் கொண்டார்கள். இன்று நமது நாட்டில் அந்நிய ஆட்சிக்குத் தாசானுதாசர்களாக இருப்பவர்களும், மகாராஜாக்களும், திவான்களும், கோடிப் பணக்காரர்களும், பிறமித் தலைவர்களும், மதாசாரியர்களும் கூட, தங்களைப் பொதுவுடைமை வாதிகள் என்று சொல்லிக் கொள்வதை நாம் பார்க்கவில்லையா? பொல்லாத பொதுவுடைமை வாதிகள் இவர்கள்! இதே மாதிரி ஜெர்மனியிலும் எல்லோரும் தங்களைப் பொதுவுடைமை வாதியென்று சொல்லிக் கொண்டார்கள். இதைப்பற்றி எங்கெல்ஸ் எவ்வளவு ஏளனத்தோடு மார்சுக்கு எழுதுகிறார் பாருங்கள்:

"பிரமென் நகரில் இருக்கிற போலீஸ் அதிகாரி ஒரு பொதுவுடைமை வாதி! கொலான், டசெல்டார்ப், எபர்பீல்ட் - இந்த இடங்களில் எல்லாம் நான் இருந்திருக்கிறேன். இந்தப் பகுதிகளில், மூலை, முடுக்கு, சந்து, பொந்து, எந்தப் பக்கம் திரும்பினாலும் பொதுவுடைமை வாதிகளாகவே இருக்கிறார்கள்!

"எபர்பீல்டில் அற்புதங்கள் நடந்து கொண் டிருக்கின்றன. ஒரு பிரம்மாண்டமான கட்டடத்தில் எங்கள் மூன்றாவது பொதுவுடைமை மகாநாட்டை நடத்தினோம். 200 பேருக்கு மேல் வந்திருந்தார்கள். எபர்பீல்ட், பிரமென் என்ற இடங்களிலுள்ள பெரிய பணக்காரர்கள், சாமானியக் கடைக்காரர்கள் வரை இந்தக் கூட்டத்தில் எல்லோருக்கும் பிரதிநிதிகள் இருந்தார்கள். இந்தப் பொதுவுடைமைக் கூட்டத்தில் கலந்து கொள்ளாத வர்க்கத்தார் பாட்டாளி மக்களே!"

அன்றைய ஜெர்மனியில் இன்றைய இந்தியாவைப் போல் பாட்டாளி மக்களைத் தவிர ஏனைய வகுப்பினர் யாவரும் பொதுவுடைமை வாதிகளாக இருந்தார்கள்! பொதுவாக, தாங்கள் விரும்பாத எதையும் எதிர்த்துப் பேசுவதற்குப் பொதுவுடைமையை உபயோகித்துக் கொண்டார்கள் பூர்ஷ்வாக்கள்.

1845 முதல் 1847 வரை மார்க்சும் எங்கெல்சும் பிரசெல்சிலும் பாரிசிலுமாக வாழ்ந்து வந்தார்கள். இந்த இரண்டு நகரங்களிலும் உள்ள ஜெர்மன் தொழிலாளர்களிடையே வேலை செய்வதோடு, தங்கள் ஆராய்ச்சியையும் இருவரும் தொடர்ந்து நடத்தி வந்தார்கள். இங்கே ரகசியமாக நிறுவிய 'ஜெர்மன் கம்யூனிஸ்ட் லீக்', பொதுவுடைமைக் கொள்கையை விளக்கமாக எழுதித் தர வேண்டும் என்று இவர்களைக் கேட்டுக் கொண்டது. அதன் காரணமாகத் தோன்றிய புத்தகமே 'கம்யூனிஸ்ட் மானிபெஸ்டோ.' பொதுவுடைமையை இவ்வளவு விளக்கமாகவும் சுருக்கமாகவும் எழுதிய புத்தகம் இதுவரையில் வெளிவந்ததில்லை என்று சொல்லலாம்.

1848-ஆம் வருஷம் பிரான்சில் புரட்சி ஏற்பட்டது. அது இதர மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவ ஆரம்பித்தது. அந்தச் சமயம் மார்க்சும் எங்கெல்சும் தங்கள் தாய் நாடாகிய ஜெர்மனிக்குத் திரும்பிப் போனார்கள். அங்கே, ஜனநாயகக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட 'நியூரேனிஷ் ஜீடங்' என்ற பத்திரிகையை நடத்த ஆரம்பித்தார்கள். ஜனங்களின் உரிமைகளையும் சுதந்தரத்தையும் திருப்பிப் பெற, பிற்போக்குச் சக்திகளோடு பெரும் போராட்டம் ஒன்றைத் துவக்கினார்கள். அங்கே ஏற்பட்ட புரட்சி இயக்கத்துக்கு இருவரும் உயிர்நாடியாக இருந்தார்கள் என்று சொல்லலாம். புரட்சியும் கலகமும் பல இடங்களில் ஏற்பட்டன. இந்தப் புரட்சிப் போரில் எங்கெல்ஸ் நேரடியாகக் கலந்து கொண்டார். ஆயினும், இறுதியில் பிற்போக்குச் சக்திகளே வெற்றியடைந்தன. எங்கெல்ஸ் சுவிட்ஜர்லாந்து வழியாக லண்டனுக்குத் தப்பிச் சென்றார். மார்க்சும் லண்டன் போய்ச் சேர்ந்தார்.

லண்டன் போய்ச் சேர்ந்த சில காலத்தில், எங்கெல்ஸ் மான்செஸ்டரில் தாம் முன் வேலை பார்த்த ஒரு வர்த்

தக நிலயத்தில் குமாஸ்தாவாகப் போய்ச் சேர்ந்துகொண்டார். சிறிது காலத்தில் அதில் அவர் ஒரு பங்குதாரும் ஆனார். 1870-ஆம் வருஷம் வரையில், அவர் அங்கேயே இருந்தார். அதன் பிறகு, அவர் லண்டனுக்கே குடி வந்துவிட்டார். மார்க்சின் அந்திம காலம் வரையில் (1883) இரு நண்பர்களும் ஒரே நகரில் வசிக்கும் பாக்கியம் கிடைத்தது. இந்தக் காலத்தில் அவர்கள் எடுத்துக்கொண்ட கடுமையான முயற்சியின் பலனாக, பொதுவுடைமைச் சித்தாந்தத்தை என்றும் நிலை நாட்டுவதற்கே முக்கியமான புத்தகங்கள் வெளிவந்தன. இதுவரையில் வெளிவந்த பொருளாதார நூல்களில் எல்லாம் மகத்தானது என்று சொல்லும் தன்மை வாய்ந்த 'மூலதனம் (Capital)' இந்தக் காலத்தில் வெளிவந்த நூல்தான். எங்கெல்ஸ் பொதுவுடைமைச் சித்தாந்தத்தை விளக்கி எத்தனையோ நூல்களை எழுதினார். முதலாளித்துவ முறையில் காணப்படும் பொருளாதார அமைப்பின் சிக்கல்களை யெல்லாம் சிக்கறுத்துக் காட்டுவதில் மார்க்ஸ் முனைந்தார். மனித சமுதாய வளர்ச்சியையும், மார்க்சின் பொருளாதார சித்தாந்தத்தையும் மூலாதாரமாக வைத்துக் கொண்டு, சென்ற காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளையும், தற்காலத்தில் நிகழும் நிகழ்ச்சிகளையும், சயன்ஸ் சம்பந்தமான பொதுவான பிரசினைகளையும் எளிய நடையில் எங்கெல்ஸ் விளக்கிக் காட்டினார். 'ஆண்டி டுஹ்ரிங்,' 'குடும்பம், சொத்து, அரசு இவற்றின் உற்பத்தி,' 'லட்விக்ப்யூர்பாக்' போன்ற சிறந்த புத்தகங்கள் அவர் எழுதிய முக்கியமான நூல்களில் சில ஆகும்.

'மூலதனம்' முழுவதையும் எழுதி முடிக்குமுன், மார்க்ஸ் காலமாகிவிட்டார். அவர் தயாரித்து வைத்திருந்த குறிப்புகளின் உதவிகொண்டு, ரொம்ப சிரமத்தின்பேரில், எங்கெல்ஸ் 'மூலதன'த்தின் இரண்டாவது, மூன்றாவது பாகங்களை எழுதி முடித்தார். ஆனால், கடைசிப் பாகமாகிய நான்காவது பாகத்தை எழுதுமுன்பு, அவரும் ஆவி நீத்துவிட்டார். 'மூலதன'த்தின் இரண்டாவது, மூன்றாவது பாகங்களை எழுதி, அவர் அழியாத புகழைத் தேடிக் கொண்டார்.

1848-49-க்குப் பிறகு, மார்க்சும், எங்கெல்சும் ஜெர்மனியிலிருந்து நாடுகடத்தப்பட்டு அஞ்ஞாதவாசம் நடத்திய காலத்தில், பொருளாதார நூல்களிலும் இதர விஞ்ஞான நூல்களிலும் தான் கவனம் செலுத்தினார்கள் என்பதில்லை. 1864-ஆம் வருஷம் மார்க்ஸ் சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தை நிறுவி, 10 வருஷம் வரை அதைத் திறமையோடு நடத்தி வந்தார். இந்தச் சங்கம் தொழிலாளர் இயக்கத்துக்குப் பெரிதும் உற்சாகம் அளித்தது. பத்து வருஷங்களுக்குப் பின்பு இந்தச்சங்கம் மறைந்தது. என்றாலும், இதன் குறிக்கோளாகிய தொழிலாளர் இயக்கம் வளர்ச்சியில் தடைப்படவில்லை. மார்க்சுக்குப் பிறகு, ஐரோப்பிய சமதர்மவாதிகளுக்கு எங்கெல்சே தலைவராகவும், ஆலோசனையாளராகவும் இருந்து வந்தார். ஜெர்மன் சமதர்மவாதிகள் அவரது ஆலோசனையை அடிக்கடி நாடினார்கள். பிற்போக்காயிருந்த நாடுகளாகிய ஸ்பெயின், ருமேனியா, ருஷ்யா போன்ற நாடுகளின் சமதர்மவாதிகளும் தங்கள் நாடுகளில் சமதர்மப் போராட்டத்தை நடத்த முதன் முதலாக என்ன செய்யவேண்டுமென்று தெரிந்து கொள்ள அவரிடம் அடிக்கடி ஆலோசனைக்கு வந்தார்கள். மார்க்சுக்குப் பிறகு, பாட்டாளி மக்களின் இயக்கத்துக்கு ஐரோப்பா முழுதும் தலைசிறந்த தலைவராக விளங்கினார் எங்கெல்ஸ் என்று சொல்லலாம்.

மார்க்சும், எங்கெல்சும் ருஷ்யமொழி பயின்றிருந்தார்கள். ருஷ்யப் புத்தகங்களையும் அவர்கள் படித்தார்கள். எனவே, ருஷ்யாவிலும், ருஷ்யப் புரட்சி இயக்கத்திலும் அவர்களுக்கு அதிக சிரத்தை ஏற்பட்டது. ருஷ்யப் புரட்சிக்காரர்களோடு அவர்கள் தொடர்பு வைத்துக்கொண்டார்கள். ஐரோப்பாவில் தொழிலாளர் இயக்கம் வளர்ந்து, சமதர்ம அமைப்பு ஏற்படுவதற்கு, சுயேச்சாதிகாரத்தை அடிப்படையாகக் கொண்ட ருஷ்யா பெரிய தடையாகநிற்கிறது; போலந்து

பின்லாந்து போன்ற சிறிய நாடுகளை அடக்கி ஒடுக்கி, அவைகளைச் சுரண்டிப் பிழைக்கிற ருஷ்யா தொலைந்து, இதர நாடுகளுக்கும் சுதந்தரமளித்துத் தானும் சுதந்தரமாக வாழுகிற ருஷ்யா தோன்றினால்தான், ஐரோப்பாவில் பிற்போக்குச் சக்திகள் தோல்வி யடைந்து, தொழிலாளர் இயக்கம் வெற்றிகரமாக வளர்ச்சி யடைய முடியும் என்று அவர்கள் எண்ணினார்கள். அதன் காரணமாகவே, ருஷ்யப் புரட்சி இயக்கத்தில் அவர்கள் அவ்வளவு சிரத்தை காட்டினார்கள்.

மார்க்சும் எங்கெல்சும் ஓர் உயிர், இரண்டு உடல்கள் போல வாழ்ந்தார்கள் என்று சொல்லலாம். எண்ணத்திலும் வாக்கிலும் செயலிலும் அவர்கள் ஒருவரை யொருவர் ஒத்திருந்தார்கள். இரு நண்பர்களும் ஒரு நாள்கூட ஒருவரை ஒருவர் பார்க்காமல் இருக்கமாட்டார்கள். மார்க்ஸ் வீட்டுக்கு எங்கெல்ஸ் போவார்; அல்லது எங்கெல்ஸ் வீட்டுக்கு மார்க்ஸ் வருவார். தினந்தோறும் கூடிப் பல விஷயங்களைத் தர்க்கிப்பார்கள். இரவு வெகு நேரம் வரையில், இருவரும் பேசிக்கொண்டிருப்பார்கள்.

ஒரு தரம் மார்க்சும் எங்கெல்சும் 20 வருஷம் ஒருவரை யொருவர் பிரிந்திருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இது இருவருக்கும் ரொம்பக் கஷ்டமான காரியம்தான். ஆனால், நேரில் சந்திப்பதற்குப் பதிலாக, இருவரும் இடைவிடாது கடிதப் போக்குவரத்துச் செய்துகொண்டார்கள். மார்க்ஸ் லண்டனிலும், எங்கெல்ஸ் மான்செஸ்டரிலும் இருந்து இந்த அஞ்ஞாத வாசத்தை நடத்தினார்கள். இறுதியில் எங்கெல்ஸ் லண்டனுக்கு வந்துவிடுவதென்று தீர்மானித்து, கடிதமும் எழுதிப் போட்டுவிட்டார். பார்க்கவேண்டுமே மார்க்ஸ் குடும்பம் அன்று அடைந்த சந்தோஷத்தை! ஒரே கும்மாளம்தான். எங்கெல்ஸ் வருகிற நாள். மார்க்சுக்கு அன்று காலையில் இருந்தே இருப்புக்கொள்ளவில்லை. எவ்வளவோ முயன்றும், அவரால் எதையும் படிக்க முடியவில்லை. அவர் ரொம்பப் பிரியமாகப் படிக்கும் நாவல்களும் அன்று அவருக்கு ருசிக்கவில்லை. தம்மையே மறந்து அவர் அனுபவிக்கும் கணிதநூலும் அன்று அவருக்கு ரசமற்றதாகத் தோன்றியது. ஆவலும் பரபரப்பும் அதிகப்பட்டது. அங்குமிங்கும் வேகமாக நடந்தார். 20 வருஷமாகப் பிரிந்திருந்த ஆருயிர் நண்பரையல்லவா அவர் சந்திக்கப்போகிறார்! குறித்த நேரத்தில் எங்கெல்ஸ் வந்து சேர்ந்தார். மார்க்ஸ் ஆவலோடு எழுந்து சென்று அவரைக் கட்டித் தழுவிக்கொண்டார். பிறகு, இரண்டு நண்பர்களும் தாங்கள் பிரிந்திருந்த காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையெல்லாம் பற்றி ஆசைதீர அன்று இரவு முழுதும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

மார்க்ஸ் எங்கெல்சைப் பெரிதும் பாராட்டி யிருக்கிறார். அவர் எங்கெல்சின் அறிவுத் திறமையைப் பற்றி ரொம்பப் புகழ்ந்து சொல்லியிருக்கிறார். அவர் ஒருவரிடம் தான் மார்க்சுக்குப் பூரண நம்பிக்கை. அவர் ஒரு விஷயத்தில் மாறுபட்டால், அவரைத் தம் வழிக்குத் திருப்ப, மார்க்ஸ் ரொம்பப் பிரயத்தனப் படுவாராம். பொறுமை யிழக்காமல், அதற்காகப் புத்தகம் புத்தகமாகப் படித்துக்காட்டுவாராம். எப்படியாவது எங்கெல்ஸ் 'சரி' என்று சொல்லவேண்டும். அது தான் மார்க்சின் முக்கியமான குறிக்கோள். அவர் 'சரி' என்று சொல்லி விட்டால் போதுமா, பொதுஜனங்கள் அல்லவா சரி என்று சொல்ல வேண்டும் என்று கேட்கலாம். ஆம், பொது ஜனங்கள் தான் சரி என்று ஒப்புக்கொள்ளவேண்டும். மார்க்ஸ் பொதுஜனமாகக் கருதியது பிரடெரிக் எங்கெல்சையே! ஒரு சிறந்த வில்லாளி விடும் அம்பைப்போல, எங்கெல்சின் கூரிய அறிவு ஒரு நாளும் குறிதவறாது. ஊடுருவிச் சென்று அது உண்மையை எப்படியும் கண்டுபிடித்துவிடும். அதனாலே தான், மார்க்சுக்கு அவரது அறிவில் அவ்வளவு நம்பிக்கை.

மார்க்ஸ் எங்கெல்சைப் பற்றி இப்படிப் பெருமையாக எண்ணினார் என்றால், எங்கெல்ஸ் மார்க்சைப் பற்றி எப்படி எண்ணி யிருப்பார் என்று நாமே ஊகித்துக் கொள்ளலாம்.

"மார்க்ஸ் ஒரு பெரிய மேதை. அவருக்குச் சிஷ்யனுக இருக்கிற யோக்கியதைதான் எனக்கு உண்டு" என்று, எங்கெல்ஸ் ஒரு நண்பருக்குக் கடிதம் எழுதும் போது, ரொம்ப அடக்கமாகச் சொல்லி யிருக்கிருர்.

எங்கெல்சும் மார்க்ஸ் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் போல் இருந்தார். மார்ச்சின் பெண்கள் மார்க்சை "அப்பா" என்று அழைப்பதில்லே. அவர் சிறிது கறுப்பாகவும், கறு கறுவென்ற தாடியோடும் தலேமயிரோடும் விளங்கியபடியால், 'மூர்' (கருநிறமுள்ள ஒரு ஜாதி) என்று செல்லமாக அவரைக் கூப்பிடுவார்கள். அவர்கள் "அப்பா" என்று அழைப்பது எங்கெல்சையே.

பொதுவுடைமைச் சித்தாந்தத்தை ஸ்தாபிப்பதற்கும் பரப்புவதற்கும் எங்கெல்ஸ் மார்க்சுக்குப் பேருதவியாக இருந்தார் என்பது ஒருபுறம் இருக்கட்டும். மார்க்ஸ் பணத்துக்கு அடிக்கடி கஷ்டப்படுவார். பணக்காரர்கள், முதலாளிகள் எல்லோரும் மார்க்சுக்குப் பரம விரோதிகள். அரசாங்கங்களும் அவரைத் துன்பப்படுத்தின. இதெல்லாம் எதிர்பார்க்கக் கூடிய காரியங்களே. ஆனல், அவர் யாருக்காக இவ்வளவு பாடு பட்டாரோ, யாருக்காக இவ்வள்வு தியாகங்களேச் செய்தாரோ, அதே தொழிலாளர்களும் பொது ஜனங்களுமே அவருக்கு முதன் முதலில் விரோதியாக இருந்தார்கள் என்பது வேடிக்கையான விஷயமே. எல்லோரும் எதிரியாக இருக்கும்போது, அவருக்குப் பண உதவி எப்படிக் கிடைக்கும்? தமது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணம் செய்து எழுதிய 'மூலதனம்' என்ற புத்தகத்தைப் பற்றி மார்க்ஸ் ஒரு சமயம் கீழ்வருமாறு சொன்னுர்: "மூலதனத்தை வெளியிடுவதன் மூலம் கிடைக்கும் பணம் அதை எழுதும் போது நான் பிடித்த சுருட்டுக்கே போதாது." மார்க்ஸ் பணத்துக்குக் கஷ்டப்படும் போதெல்லாம் எங்கெல்ஸ் தான் பண உதவி செய்துவந்தார். அதற்காகத் தம் சௌகரியங்களே விட்டுக் கொடுக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்ட காலத்திலும், அவர் பணம் அனுப்புவதில் தயங்குவதும், காலம் தாழ்த்துவதும் இல்லே. எங்கெல்சின் உதவி யில்லாவிட்டால் 'மூலதனம்' வெளி வந்திருக்க முடியாது.

1895-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5உ பிரடெரிக் எங்கெல்ஸ் லண்டனில் உயிர் துறந்தார். மார்க்ஸ் இறந்த 12-ஆவது வருஷம் அது. இந்த இரு நண்பர்களும் உலகப் பாட்டாளி மக்களுக்கும் அவர்கள் மூலம் உலக மக்களுக்கும் பெரிய சேவை செய்திருக்கிருர்கள். உலகம் இவர்களுக்கு ரொம்பக் கடமைப் பட்டிருக்கிறது. இவர்கள் இறந்து விட்டார்கள். ஆனல், இவர்கள் உருவாக்கிப் போதித்த சித்தாந்தம் நாளுக்கு நாள் பலமடைந்து வருவதை, நாம் இன்று கண்டுவருகிருேம். இந்தச் சித்தாந்தம் போரினுலும், வறுமையினுலும் துன்பத்தில் உழன்று கொண்டிருக்கும் உலக மக்களுக்குக் கதிமோட்சத்தைக் கொண்டுவரப் போவதை, இனி நாம் காண்போம்.

✲

பலாத்கார பயன்

பலாத்காரத்தால் எந்த உருவான நன்மையையும் சாதிக்க முடியாது. ஆனல், தீமையைத் தடுத்து, நிறுத்த மட்டில் அது உதவும்.

—காண்டர்பரி ஆர்ச்பிஷப்

விமர்சனம்!

ஸாமுவேல் மார்ஸ் என்ற ஓவிய நிபுணர் ஒரு சித்திரம் வரைந்தார். அது மரண வேதனேயி லிருக்கும் ஒரு மனிதனின் படம். பக்கத்திலே வந்த ஒரு வைத்தியரிடம் படத்தைப்பற்றி ஓவியர் அபிப்பிராயம் கேட்டார். வைத்தியர் படத்தைக் கூர்ந்து பார்த்தார்: "மலேரியா" என்று திடமாய்ச் சொன்னுர்.

அழகின்

இரு தலைமுறை

இருபது வருஷ வித்தியாசம்! இருந்தும், தாய் தன் பதினாறு வயது மகளைப்போல் யௌவனத்தோடும், சரும அழகுடனும் விளங்குகிறாள். காரணம் இந்த தர்ய் தன் தாயின் சொற்படி பியர்ஸ் சோப்பையும், சுத்த ஜலத்தையும் உபயோகித்து சரும அழகைக் காப்பாற்றிக் கொண்டதுதான். இந்த முறையைப் பின்பற்றி அழகான அவள் மகளும் தன் சருமத்தைக் காப்பாற்றுவதால், இருபது வருஷத்திற்குப் பின் தன் தாயின் சருமம் இன்று இருப்பதுபோல், அவள் சருமமும் அழகுடன் விளங்கும்.

நாற்பது ஆண்டுகளாக, இந்திய அழகிகளின் பிரிய சோப் பியர்ஸ்தான். அதன் மணமும், பட்டுபோன்ற மிருதுவான நுரையும் மற்ற சோப்புகளை விட உயர்ந்த ஸ்தானத்தில் அதை வைக்கின்றன.

பியர்ஸ் சோப்

அழகின் அடிமை

TG. 88-50 TM — A. & F. PEARS, ISLEWORTH, ENGLAND

உண்மையான நல்ல பட்டை உணருங்கள்.

உண்மையான நல்ல பட்டு எப்படி உணர்ச்சிக்கு இருக்கும் என்பதை அறிய ஆடம்பரமும் மனோகரமுமான மைசூர் சில்க் அணிவதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். அது சாதாரண பட்டுக்களைவிட அதிக நாள் உழைக்கும்.

மைசூர் சில்க்

மைசூர்
கவர்ன்மென்ட்
தயாரிப்பு.

கவர்ன்மேன்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்

பயோ - சரசா

(IODISED SARASAPARILLA)

ரத்த சுத்தி திராவகம்

துர்நீர் சம்மந்தமான சொறி சிரங்கு, கட்டி, மேகப்பத்து, கரப்பான், முதலியவைகளுக்கும் வெட்டை சம்மந்தத்தால் ஏற்படும் கை, கால், இடுப்பு வலிகள் பிடிப்பு பக்ஷவாதம், மொழிசூலை முதலிய சகல வியாதிகளுக்கும் சிறந்த மருந்து.

பாட்டில் 1-க்கு விலை ரூ. 2-8-0

MFD. BY: BHARATH DRUG HOUSE

: ஏஜன்ட்ஸ் :

T. N. C. நாகலிங்கம் பிள்ளை & சன்ஸ்

மருந்து ஷாப் :: :: மதுரை

பேசும் பூனை

சுப. நாராயணன்

மனிதர்களின் ஒரு பெரிய உல்லாசக்கூட்டத்தின் நடுவிலே ஒரு பூனை பேசத் தொடங்கி விடுகிறது. அதன் பலனாக விளைந்த விபரீதங்களைச் சித்தரிக்கிறது இந்தக் கதை. 'ஸாக்கி' என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய ஒரு கதையின் கருத்தை வைத்து எழுதியது இது. ஆனால், சம்பாஷணை, பாத்திரங்களில் அதற்கும் இதற்கும் சம்பந்தமேயில்லை. இவையெல்லாம் தமிழ்நாட்டுக்குரியன. ஆனால், இதைப் படிக்கும் யாரும் தங்கள் இதயத்தில் கைவைத்துப் பார்க்கத் தேவையில்லை, அஞ்சவேண்டாம். அது நின்றுவிடாது.

ராவ்பகதூர் ராமதுரை மிகவும் செல்வாக்குள்ள ஒரு பிரமுகர். இலக்கியம், கலை, சங்கீதம் இவைகளில் அபாரப் பற்றுதல் கொண்டவர். 'நாட்டின் அறிஞர்களும் கலைஞர்களும் கலா நண்பர்களும் அடிக்கடி ஒன்று கூடி அளவளாவிப் பழகுவதனால், ஒருவருக்கொருவர் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள வசதியேற்படும். இதனால், கலைகளை வளர்க்க ஓர் அரிய சந்தர்ப்பம் கிடைத்துவிடும்' என்று நினைத்த அவர், அதற்கு ஒரு சுப ஆரம்பமாக உல்லாச விருந்து ஒன்றுக்கு ஏற்பாடு செய்தார். பிரபல எழுத்தாளர், ஆசிரியர், இலக்கிய கர்த்தாக்கள், நடிகர், பாடகர், அனைத்துக்கும் நண்பர்கள் ஆகிய எல்லாருக்கும் அழைப்பு அனுப்பியிருந்தார்.

விருந்துக்கு அநேகமாக எல்லாருமே வந்திருந்தார்கள். அழகு உலகில் மட்டுமன்றி, அறிவு உலகத்திலும் பிரபலமடைந்துள்ள பெண்மணிகளும் ஏராளமாய் வந்திருந்தது விசேஷமாய்க் குறிப்பிடத் தக்கது. விருந்துச் சாப்பாடு தொடங்குவதற்குச் சில நிமிஷம் இருக்கும்போது, அங்கே வந்து சேர்ந்த ஒரு மனிதர், சட்டென்று எல்லார் கவனத்தையும் தம்மீது இழுத்துக்கொண்டு விட்டார். பார்வைக்கு அவர் சாதாரணமாகவே காணப்பட்டார். அதுதான் அங்கே கூடியிருந்தவர்களுக்கு மிக வியப்பை அளித்தது. படாடோபமான அலங்காரமுமில்லை; சித்தர்கள் போன்ற அலங்கோலமுமில்லை. வெறும், சர்வ சாதாரண மனிதராய்த் தோன்றினார். "இவர் யார்?", "இவர் யார்?" என்று ஒருவரை ஒருவர் கிசு, கிசு என்று காதோடு காது விசாரிக்கத் தொடங்கி விட்டார்கள். "இவர் ஓர் ஆராய்ச்சிக்காரர். முத்துப் பழனி என்று பெயர். சிறு வயசிலே வட நாடுகளில் காலங் கழித்தவர். ரொம்பக் கெட்டிக்காரர்" என்று அவரை ராவ்பகதூர் அறிமுகப்படுத்தினார்.

"ராவ்பகதூர் அவர்களே, கெட்டிக்காரர் என்றால், எதிலேயோ?" என்று ஓர் இலக்கிய கர்த்தா கேட்டார்.

"அந்த விவரமெல்லாம் எனக்குத் தெரியாது. கெட்டிக்காரர் என்று சொன்னார்கள். பிரமாத ஆராய்ச்சி பண்ணி, ஏதோ அபூர்வமாய்க் கண்டு பிடித்திருக்கிறாராம்" என்றார் ராவ்பகதூர்.

இவ்வளவு அப்பாவியாய்த் தோன்றுகிற இந்த மனிதர் கண்டு பிடித்த சூட்சுமந்தான் என்ன என்று அவரையே கேட்டுவிட்டார் ஒருவர். மிருகங்களும் நம்மைப் போலவே பேசக் கற்றுக் கொடுக்கிற வழியைத் தாம் கண்டு பிடித்து விட்டதாக, அந்த மனிதர் சொன்னார். ஏற்கெனவே, ஒருபுறம் காதைக் கடித்துக் கேலி செய்து கொண்டிருந்த சில பெண்கள், இதைக் கேட்டதும், 'களுக்' என்று சிரித்து விட்டார்கள். இதுவரையில் வேறு விஷயங்களைப் பற்றிச் சர்ச்சை பண்ணிக் கொண்டிருந்த பலர், சட்டென்று பேச்சை நிறுத்தி விட்டு, முத்துப்பழனியின் பக்கமாய்க் கவனம் செலுத்தினார்கள்.

"ஏன் சார், மிஸ்டர் பல்னி, மிருகங்களைப் பேச வைக்கிறது என்றால், அவைகளின் பலவித ஒலிக்குறிப்புகளுக்குப் பொருள் உரைப்பதைத் தானே சொல்கிறீர்கள்? இல்லை, மனிதரைப் போலவே, மனித பாஷை

யிலேயே, மிருகங்களையும் பேச வைத்துவிடப் போகிறீர்களா?'' என்று ஒரு பாஷாவல்லுநர் கேட்டார்.

"இதென்ன கேள்வி! மிருகமாவது பேசுகிறதாவது! கிளி, மைனுபோன்ற குருவிகளாவது, இரண்டொரு வார்த்தைகளை, நாம் அவைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறபடி திருப்பிச் சொல்லும். சுயமாகச் சிந்தித்து நம்மைப் போலவே எந்த மிருகமாவது பேசியதாகச் சரித்திர ஆதாரமுமில்லை; அனுபவப் பிரமாணமு மில்லை. புராணங்களிலும், கதைகளிலும் மிருகங்கள் பேசுவதாகக் கூறியிருப்பதெல்லாம் வெறும் கற்பனையே என்பது நமக்குத்தான் தெரியுமே!'' என்று ஒரு பகுத்தறிவு வாதி குறுக்கிட்டார். பேச்சாரவாரம் வலுத்தது. முத்துப் பழனியோ, பதில் சொல்ல அவசரப்படாதவர்போல் பேசாமல் இருந்தார். கடைசியில், இரைச்சல் ஒருவாறு அடங்கியது.

அதற்குள், சாப்பிட இலை போட்டாயிற்றென்று ஆள் வந்து சொன்னான். எல்லாரும் எழுந்து சாப்பிடப் போனார்கள். சாப்பாடு முடிந்துவந்ததும், மீண்டும் பேச்சுத் தொடர்ந்தது.

"நாம் இதுவரையில் கண்டோ கேட்டோ இராத ஒரு மகத்தான சூட்சுமத்தை, நண்பர் முத்துப் பழனி அவர்கள் கண்டு பிடித்திருப்பதாகத் தெரிகிறது. அதைப் பற்றி எனக்கு அதிகமாகத் தெரியாது. அவர்களே உங்களுக்குச் சொல்வார்கள்'' என்று ராவ் பகதூர் மெல்லத் தூண்டி விட்டார்.

நண்பர் முத்துப்பழனி எவ்வித பிகுவும் பண்ணிக்கொள்ளாமல், தம் விஷயத்தை அரங்கேற்றத் தொடங்கினர்: "இதிலே எனக்கு வெகு காலமாகவே ஆசை யுண்டு. இந்தப் பதினேழு வருஷமாக இதைப்பற்றித் தீவிரமாய் ஆராய்ச்சி பண்ணி வந்தேன். போன வருஷம் தான் என் ஆராய்ச்சி பூர்த்தியாகிற நிலைக்கு வந்தது. எத்தனையோ ஆயிரக்கணக்கான பலவித மிருகங்களைப் பரீட்சை பண்ணிப் பார்த்தேன். அவை எல்லாவற்றையும் விடப் பூனைதான் என் வித்தைக்கு மிகவும் பொருத்தமானதாய் எனக்குப் படுகிறது. மிருகங்களுக்குள்ளே மனிதனுக்கு நிகரான அறிவு பூனைக்குத்தான் உண்டு. மனிதனின் நடை, உடை, நாகரிகம் அனைத்தையும் அது வெகு சுலபமாய்ப் புரிந்து கொண்டு பின்பற்றி விடுகிறது. பூனைகளிலும் அபார அறிவுள்ள மேதைகள் உண்டு. இப்படிப்பட்ட ஒரு பூனை மேதையைப் பத்து நாள் முந்தித் தான் நான் கண்டேன். அதன் மேதாவிலாசமும் ஆழ்ந்த அறிவும், அதன் நட்பை நானே வலியத் தேடிப் போகும்படி செய்து விட்டன. இது ஒரு சாதாரணப் பூனையல்ல. அதீதப் பூனை. கொஞ்ச நாளாகவே என் முயற்சிகள் வெற்றியடைந்து வருவது போல் தான் எனக்குத் தோன்றியது. ஆனால், இந்தப் பூனை விஷயத்தில் நான் பரிபூரண வெற்றி அடைந்து விட்டேன் என்றே சொல்வேன்'' என்று கூறிய முத்துப் பழனி, சபையோரைக் கம்பீரமாய் ஒரு கண்ணோட்டம் விட்டார்.

'சுத்த ஹம்பக்!' என்று சொல்ல எத்தனையோ பேரின் வாய்கள் துடித்தன. ஆனால், சொல்ல முடியுமா? உதடுகள் குவிந்தனவே யல்லாமல் சொற்கள் மட்டும் வெளிவரவில்லை. சில நிமிஷம் ஒரே நிசப்தம்.

பிறகு, "அப்படியானல், குழந்தைகளுக்குப் பேசக் கற்றுக்கொடுக்கிற மாதிரி இந்தப் பூனைக்கும் கற்றுக் கொடுத்திருக்கிறீர்கள் போலிருக்கிறது. இல்லையா?'' என்று ஸ்ரீமதி லலிதா கேட்டார்.

"என்னம்மா, இப்படிக் கேட்கிறீர்கள்? குழந்தைக்கோ, காட்டு மிராண்டிக்கோ, அறிவு முதிராத மனிதர்களுக்கோ சொல்லிக் கொடுக்கிற மாதிரி இதற்கு ஏன் கற்பிக்கவேண்டும்? பூனை என்றால், இது சாமானியப் பூனையா? மகா மேதை. நாம் சொல்வது அதற்குப் புரிய வழி கண்டு பிடித்துவிட்டால், அப்புறம் பள்ளிக்கூடம் மாதிரி பாடமா சொல்லி வைக்கவேண்டும்? இந்தப் பூனை வெகு நன்றாய்த் தமிழ் பேசும்'' என்று முத்துப் பழனி பதிலளித்தார்.

'ஆள் பெரிய அண்டப்புளுகனாய் இருப்பான் போல் இருக்கிறதே!' என்றுதான் பலரும் எண்ணினார்கள்.

ஒருவர் குத்தலாக, "பூனை எங்கே? டில்லியில் இருக்கிறதோ அல்லது கல்கத்தாவில் இருக்கிறதோ?" என்று கேட்டார்.

"இங்கே, இந்த ஊரிலே, அதுவும் நாலு வீட்டுக்கு அப்பால் தான் இருக்கிறது. அந்த ஐந்தாவது வீட்டில் தான் நான் குடியிருக்கிறேன். உங்களில் யாராவது போய், நான் கூப்பிடுவதாகச் சொன்னால் போதும். அது வந்து விடும்" என்றார் முத்துப் பழனி.

"நானே போகிறேன்" என்று கிளம்பினார் ராவ்பகதூர்.

ராவ்பகதூர் வெளியே போய்த் திரும்பி வரும் வரையில், கசமிச என்று எல்லாரும் என்னவோ பேசிக் கொண்டிருந்தார்கள். கால் மணி நேரத்தில் ராவ்பகதூர் வந்துவிட்டார். சும்மா வரவில்லை. உடம்பெல்லாம் வியர்க்க, தலைமயிர் பறக்க, அலங்கோலமாய் ஓடி வந்தார். "அடேயப்பா! அது என்ன அபாரப் பூனையா யிருக்கிறதே! போய்க் கூப்பிட்டேன். 'என்ன ராவ்பகதூர்வாள்! விருந்து ரொம்ப மும்முரமோ?' என்று என்னை விசாரிக்கத் தொடங்கி விட்டது. என்னை முன்னால் போகச் சொல்லி, தான் பின்னாலேயே வருவதாகத் தெரிவித்தது. இதோ வந்து விடும்" என்றார்.

கூட்டத்தி லிருந்தவர்களில் பலருக்கு இன்னும் நம்பிக்கை பிறக்கவில்லை. 'இரண்டு ஆசாமிகளும் சேர்ந்து, ஏதோ புரளி பண்ணுகிறார்கள் போலிருக்கு' என்று கூட எண்ணினார்கள். சிலர் மட்டில் 'எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்குமோ பொறுத்திருந்து பார்ப்போமே!' என்று அமைதியா யிருந்தார்கள்.

முத்துப்பழனி, நடப்பதைக் கவனித்துக் கொண்டு, மௌனமாய்ப் புன்முறுவல் பூத்திருந்தார்.

சில நிமிஷ நேரத்தில் மெத்தென்று நடை போட்டுக் கொண்டு, பூனையே நேரே வந்துவிட்டது. வந்து மத்தியில் அமரவும் அமர்ந்தது.

'கப்' என்று சந்தடி அடங்கியது. ஒருவரை ஒருவர் அசட்டுப்பார்வை பார்த்துக் கொண்டார்கள். பூனையிடம் பேசிப்பார்க்க வேண்டுமென்று எல்லாருக்கும் ஆசை தான். ஆனால், எப்படிப் பேசுவதென்று ஒரு கூச்சம் வந்து பலரைக் குறுக்கிட்டது.

"பூனை, கொஞ்சம் பால் குடிக்கிறாயா?" என்று சீமதி கோமள நடராஜம் முதல் முதலில் துணிந்து - கொஞ்சம் தயக்கத்துடனே தான் - கேட்டார்.

"அதற்கென்ன? கொண்டு வரச் சொல்! குடிக்கலாம்" என்று, பூனை அலட்சியமாய்ப் பதில் சொல்லியது. எல்லாருக்கும் நெஞ்சு 'படக்' 'படக்' என்று வேகமாய் அடிக்கத் தொடங்கி விட்டது. பால் வந்ததும், கோப்பையில் அதை ஊற்றிப் பூனைக்கு முன் வைத்தார்கள்.

"பால் நன்றா யிருக்கிறதா?" என்று ஒருவர் உபசாரமாய்க் கேட்டார்.

"குற்றமில்லை" என்று சொல்லியபடி நாக்கைச் சப்புக்கொட்டியது பூனை.

"மனித பாஷையைக் கற்பது எளிதா யிருந்ததா?" என்று ஒருவர் கேட்டார். இதுவும் ஒரு கேள்வியா என்பது போல், பதில் சொல்லாமல் நேரே பார்த்துக் கொண்டு சும்மா இருந்து விட்டது பூனை. கேள்வி கேட்டவருக்கு வெட்கமாய்ப் போயிற்று.

"மனிதரின் புத்திசாலித்தனத்தைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?" என்றார் ஒருவர்.

"எந்த மனிதரின் புத்திசாலித் தனத்தைப் பற்றி?"

"அட, என்னைப்பற்றித் தான் சொல்லேன்" என்று கர்வம் தொனிக்கும் குரலில் சொன்னார் ஆசிரியை கிருஷ்ணம்மை.

"உன்னைப் பற்றி என்ன சொல்வதென்று தெரியவில்லையே, அம்மணி! சொன்னால், நன்றா யிராதே என்று

பயமா யிருக்கிறது. இருந்தாலும், நீயே கேட்டு விட்டதால், சொல்கிறேன். உன்னையும் விருந்துக்கு அழைக்க வேணுமென்று ராவ்பகதூரின் மனைவி சொன்னபோது, ராவ்பகதூருக்குச் சம்மதமில்லை. 'இவளுக் கென்ன தெரியும்? புருஷனுடைய சம்பாத்தியத்தால், ஏதோ கன்னாப்பின்னா என்று செலவு செய்து கொண்டிருக்கிறாள். படிப்பு என்பது சுட்டுப் போட்டாலும் வராத இவள் ஆசிரியை என்று மினுக்கித் திரிகிறாள். விட்டுத் தள்ளு' என்று சொல்லிவிட்டார். 'அதுக்காக என்ன? அவளைக் கொஞ்சம் நயந்து வைத்துக் கொண்டால், நமக்குத்தானே நல்லது. அவளுடைய இளைய பெண் ரொம்ப நன்றாயிருக்கிறது. நம்ம பையனுக்குத் தோதாக இருக்கும். நல்ல சம்பந்தம். விருந்துக்கு அழைத்திருக்கிற எல்லாருமே பெரிய அறிவாளிகளோ? சொல்லப்போனால், அத்தனை பேருமே களிமண் மூளைகள் தானே' என்றார் ராவ்பகதூரின் மனைவி...''

அந்தரங்கமாகப் பேசிக் கொண்ட ரகசியங்கள் இப்படி அம்பலத்துக்கு வருமென்று எதிர்பாராத ராவ்பகதூரும் அவர் மனைவியும் திகைத்துப்போய் விட்டார்கள். கலா ஆர்வமுள்ள ராவ்பகதூரின் மனைவி இப்படித் தங்களைப் பற்றி மதிப்புக் குறைவாகப் பேசி யிருக்கிறாளே என்று சபையோர் எல்லோருக்குமே வருத்தம். காலையில் தம் குடும்ப சமாசாரங்களைப் பற்றி ராவ்பகதூரின் மனைவி இத்தனை சிரத்தையோடு விசாரித்ததன் அந்தரங்க நோக்கம் இப்போது ஆசிரியை கிருஷ்ணம்மைக்குப் புரிந்து விட்டது. ஒருவர் முகத்திலும் களையில்லை. திருடனுக்குத் தேள் கொட்டியது போல் எல்லாருமே பேந்தப் பேந்த விழித்து ஒருவரை யொருவர் பாராமல் திரும்பிக் கொண்டார்கள்.

சினிமா நட்சத்திரம் வேணுகானராவ் மட்டும் சளைக்கவில்லை. "ஏ பூனை, பக்கத்து வீட்டு வெள்ளைப் பூனையோடு நீ நடத்தி வந்த சல்லாபம் எல்லாம் எப்படி ஆச்சு? பலன் உண்டா?'' என்று தமக்குள் சாமர்த்தியமாய்ப் பேச்சை வேறு போக்கிலே திருப்பி விட முயன்றார். ஆனால், இதனால் எவ்வளவு மகத்தான அனர்த்தம் விளையக்கூடும் என்பதைச் சபையோர் தட்சணம் உணர்ந்து விட்டதாகத் தோன்றியது. நேராகவும், சாய்வாகவும், தொட்டுத் தொட்டுப் பிரிந்து, தயங்கித் திரிந்த பல ஜதைக் கண்கள் சடக்கென்று திசை மாறிப் பூனையின் மேல் தம் ஏகோபித்த திருஷ்டியைச் செலுத்தின.

"வெள்ளித்திரை வீரரே! இந்த மாதிரி விஷயங்களை இத்தனை பேர் மத்தியில் பேசுவது வழக்கமில்லை. உமது தமிழ்ப் படத்திலே நீர் என்ன வேணுமானாலும் பேசலாம்; இந்த மாதிரி உண்மையான கூட்டத்திலே, சில மட்டு மரியாதைகள் உண்டு. உம் சொந்த விஷயங்களை இங்கே நான் எடுத்து விடலாமா? அது உமக்கு ரசிக்குமா? எனக்குத்தான் கௌரவமா யிருக்குமா? நீர் என்ன? இங்கேயுள்ள அத்தனை பேரின் ரகஸ்யங்களும் எனக்குத் தெரியும்...'' என்று கொஞ்சம் நின்றது பூனை.

சபையோர் அனைவரும் ஏக காலத்தில் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ளாமலே நடுநடுங்கி, உடல் வியர்த்து, ஸ்தம்பித்து விட்டார்கள். பூனை மேலும் தொடர்ந்து, "ஆனால், எல்லாம் கண்டும் காணாததுபோல் நடந்து கொள்வதுதான் மரியாதை. யாரும் மரியாதை கெடக்கூடாது. எவரையும் இங்கே சந்திக்கிழுக்க எனக்கு விருப்பம் இல்லை'' என்று சொன்னபோது தான், எல்லாருக்கும் ஸ்மரணை வந்தது. 'அப்பாடா!' என்று பெரு மூச்சு விட்டார்கள்.

என்றாலும், ஒருவருக்கும் இருக்கை கொள்ளவில்லை. சட்டுப் புட்டென்று வீட்டைப் பார்க்கத் தொலைந்தால் போதுமென் றாகிவிட்டது. இந்தச் சனியன் பிடித்த பூனை, எங்கெங்கெல்லாம், எந்தெந்த நேரத்தில், என்னென்ன சந்தர்ப்பத்திலே, யார் யார் என்னென்ன செய்ததைப் பார்த்து, ஏதேது பேசியதைக் கேட்டு வந்திருக்கிறதோ? யார் கண்டார்! அடுப்படியிலோ, படுக்கை அறையிலோ பூனை

வந்தால், யாரும் சட்டை செய்வதில்லை. தான் அங்கெல்லாம் கண்டது கேட்டதை எல்லாம் இந்தப் பூனை இப்படி அம்பலத்திலே வம்பளக்கத் தொடங்கி விட்டால், ஒருவர் முகத்தில் ஒருவர் மானமாய் விழிப்பது எப்படி?

நெக்கு நெக்குருகும்படி காதற் சித்திரங்கள் தீட்டும் சிறு கதை ஆசிரியர் பற்பனுபன் மனங்குழம்பித் தவித்தார். தம்மைப் பற்றி ஏதாவது தப்புத் தண்டாச் சொல்லிவிட்டால், தம் 'கதைகளில் வரும் சம்பவங்களும் பாத்திரங்களும் முற்றும் கற்பனையானவை; யாரையும் குறிப்பிடுவன அல்ல' என்பது எந்த வரையில் நம்பப்படும் என்பது அவர் தவிப்பு. பழமைப் பத்தர் சிரீதரன் யாரிடமும் சொல்லிக்கொள்ளாமலே மெல்ல நழுவிப்போய் விட்டார். தம்மைப்பற்றி அவதூறுகள் வருமென்று அவர் அஞ்சவில்லை. ரசாபாசமான விஷயங்கள் காதில் விழ ஏன் இடங்கொடுக்க வேண்டும் என்பது தான் அவர் நோக்கம். இசைப்புலி இராமதாசன் 'பம்' என்று அசையாதிருந்தார். அவருடைய மனம் மட்டும் ஏதோ தீவிரமாய் வேலை செய்துகொண் டிருந்தது. 'இந்தப் பூனையை எப்படி வசப்படுத்தி மடக்கலாம்? இதற்குப் பிடிக்கிற மாதிரி சுண்டெலிகளை எங்கே எத்தனை வாங்கலாம்?' என்றெல்லாம் அவர் ஆழ்ந்து யோசித்துக் கொண்டிருந்தார்.

"இந்த உபத்திரவத்திலே ஏன் வந்து மாட்டிக் கொண்டோம்? சுகமாய் வீட்டில் தூங்கி யிருக்கலாமே" என்று, சீமான் மதுரப் பிள்ளை என்னவோ அசதி மறதியாய் வாய்விட்டு அலுத்துக் கொண்டார்.

அதைப் பிடித்துக் கொண்டது பூனை: "நேற்றுத்தானே, நீர் தூக்கம் வரவில்லை என்றும், உம்முடைய புத்தகங்களைச் சரியாய்ப் பிரசாரம் செய்து விற்காததால், உமக்குரிய புகழும் பணமும் கிடைக்க ஒட்டாதபடி பிரசுரகர்த்தர்கள் சதி செய்து வருகிறார்கள் என்றும், பதிப்பாசிரியர் கனகராயரிடம் முறையிட்டுக் கொண்டிருந்தீர்? இங்கே வந்தால், நல்ல விளம்பரமாகும் என்று நீர் ராவ் பகதூரின் மைத்துனரிடம் சொல்லி, உமக்கும் ஓர் அழைப்புக் கிடைக்க ஏற்பாடு செய்துகொண்டீரல்லவா? இப்போது என்ன இப்படிச் சலித்துவிட்டீர்?" என்று கேட்டது.

"ஓய் பூனையாரே, இதெல்லாம் கிடக்கட்டும். ஒரு சந்தேகம் உம்மைக் கேட்க விரும்புகிறேன். சொல்லுவீரா? இப்போது தமிழ் நாட்டில் எந்த மாதிரி புத்தகம் பத்திரிகை போட்டால் நாடு முன்னேறும்படி செய்து, நாங்களும் நியாயமாய் நாலு காசு சம்பாதிக்கலாம்? இதற்கு உமது யோசனை என்ன?" என்றார் ராவ்பகதூர்.

"மனிதர்கள் நியாயமாய்ச் சம்பாதிக்கவேண்டும் என்பது எங்கேயாவது நடக்கிற காரியமா? சம்பாத்தியம் என்பதே என்ன? நாலு பேருக்கு உரியதை ஒரே ஒருவன் பிடுங்கிக் கொண்டு அனுபவிப்பது தானே சம்பாத்தியம்! இப்போது புத்தகம் போட்டு, பத்திரிகை நடத்துகிறவர்கள், நாட்டு முன்னேற்றத்துக்காகவா உழைக்கிறார்கள்? சம்பாத்தியத்துக் காகத்தானே? பணந்தான் எல்லாம். தேசியம், தியாகம், கலை, இலக்கியம், வீரம், பூரம் எல்லாமே பணம் என்கிற மகா சாதனைக் குரிய வெவ்வேறு மார்க்கங்கள் தானே? என்ன செய்தும் பணத்தைச் சேர்த்து விட்டால், பின்னால் எல்லாம் சரியாய்ப் போய்விடும். பணம் ஒன்றே மனித வாழ்க்கையின் அச்சாணி. என்னைப் பொறுத்த மட்டிலுமோ, என்வாழ்க்கையின் அச்சாணி, குருத்தெலும்புள்ள தித்திக்கும் எலிக்குஞ்சு தான். சொல்லப் போனால்..." என்று பேசிக் கொண்டே யிருந்த பூனை, சட்டென்று பேச்சை நிறுத்தி விட்டுக் காதை நிமிர்த்திக்கொண்டு கூடத்தின் மூலையில் பார்வையைச் செலுத்திற்று. அடுத்த கணம், லாகவமாய்க் குதித்தோடிக் கூடத்தைவிட்டு மறைந்து விட்டது.

பூனை போனதும், கூட்டத்தில் நிம்மதியான பெருமூச்சு - பல திறப்பட்ட உலைத்துருத்திகளை ஏக சமயத்தில் ஊதியதுபோல் - எழும்பிற்று.

ஒரு பூனைக்கு, இப்படிப்பட்ட ராட்சச சக்தியைக் கொடுத்ததற்காக, எல்லாரும் முத்துப்பழனியைக் கடிந்து கொண்டார்கள்.

“இதை உயிரோடு விடக்கூடாது, ஐயா! விட்டால், சமூக வாழ்வு நாசமாய்ப் போகும். நம் எல்லார் வாழ்க்கையும் நித்ய நரகம் ஆகிவிடும்” என்றார் ஒரு சமூக அபிமானி.

“பூனையைக் கொல்வதா? என் ஆராய்ச்சி என்னுவது? நான் இத்தனை வருஷமாகப் பட்டபாடெல்லாம் வீணுவதா?” என்று ஆத்திரத்தோடு கூச்சலிட்டார் முத்துப்பழனி.

“அட என்னையா! பூனை பூனை என்று பூனையைக் கட்டிண்டு மாரடிக்கிறே! பூனைக்கு யாராவது பேசக் கற்றுக் கொடுப்பார்களா? அது வீட்டுக்கு வீடு மூலை முடுக்கி லெல்லாம் எதிர்பாராத நேரத்தி லெல்லாம் புகுந்து விடுகிறது. ஒரு யானை, குதிரை, ஒட்டகம் இதுகளுக்குப் பேசக் கற்றுக் கொடேன்!... இந்தப் பூனையை மட்டில் இனி நாங்கள் உயிரோடு இருக்க விடுவோம் என்று நீர் கனவும் காண வேண்டியதில்லை” என்று அழுத்தம் திருத்தமாய்ச் சொன்னார் ஓர் அரசியல் வீரர்.

“முடியாது, முடியாது! என் அருமைப் பூனை மீது யாரும் கை வைக்க முடியாது. மீறி அதைத் தொட்டவர்களை நான் சும்மா விடமாட்டேன். இது உறுதி” என்று சபதம் சொல்லிக்கொண்டே, முத்துப்பழனி வெளியே போய்விட்டார்.

“அடே யப்பா!” என்று கலாநேசரான ஒரு மல்யுத்த வீரர் பேய்ச் சிரிப்புச் சிரித்தார். “பூனைமேல் கைவைக்கப்படா தென்றால், ஆள் மேலேயே கை வைத்து விட்டால் போகிறது. சகோதரர்களே! பூனையை மட்டுமல்ல; இந்த ஆளையும் ஒழிக்கவேண்டியது தான். எனக்கு மட்டில் ஒரு வார்த்தை சொல்லுங்கள். நானே வேலைசாய்த்து விடுகிறேன்” என்றார்.

“பேஷ்! அதுதான் சரி, அது தான் சரி” என்று பல குரல்கள் எழும்பின.

ஆரவாரமாகவே கூட்டம் கலைந்தது; ரகசியச் சதிக்கூட்டமாகக் கலைய வில்லை.

என்றாலும், மல்வீரர் சொன்னபடியே இரண்டு நாளைக்கெல்லாம் பூனை செத்துவிட்டது. ஆனால், அடிபட்டல்ல; யாரோ பாலிலே விஷம் கலந்து அதற்குக் கொடுத்து விட்டார்கள்.

இதன்பின், முத்துப்பழனியை ஊரிலே காணவில்லை. அவர் இந்த ஊராரைப் பழிவாங்குவதற் காக, ஏதோ யானையைத் தேடிச் சென்றிருப்பதாகச் சிலர் சொல்லுகிறார்கள். அதன் பொய் நிஜம் மட்டில் தெரியவில்லை.

✲

விலாசத் தவறு

ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் இந்திய சர்க்காரின் பிரதிநிதியல்ல என்று அநேக அமெரிக்கருக்குத் தெரியவில்லையாம். ஆகையால், இந்திய சர்க்கார் பிரதிநிதிகளின் காரியாலயத்துக்கு யாராவது அடிக்கடி, “விஜயலட்சுமி இருக்கிறாரா?” என்று டெலிபோன் செய்வார்களாம். இந்திய சர்க்கார் பிரதிநிதிகளின் காரியதரிசியான பிரௌன்ஸ்டன் என்பவருக்கு இதிலே வெகு கோபம்.

ஒரு சமயம் இந்த மாதிரி ஒரு டெலிபோன் அழைப்பு வந்த போது “அந்த அம்மாளைப் பற்றி எங்களுக்கு ஒன்றும் தெரியாது” என்று ஆத்திரத்தோடு சொல்லி, போனை மூடினார் காப்டன் பிரௌன்ஸ்டன்.

பக்கத்திலேயிருந்த ஜே. ஜே. சிங் “இது எப்படி இருக்கிறதென்றால், ஐஸன்ஹோவரின் காரியாலயத்தைக் கூப்பிட்டு, ஹிட்லர் இருக்கிறாரா என்று விசாரிக்கிற மாதிரிதான் இருக்கிறது” என்றார்!

ஆஸ்துமா வியாதியுள்ளவர்களுக்கு நான் இதைத்தான் சொல்லுவேன்

தற்சமயத்திற்கு குணமளிக்கும் மருந்துகளை வாங்குவது முற்றிலும் வீண்.

"புரோஹித் சுவாஸஹரி" தற்சமயத்திற்கு மட்டும் அல்ல. "ஆஸ்த்மா"வின் மூலகாரணங்களையும் கண்டித்து நீடித்த குணத்தை அளிக்கும். சாப்பிட ஆரம்பித்ததுமே திணரலை நிறுத்தி ஜீரணத்தையும் அதிகரிக்கிறது. நாளடைவில் பலத்தையும் கொடுத்து ஆஸ்த்மாவை வேரோடு ஒழிக்கும்.

"ஆஸ்த்மா," திணரல் (கஷ்ட சுவாசம்) முதுகுவலி, தொண்டை கரகரப்பு, இருமல், இன்னும் இதைப்போன்ற ஈரல் சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கு "சுவாஸஹரி" ப்ளெயின் (நீலப்பெட்டி) சாப்பிடவேண்டும். அஜீரணம், வயிறு உப்பிசம் உள்ள ஆஸ்த்மா வியாதி உள்ளவர்கள் "சுவாஸஹரி" காம்பௌண்ட் (சிவப்பு பெட்டி) உபயோகிக்கவேண்டும்,

ஒவ்வொரு மருந்து கடைகளிலும் கிடைக்கும்.

3, 6, 12, அவுன்ஸ் அளவுகளில் முறையே ரூபாய் 3-6-0, 5-12-0, 10-0-0 ஆக விலை.

தயாரிப்பவர்கள் :—

புரோஹித் பார்மஸி, கோலாப்பூர்
எம். எஸ். எம்.

ஸ்டாக்கிஸ்டுகள் :— சென்னை :

1. அப்பா அண்டு கோ, சைனபஜார்
2. அமிருத் ரத்னாகர் பார்மஸி
கோவிந்தப்ப நாயக்கன் தெரு

திருவாங்கூர் :
K.C. மாத்யூ & கோ,
கெமிஸ்ட்ஸ் &
ட்ரக்கிஸ்ட்ஸ்,
கோஷாஞ்சேரி

புரோஹித்ஸ் ஸ்வாஸஹாரி

திண்டுக்கல் திருமணம்

சொர்ணம்மாள்
வெங்கடாஜலபதி

சென்ற 21–6–45 தேதி திண்டுக்கல் கிழரத வீதியிலுள்ள என் கிருஹத்தில் என் சகோதரன் சிர. வெங்கடாஜலபதிக்கும், நாகல் நகர் ஸ்ரீ எம். கே. வி. சுப்பையர் அவர்கள் குமாரத்தி ஸௌ. சொர்னம்மாளுக்கும், என் சகோதரி ஸௌ. சூரியகாந்திக்கும், நாகல் நகர் ஸ்ரீ என். வி. ஜி. பால்சாமி ஐயர் அவர்கள் குமாரன் சிர. ராஜாராமுக்கும், நடைபெற்ற விவாஹ முகூர்த்தங்களின்போது பாராட்டுச் செய்திகளும், சன்மானங்களும் அனுப்பி வைத்த எண்ணிறந்த நண்பர்கள், பந்துக்கள், வியாபாரிகள் ஆகிய அனைவருக்கும் இதன் மூலம் நான் நன்றி செலுத்துவதுடன், தனித் தனியாக பதிலளிக்க இயலாமைக்காக அன்னவர்களின் மன்னிப்பைக் கோருகிறேன்.

S. P. கிருஷ்ணய்யா

Partner, Messrs.
S. V. பால்சாமி ஐயர் & பிரதர்ஸ்
நூல் வியாபாரம்
திண்டுக்கல், மதுரை & சேலம்

Use **KESHA-MITRA**

HAIR-OIL
(VEGETABLE)

A LITTLE's ORIENTAL BALM PRODUCT

அடர்த்தியான, கருகருத்த
நீண்ட கேசத்திற்கு

கேச மித்திரா

ஹேர் ஆயில்

வழுக்கை, பொடுகு, முதலியவற்றை
அறவே போக்குகிறது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் ஷாப்புகளிலும்
கிடைக்கும்

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்
அண்ட் பார்மசூடிகல்ஸ் லிமிடெட்
11-12, முதல் லைன் பீச் : : சென்னை



கவனியுங்கள் !

உயரிய அச்சுவேலைக்கும்
நூதன முறையான அச்சு
வேலைக்கும், கலர் அச்சு
வேலைக்கும் எங்களைக்
கலந்து ஆலோசியுங்கள்

அழகான அச்சுவேலைக்குப் பெயர் பெற்றது :

சக்தி பிரஸ் லிமிடெட்
115-E, மோசபரீஸ் ரோட்
ராயப்பேட்டை : : சென்னை

இளமையும் முதுமையும்

வெ. சாமிநாத சர்மா

இளமையென்பது என்ன? முயற்சியின் ஆரம்பம்; உற்சாகத்தின் பொங்கல்; வேகத்தின் பிரதிநிதி; நிஷ்கபடத்தின் வெளித் தோற்றம்.

முதுமையென்பது என்ன? அனுபவத்தின் திரட்சி; வாழ்க்கையின் கடைசி மைல்கள்; தளர்ச்சியின் வெளித் தோற்றம்; அழகை அனுபவிக்க முடியாத ஒரு நிலை.

இளமைக்குச் சென்ற காலம் சுருக்கமாயிருக்கிறது; ஆனல், எதிர்காலம் நீண்டதாயிருக்கிறது. முதுமைக்கோ, சென்ற காலம் நீளமாகவும் எதிர்காலம் சுருக்கமாகவும் இருக்கிறது; இளமைக்குப் புதுமையின்மீது மோகம். முதுமைக்குப் பழமையின் மீது பற்றுதல். இளமை, ஆரவாரத்திலே இன்பம் நுகர்கிறது; முதுமை, அமைதியிலே சாந்தியைக்காண்கிறது. இளமைக்கு, எண்ண ஆகாயத்தில் சஞ்சரித்துக்கொண்டிருப்பதில் அதிக விருப்பம். முதுமைக்கு, பூலோகத்தில் ஊன்றிக் கொண்டிருக்கிற காலை அப்புறம் பெயர்த்து வைக்காமலிருப்பதிலே பெருமை. சுருக்கமாகத் தற்கால நாகரிகப்படி சொல்லவேண்டுமானல், இளமை, நகரவாசி; முதுமை, கிராமவாசி.

இளமையின் தொடர்ச்சிதான் முதுமை; ஆனல், அந்த முதுமை, வறட்சியுள்ள பாலைவனமாயில்லாதிருக்க வேண்டுமானல், அது இளமையை விடாமல் பற்றிக் கொண்டிருக்கவேண்டும். முதுமையிலே இளமை கலந்திராவிட்டால் ஆபத்து; அந்த வாழ்க்கை சாரமற்ற வெறுஞ் சக்கை. ஆனல், இளமையிலே முதுமை தட்டிவிட்டால், அது ஆபத்து. பிஞ்சிலே பழுத்த பழம், வெம்பி உதிர்ந்து போவதற்குத் தான் தகுதியுடையது.

"வருங்காலம் இளைஞர்களுடையதே" என்று அடிக்கடி சொல்கிறோம். வருங்கால வார்சுகள் என்பது மட்டிலுமல்ல, வருங்காலத்துக்கு அஸ்திவாரம் கோலுபவர்களும் அவர்கள்தான். ஆனல், அந்த இளைஞர்கள் அனுபவம் திரண்ட முதியவர்களை அடியோடு ஒதுக்கிவிட்டு முன்னேற முடியுமா? அப்படி நினைத்தால், அது வெறுங் கனவாகும். இளமையும் முதுமையும் ஒன்று கலந்து முயலவேண்டும். அதை விளக்குகிறார் சர்மாஜி.

இளமையிலே முதுமை தட்டுவதென்பது உடலைப் பொறுத்த மட்டில் தான் சொல்கிறோம். அறிவிலே முதியவராயிருத்தல் வேண்டும். இளமை திகழும் உடலும் முதிர்ந்த அறிவும் யாரிடத்தில் ஒன்று சேர்ந்திருக்கின்றனவோ, அவர்தான் வாழ்க்கையை அநுபவிப்பதற்குத் தகுதியுடையவர். இரண்டும் கலந்திருப்பது அருமை தான்; ஆனல், அதில் தான் பெருமை இருக்கிறது.

இளமை உஷ்ண முடையது; முதுமை குளிர்ச்சி யுடையது. உடல், உள்ளம், எண்ணம், செயல் எல்லாவற்றிற்குமே இதைப் பொருத்தி வைத்துப் பார்த்துக் கொள்ளலாம்.

இளைஞர்கள் உணர்ச்சி நிரம்பியவர்களாயிருப்பதைப் பார்க்கிறோம். அந்த உணர்ச்சிக்குப் பலமான அஸ்திவாரம் இருப்பதில்லை. அது வேகமாக எழுந்து சீக்கிரமாக அடங்கி விடுகிறது. இப்படி அடங்கிவிடுகிற காரணத்தினல் தான், இளைஞர்கள் தங்கள் பேச்சிலே எவ்வளவு ஆவேசங் காட்டுகிறார்களோ அவ்வளவு சோர்வைச் செயலிலே அடைகிறார்கள். இப்படி இவர்கள் செயலில் சோர்வடையாமலும், பலமான அஸ்திவாரமுடைய உணர்ச்சி யுடையவர்களாயும் இருப்பதற்கு, வயதுதான், அதாவது அனுபவம்தான், இவர்களுக்குத் துணை செய்கிறது. வயது அல்லது அனுபவம் என்பது என்ன? முதுமையின் பிரதிநிதிதானே?

ஆகவே, ஒரு மனிதனுக்கு இளமையும் தேவை தான்; முதுமையும் தேவைதான். இப்படிச் சொல்வதன் தாத்பர்யம் என்னவென்றால், பிரதியொரு மனிதனும் பசிய உள்ளமும் முதிர்ந்த அனுபவமும் உடையவனயிருக்கவேண்டுமென்பதுதான். 'இளமையான தோள்களின் மீது முதிர்ச்சியடைந்த தலை அமர்ந்திருக்கிறது' என்று சொல்வது இந்தக் கருத்துடன் தான்.

இளைஞர்கள் எதனையும் துரிதமாகச் செய்து முடிக்கவேண்டுமென்று ஆவல் கொள்கிறார்கள். ஆனால், முதியவர்கள் எதனையும் ஆட்சேபிக்கிறார்கள். இதனால் தான், இளைஞர்கள், முதியவர்களை அலட்சியம் செய்கிறார்கள். முதியவர்கள், இளைஞர்களைக் குறைவாக மதிப்பிடுகிறார்கள். உண்மையைச் சொல்லவேண்டுமானால், பேக்கன் என்ற அறிஞன் சொன்ன மாதிரி ''இளைஞர்கள், ஒரு பொருளை மதிப்பிடுவதைக் காட்டிலும் ஒரு பொருளைக் கண்டுபிடிப்பதற்குத் தகுதியுடையவர்கள்; ஆலோசனை சொல்வதற்குப் பதில் அனுஷ்டானத்துக்குக் கொண்டு வருவதற்கே தகுதியுடையவர்கள்.''

இளைஞர்கள், தங்களுடைய சாத்தியத்துக்கு அதிகமாகவே சாதிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள்; சாதிக்கமுடியுமென்று நம்புகிறார்கள், முதியவர்களோ, ஒரு காரியத்தைத் தொடங்குவதற்கு முன்னமேயே நம்மால் இது சாத்தியமா என்று தலை மீது கைவைத்துக்கொண்டு உட்கார்ந்து விடுகிறார்கள். இளைஞர்கள், நீரைத் தெளிவடையச் செய்வதைக் காட்டிலும், அதனைக் கலக்கி விடுவதிலே வல்லவர்களாயிருக்கிறார்கள். இவர்களுக்கு லட்சியம் தான் முக்கியமே தவிர, அந்த லட்சியத்தையடைவதற்கான சாதனங்களின் மீது இவர்கள் அதிகமாகக் கவனஞ் செலுத்துவதில்லை. தவறு செய்வதென்பது இவர்களுக்குச் சாதாரணம். ஆனால், அந்தத் தவறை ஒப்புக்கொள்வதென்பது இவர்களுக்குக் கடினம். வயது முதிர்ந்தவர்களோ அதிகமாக ஆலோசிக்கிறார்கள்; அதிகமாக ஆட்சேபிக்கிறார்கள். எடுத்த காரியத்தைக் கடைசி வரையில் பார்த்துவிட வேண்டுமென்ற உறுதி இவர்களுக்கு இருப்பதில்லை. எடுத்ததற்கெல்லாம் சந்தேகம் உண்டாகிறது. ஒரு காரியம் தப்பாகி விட்டால், அதற்குத் தாங்கள் தான் காரணம் என்று வெகு சீக்கிரத்தில் ஒப்புக்கொண்டு விடுகிறார்கள். புகழின் உச்சத்தையும் பூர்ண சந்தோஷத்தையும் அடைய வேண்டும் என்ற எண்ணம் இவர்களுக்கு மிகக் குறைவு. சிறிய புகழிலே, அற்ப சந்தோஷத்திலே, இவர்கள் திருப்தி யடைந்து விடுகிறார்கள்.

இதுவரையில் சொன்னவைகளிலிருந்து இரு சாராரிடத்திலும் குறைநிறைகள் இரண்டும் கலந்திருக்கின்றன என்று ஏற்படுகிறதல்லவா? இந்தக் குறைநிறைகள் ஒன்றோடொன்று கலந்து வாழ்க்கையானது ஒரு மொத்தமாகக் காண வேண்டுமானால், அந்த வாழ்க்கையிலே மேலே சொன்ன அர்த்தத்தில் இளமையும் வேண்டும்; முதுமையும் வேண்டும். தனிப்பட்ட மனிதனுடைய வாழ்க்கையிலே எப்படி இளமையும் முதுமையும் கலந்திருக்க வேண்டுமென்று சொல்லுகிறோமோ அதைப் போலவே, ஒரு சமுதாயத்திலும் இளைஞர்களும் முதியவர்களும் கலந்து வாழ வேண்டும்; சமுதாயத்தின் நன்மைக்குக் கலந்து சேவை செய்ய வேண்டும். அப்போது தான் அந்தச் சமுதாயம் முழுச் சமுதாயமாக வளர்ச்சி யடையும்.

*

எட்டாவது சேனை ரகஸ்யம்: ''எட்டாவது சேனைக்கு எட்டாவது சேனை என்ற பெயர் எப்படி வந்தது?'' என்று, ஓர் அதிகாரியை நான் கேட்டேன்.

''ஓ! அதுவா? அது ரொம்பவும் சாதாரண விஷயம். உண்மையில் இன்னும் ஏழு சேனைகள் நம்மிடம் இருப்பதாக எதிரி நினைத்துக் கொள்ளட்டும் என்பதற்காகவே, இந்தப் பெயரை இதற்கு வைத்திருக்கிறார்கள்'' என்றார் அந்த அதிகாரி.

—ஜான் கந்தர் (டீ—வே.)

தமிழும் அகராதியும்

ராவ்சாகெப்
எஸ். வையாபுரிப்பிள்ளை

அகராதி என்ற பெயர் முதன்முதலில் காணப்படுவது கி. பி. 1594-ல் தோன்றிய ‘அகராதி நிகண்டு’ என்ற நூற்பெயரிலே தான். இதன் ஆசிரியர் இரேவண சித்தர் என்னும் வீரசைவப் புலவர். இவர் இட்ட பெயரே இப்போது டிக்ஷனரி என்று ஆங்கிலத்தில் கூறும் நூலுக்குரிய தமிழ்ப் பெயராய் அமைந்து விட்டது.

அரிச்சுவடியிலுள்ள எழுத்து முறைப்படியே சொற்களை அமைப்பது தான் அகராதி முறை. இது நமக்கு மிக எளிதாகத் தோன்றுகிறது. ஆனால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வளர்ந்து வந்திருக்கிற தமிழிலக்கிய சரித்திரத்தில், இம்முறை 16-ம் நூற்றாண்டின் இறுதியில் தான் முதன்முதல் புலப்படுகிறது. அப்பொழுதும் இது அரை குறையாய்த் தான் கையாளப்பட்டது. சொல்லின் முதலெழுத்து முறையையே ஆசிரியர்கள் நோக்கி வந்தனர். உதாரணமாக அறிவன், அடியான், அருள், அவன், அஃது முதலிய சொற்களை முதலெழுத்தாகிய அகரம் ஒன்றையே கருதி, அவற்றை ஒரு முறையில் நிறுத்தினர்; இரண்டாவது முதலிய எழுத்துக்களைக் கருதினார்களில்லை. இந்த முறையை அகராதி நிகண்டில் காணலாம். இதனால் அகரத்தில் தொடங்கும் ஒரு, சொல்லை, குறித்த ஓரிடத்தில் கண்டு பிடிப்பது எளிதாயில்லை. இரண்டாவது எழுத்தையும் நோக்கிச் சொற்களை முறைப்படுத்திய நூல் ஒன்று சுமார் நூறு ஆண்டுகளின் பின் தோன்றியது. இதன் பெயர் “அகராதி மோனைக் ககராதி எதுகை” என்பதாகும். இம்முறையிலேயும் ஒரு சொல்லை, குறித்த இடத்தில் கண்டு பிடிப்பதற்கு வழி இல்லாமலிருந்தது. முதன் முதலில் சொற்களின் எழுத்துக்கள் அனைத்தையும் நோக்கி அகராதி அமைத்தவர்கள் ஐரோப்பியப் பாதிரிகளே யாவர். 17-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பிய வியாபாரிகளும் பாதிரிமார்களும் மிகுதியாகத் தமிழ் நாட்டிற்கு வரத் தொடங்கினர். தமிழ் மக்களைக் கிறிஸ்தவர்களாக ஆக்குவதற்குப் பெருமுயற்சி செய்தனர். முக்கிய மான இடங்களில் பாதிரிமார்கள் கிறிஸ்தவக் கோயில் கட்டி, அங்குள்ள மக்களோடு மக்களாய் வாழ்ந்து, தங்கள் மதத்தைப் பரப்பத் தொடங்கினர். தமிழ் மக்களுக்குக் கிறிஸ்தவ மத உண்மைகளைத் தமிழ் மொழியிலே போதிக்க வேண்டுமென்று இவர்கள் கருதினார்கள். ஆகவே பாதிரிமார்கள் தமிழ் கற்க வேண்டுவது மிக அவசியமாய் முடிந்தது. கற்பதற்குக் கருவி நூலாக அகராதி ஒன்றும் இயற்ற வேண்டுவதும் இவர்களுக்கு அவசியமாயிற்று. எனவே, தமிழில் முதன் முதலில் அகராதி தோன்றுவதற்கு காரணமா யிருந்தவர்கள் இப் பாதிரிமார்களே யாவர்.

அந்நிய மொழிக் குரியோ ராகிய பாதிரிமார்கள் அகராதி இயற்றப் புகுந்தது ஒரு நல்ல அதிருஷ்டமென்று தான் கூறவேண்டும். ஏனெனில், சில நன்மைகள் இதனால் விளைந்துள்ளன. முதலாவது, பிற மொழிகளில் அகராதிகள் செப்பமாக அமைந்துள்ள முறையைத் தமிழ் அகராதியிலும் கையாள முடிந்தது. இரண்டாவது, பாதிரிமார்களுக்குத் தமிழ் புதிய மொழி யாகையினாலே, இம் மொழியிலுள்ள எல்லாச் சொற்களுக்கும்

தமிழிலே நிகண்டு, திவாகரம் முதலியவை வெகு காலமாகவே உண்டு. ஆனால், அகராதி புதுமையே யாகும். நாட்டுக்கு வந்த ஐரோப்பியப் பாதிரிமார்கள் தமிழ் கற்க விரும்பினார்கள். அகராதி தேவைப்பட்டது. தயாரித்து விட்டார்கள். இதிலிருந்து பல தமிழ் அதிராதிகள் தோன்றிய வரலாற்றை, ஸ்ரீ பிள்ளை அவர்கள் விவரிக்கிறார்கள். இது சென்னை அகில இந்திய ரேடியோவில் 25-7-45-ல் ஒலி பரப்பியதை விரித்தெழுதிய கட்டுரையாகும்.

இவர்கள் பொருளுணர வேண்டிய வர்களா யிருந்தனர். ஆகவே, கடின பதம், எளியபதம் என்ற வேற்றுமை யின்றி, எளிய பதங்களுக்குங் கூடப் பொருள் விளக்கவேண்டுவது அவசிய மாயிற்று. உதாரணமாக நான், அது, வீடு முதலிய சொற்களையும் அகராதி யில் விளக்க வேண்டியதாயிற்று. மூன்றாவது, நூல் வழக்கிலன்றி, சாதா ரண மக்கள் பல பிராந்தியங்களிலும் வழங்கி வந்த சொற்களும் அகராதி யில் இடம் பெற்றன. தமிழ்கற்ற பண்டிதர்கள் இவ்வழக்குச் சொற் களிற் பலவற்றை இழிசன வழக்கு என்றேனும் வழூச்சொல் என்றேனும் ஒதுக்கி விடுவார்கள். ஆனால் அந்நிய நாட்டுப் பாதிரிகள் இவ்வாறு ஒதுக்க முடியாது. அவர்கள் சாதாரண மக்க ளோடு, அதிலும் கல்வி பெறாத கீழ்த் தர மக்களோடு பழகிவந்தார்கள். அம் மக்கள் பேசுவதை யுணர்வதும், அவர் கள் வழங்குஞ் சொற்களை யுணர்வ தும் அவசியம். எனவே அவ்வழக் குச் சொற்களும் அகராதியில் இடம் பெற்றன. இவ்வாறாக, தமிழ் மக்க ளுள் பல இனத்தாரும் வழங்கும் சொற்களெல்லாம் அகராதியில் அமை வதற்கு இப்பாதிரிகளே வழி காட்டியா யிருந்தார்கள்.

கி. பி. 1679-ல் தமிழ்ப் போர்த்து கீய அகராதி யொன்று ப்ரொஇன் ஸர் என்ற பாதிரியாரால் இயற்றப் பட்டது; ஆனால் இவ்வகராதி இப் போது மறைந்துவிட்டது. இதனை யடுத்துத் தோன்றியது பிரசித்தி பெற்ற சதுரகராதி யாகும். இதுவே தமிழில் முதன்முதற் பிறந்த அகராதி யென்று சொல்லலாம். இதனை இயற்றியவர் தைரியநாதஸ்வாமி யென்றும், வீரமா முனிவர் என்றும் பெயர் வழங்கிய **Father** பெஸ்கி யாவர். இவர் இத்தாலி நாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்து, கிறிஸ்துமத போதனை செய்துவாழ்ந்த ஒரு பாதிரி யார். கி. பி. 1710-ல் இந்தியாவிற்கு வந்தார்; 1747 முடிய மதபோதனை செய்யும் கடமையில் ஈடுபட்டார்; சில காலம் திருச்சியில் சந்தாஸாகிபுக்கு மந்திரியாகவும் இருந்தனர். தமிழிலே பேரார்வங்கொண்டு, அதனைச் சுப்பிர தீபக் கவிராயர் முதலிய தமிழ் அறிஞர் களிடத்தே நன்கு கற்று, பல நூல்கள் செய்யுளிலும், வசனத்திலும் இயற்றி னர். தமிழ்நாட்டுச் சன்னியாசிகள் போலவே தாமும் வேஷந்தரித்து, தமிழ் மக்கள் போற்ற, வாழ்ந்து வந்த னர். இம்முனிவர் இயற்றிய செய்யுள்- நூல்களில் மிகவுஞ் சிறந்தது "தேம் பாவணி" என்று கூறுவர். ஐந்திலக் கணத் தொன்னூல் விளக்கம், கொடுந் தமிழிலக்கணம் முதலிய இலக்கணங் களும் இவர் இயற்றியன. இவரது சதுரகராதியே நாம் இங்கே கவனித் தற்குரியது.

சதுரகராதி யென்றால் நான்கு வகைப் பட்ட அகராதி - நூல் என்று பொருள். நான்கு வகையாவன: (1) பெயரகராதி (2) பொருளகராதி (3) தொகையகராதி (4) தொடையக ராதி. பெயரகராதியில், ஒரு சொல் லுக்குரிய பல பொருள்கள் கொடுக் கப்பட்டிருக்கும். பொருளகராதியில், ஒரு பொருளுக்குரிய பல பெயர்களும் காணப்படும். தொகை யகராதியில், இருசுடர், முத்தீ, நாற்பொருள் என் பன போல நூல்களில் தொகையாக வழங்கப்பட்டுள்ளனவற்றிற்கு விளக் கம் காணலாம். தொடை யகராதி யில் செய்யுட்கு வேண்டும் எதுகைச் சொற்கள் (**rhyming words**) வரிசை யாய் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நூலில் நாம் முக்கியமாகக் கவ னிக்க வேண்டுவது ஒன்று உண்டு. அகராதிகள் தோன்றுவதற்கு முன், அவற்றின் ஸ்தானத்தில் உதவிய நூல்கள் நிகண்டுகளாகும். இந் நிகண்டுகள் மனப்பாடம் செய்வதற் கென்று ஏற்பட்டன. சுமார் கி. பி. 8-ம் நூற்றாண்டிலிருந்து இவற்றின் வரலாறு நமக்குத் தெளிவாயுள்ளது. 'நிகண்டு' என்ற வட சொல்லுக்குத் 'தொகுதி' என்று பொருள். முதன் முதல் தோன்றிய நிகண்டு திவாகரம் ஆகும்.

திவாகரம் முதலியவற்றில் தெய் வம், மக்கள், விலங்கு, மரம், இடம், பல்பொருள், பண்பு, செயல், ஒலி முதலிய 12 தொகுதிகளாகப் பெயர் கள் வகுத்துக் கூறப்படுகின்றன. இவ்

வகை நிகண்டுகளில் முக்கியமான வற்றிலுள்ள சொற்களை யெல்லாம் திரட்டிச் சதுரகராதி தந்துள்ளது. ஆகவே நிகண்டுகளைக் கற்று மனப் பாடஞ் செய்யவேண்டும் அவசியம் இல்லாம லொழிந்தது.

இவ் அகராதி இயற்றப்பட்டது கி. பி. 1732-ல். ஏடுகளில் இது பிரதிகள் செய்யப்பெற்றுத் தமிழ் நாடு முழுவதும் பரவியது. ஆங்கிலத்தில் டாக்டர் ஜான்ஸன் தமது அகராதியை 1755-ல் இயற்றி வெளியிட்டனர். இதற்குச் சுமார் 25 ஆண்டுகட்கு முன் பாகவே, சதுரகராதி தோன்றிய தாகும். தமிழ்ச் சொற்களுக்குத் தமிழில் பொருள் விளக்கும் இவ் அகராதியில் சுமார் 1200 சொற்கள் இடம் பெற்றுள்ளன. இந்நூலின் ஒரு தொகுதி (பொருளகராதி) 1819-ல் அச்சிடப்பட்டது. நூல் முழுதும், 1824-ல், ரிச்சர்டு கிளார்க் என்பவரது உத்தரவின் பேரில், தாண்டவராய முதலியார், இராமச்சந்திர கவிராயர் என்ற இரண்டு வித்துவான்களாலும் பரிசோதித்துப் புதுக்கப் பெற்று, வெளியிடப்பட்டது; கிழக்கிந்திய கம்பெனியாரின் நிர்வாக சங்கத்திற்கு உரிமையாக்கப்பட்டது.

கடைசியிற் குறிப்பிட்ட செய்தியால், பாதிரிமார்கள் செய்துவந்த இம் முயற்சியில் ஆங்கிலேய துரைத்தனத் தாரும் கலந்து கொண்டு, உதவி புரிந் தார்கள் என்பது புலனும். துரைத் தனத்தாருக்கு வியாபாரத் துறை யிலும், அரசியல் - துறையிலும், பல படியாகத் தமிழ் நாட்டு மக்களோடு பழகி வந்த முறையிலும், தமிழ் ஆங் கிலம் இரண்டையும் ஒரு சேரக் கற்ற வர்கள் தேவையா யிருந்தனர். ஆகவே, இரண்டுங் கற்பவர்களுக்குப் பயன்படும்படியாக இருமொழி யக ராதி (**Bilingual Dictionary**) தோன்ற வேண்டும் அவசிய முண்டா யிற்று. பெப்ரீஷியஸ், ப்ரெய்ட் ஹௌப்ட் என்ற இரண்டு ஜெர்மன் பாதிரிகள் தமிழ் - ஆங்கில அகராதி யொன்றை 1779-ல் இயற்றினர். இதில் 9000 சொற்கள் அடங்கி யுள் ளன. ஒவ்வொரு சொல்லின் கீழும் பல வழக்குத் தொடர்களும் கொடுக் கப்பட்டுள்ளன. 185 பக்கங்களுள்ள ஒரு சிறு நூலாகச் சென்னையில் இது வெளியிடப்பட்டது. "தமிழும் இங்கி லேசுமா யிருக்கிற அகராதி" என்று இதை முதற்பக்கம் குறிப்பிடுகின்றது. தமிழ் மொழியை 'மலபார் மொழி' யென்று ஐரோப்பியர் வழங்கி வந்த னர் என்றும் இம்முதற்பக்கத்தால் அறிகிறோம். பெப்ரீஷியஸ், தம் நண்ப ரொருவர் கடன் வாங்கியதற்குப் பிணையாளியாய் நின்றிருந்தார். கடன் தீராமையினலே, இவர் சிறைவாசஞ் செய்ய வேண்டியதாயிற்று. தமிழ்-ஆங்கில அகராதியை இயற்றிக் கொடுத்த வருவாய் கொண்டு கடனைக் கொடுத்து, சிறையினின்றும் மீண்டார்.

பெப்ரீஷியஸ் இயற்றிய அகராதி ஒரு சிறுநூல் என்றேன். எனினும் தமிழ்நாட்டிலும், யாழ்ப்பாணத்திலும் அகராதி பற்றிய முயற்சி தொடர்ந்து நடப்பதற்கு இது ஒரு தூண்டுகோலாய் உதவியது. சுமார் 1833-ல், யாழ்ப்பா ணத்து அமெரிக்கன்-மிஷன் அதிகாரி கள் தமிழ் அகராதியொன்றும் தமிழ்-ஆங்கில அகராதியொன்றும், ஆங்கில-தமிழ் அகராதியொன்றும் இயற்ற வேண்டுமென்று ஏற்பாடு செய்தனர். திஸ்ஸெரா, பெர்ஸிவல் பாதிரியார் முதலியவர்களின் துணை கொண்டு, ரெவரென்ட் நைட் என்பவர் இவ் அக ராதிகளுக்குரிய சொற்களைத் திரட்டி வந்தனர். நைட்டின் மரணத்தால் 1838-ல் இவ்வேலை நின்றுபோய் விட் டது.

ஆனல் இத்தொகுப்பு வேலை வீண் போகவில்லை. இதனை ஆதாரமாகக் கொண்டு, யாழ்ப்பாணத்தில் சந்திர சேகர பண்டிதர் ஒரு தமிழ் அகராதி இயற்றி முடித்தனர். இதற்கு, சென்னை களத்தூர் வேதகிரி முதலி யார் ஓர் அனுபந்தமும் சேர்த்தனர். ரெவரென்ட் ஸ்பால்டிங் என்பவரால் 1842-ல் இது வெளியிடப்பட்டது. யாழ்ப்பாண அகராதியென்றும், மானிப்பாய் அகராதியென்றும் வழங் கியது இதுவே. தமிழ்மொழியிலுள்ள எல்லாச் சொற்களையும் அடக்க முயன்ற அகராதிகளில் இதுவே முத லாவது. இதில் சுமார் 58,500 சொற் கள் அடங்கியுள்ளன. தமிழில் நூல்

வழக்கிலாவது, உலக வழக்கிலாவது பயின்றுள்ளதா என்பதை நோக்காமல், வடமொழி யகராதிகளினின்று சொற்களைத் தாராளமாய்ச் சேர்த்துவிட்டனர். இதனை ஒரு பெருங்குறையென்றே சொல்லவேண்டும்.

அமெரிக்கன் மிஷன் அதிகாரிகள் தொடங்கிய மற்றை அகராதிகளும் வெளிவரலாயின. ஆங்கில-தமிழ் அகராதி வேலை ஹச்சிங்க்ஸ் பாதிரியாரால் மீண்டும் நடைபெற்றது. இவ் அகராதியை 1842-ல் உவின்ஸ்லோ பதிப்பித்தனர். இதற்குச் சில ஆண்டுகட்கு முன்னர், சுமார் 1830-ல், தமிழ்-ஆங்கில அகராதியொன்று டாக்டர் ராட்லர் என்பவரால் இயற்றப்பட்டது. இதனைத் திருத்தஞ் செய்வதற்கு இரண்டு தமிழ் முனிஷிகளையும், ஹார்க்நெஸ், ராபர்ட்ஸன் என்பவர்களையும் நியமனஞ் செய்தனர். முதற்பகுதி கவர்னர் ஜெனரல் பெண்டிங்க் பிரபுவிற்கு உரிமையாக்கப்பட்டு 1834-ல் வெளிவந்தது. ராபர்ட்ஸன் இறந்துபோகவே, டெய்லர் பாதிரியாரும், வேங்கடாசல முதலியாரும் இவ் அகராதி வேலையை மேற்கொண்டனர். இவர்களால் இரண்டாம் பகுதி 1837-லும், மூன்று, நான்காம் பகுதிகள் முறையே 1839, 1841-லும் அச்சில் வெளிவந்தன. இவற்றில் 1425 பக்கங்களும், 36,900 சொற்களும் உள்ளன. இவ் அகராதி மிகவும் பயனுடையது. யாழ்ப்பாணத்தில் வழங்கும் பல சொற்கள் இதிற் சேர்க்கப்படவில்லையென்பது ஒருகுறை என்பர்.

ராட்லர் அகராதி வெளிவந்த சில காலத்திற்குப் பின்னர், தமிழ்-ஆங்கில அகராதிக்காக யாழ்ப்பாணத்து அமெரிக்கன் மிஷன் சார்பில் தொகுக்கப்பட்ட சொற்களை உவின்ஸ்லோ சென்னையில் 1862-ல் பதிப்பித்தனர். இப் பதிப்பு வேலையில் பல சிறந்த வித்துவான்கள் உதவி செய்துவந்தனர். இவர்களில் இராமாநுஜ கவிராயர், விசாகப் பெருமாளையர், வீராசாமிச் செட்டியார் முதலியோர்களை இங்கே குறிப்பிடலாம். இதில் 67,452 சொற்கள் உள்ளன. இருவகை வழக்கிலுமுள்ள சொற்கள் மிகுதியாகக் கூட்டப்பட்டன; பலவகையான சாஸ்திரச் சொற்கள் விளக்கப்பட்டன; ஆசிரியர்கள், புலவர்கள், வீரபுருஷர்கள், தெய்வங்கள் முதலியோர்களின் பெயர்களும் இதிற் சேர்க்கப்பட்டன.

உவின்ஸ்லோ அகராதி மிகவும் பெரிய நூல்; எல்லோருக்கும் உதவக் கூடியதல்ல. ஆகவே அடக்கமான சிறு அகராதிகள் இயற்றுவதில் ஒரு சிலருக்கு நோக்கம் எழுந்தது. G. U. போப் பாதிரியார் இவ்வகைச் சிற்றகராதி யொன்றை 1859-ல் இயற்றி வெளியிட்டனர். பொதுக்கல்வி அதிகாரியின் உத்தரவின்பேரில் ஒரு சிற்றகராதி 1870-ல் தயாரிக்கப்பட்டது. இதனைத் திருந்திய நல்ல பதிப்பாக 1888-ல் மல்லாகம் விஸ்வநாதபிள்ளை பதிப்பித்தனர்.

பேரகராதிகளுக்கும், சிற்றகராதிகளுக்கும் இடைப்பட்டதாய், பொது மக்களது தேவைக்கு உதவுவதாய், ஓர் அகராதி வேண்டப் படுவதாயிற்று. இத்தேவையை நிரப்ப; 1897-ல் தரங்கம்பாடி (Tranquebar) அகராதி தோன்றியது. இது பெப்ரீஷியஸ் அகராதியை ஆதாரமாகக் கொண்டது. ஒரு முக்கியமான முறையையும் இது கையாண்டது. டாக்டர் க்ரால் என்பவர் தமிழில் முக்காலத்தும் வரும் வினைவிகற்பங்களை யெல்லாம் நன்கு ஆராய்ந்து வினையடிகளை 13 வகையாகக் கணக்கிட்டிருந்தனர். இவ்வகையை இவ் அகராதியும் மேற்கொண்டு, ஒவ்வொரு வினையடியையும் அது எவ் வகையைச் சார்ந்தது எனக் குறிப்பிட்டுச் சென்றது. இதனால் வினை விகற்பங்களை யெல்லாம் அகராதியிற் கொடுக்க வேண்டும் அவசியம் இல்லாமற் போயிற்று. இச் சிறந்த முறையைக் கையாண்டதோடு, வழக்கொழிந்த சொற்கள், அருகிய சொற்கள் முதலியவற்றையும் இவ்வகராதி நீக்கிவிட்டது. இதில் 11,590 சொற்களும், 21,305 தொடர்களும் அடங்கியுள்ளன.

இங்ஙனமாக, இருமொழி அகராதிகள் பலபடியாய்த் திருத்தமடைந்து பெருகின. ஆனால், ஒரு

மொழியகராதி விருத்தியடையாது ஒரு நிலையிலேயே வெகுகாலம் நின்று விட்டது. யாழ்ப்பாண அகராதி யொன்றுதான் பயன்பட்டு வந்தது. அதனையும் பதிப்பாளர்களும், பிரசுர கர்த்தர்களும் பாழாக்கி வந்தனர். அச்சுப் பிழைகள் கூடத் திருத்தப் பெருமல் இன்றும் பதிப்புக்கள் வெளிவந்த வண்ணமா யுள்ளன. இதற்கு ஒரு விலக்காக, நா. கதிர்வேற் பிள்ளை வெளியிட்டுள்ள அகராதி யைச் சொல்லலாம். இவர் 40 வருஷங்களுக்கு முன் விளங்கிய ஒரு சிறந்த தமிழ்ப் பண்டிதர்; யாழ்ப் பாண நாட்டினர்; ஆறுமுக நாவலர் சிஷ்ய பரம்பரையைச் சார்ந்தவர்; தமிழ் நாட்டில் சைவப் பிரசாரமும் தமிழ்ப் பிரசாரமும் செய்து வந்தவர். இவருங்கூட, தமது பிரசுர கர்த்தர்கள் தம் அனுமதியின்றிப் பதிப்புக்களை மோசடியாய் வெளியிட்டுப் பிழைகளைப் பெருக்கி வந்தனர் என்று முறையிட்டு எழுதியுள்ளார்.

இங்கிலையில், யாழ்ப்பாணத்தில் நீதிபதியாயிருந்த C.W. கதிர்வேற்பிள்ளை ஒரு பேரகராதி வெளியிட வேண்டி, அதற்குரிய கருவிகளைத் திரட்டினர். அகராதியிலும் ஒரு பகுதி எழுதி முடித்தனர். ஆனல் நூல் முற்றுப் பெறுமுன், அவர் மரணமடைந்தனர். பின்னர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் இவ் அகராதி ஒருவாறு முற்றுப் பெற்றது. இக்காரணத்தால், தமிழ்ச் சங்க அகராதியென்று இதனை வழங்குவர். இதில் நூற்றுக் கணக்கான வட சொற்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டன. தமிழிலக்கியங்களைக் கற்று மேற்கோள்கள் கொடுக்கப்பட்டன. சொற்களின் வடமொழி மூலங்களும் காட்டப்பட்டன. ஆனல், வடமொழிச் சொற்கள் ஏராளமாய் நுழைந்து விட்டன. வடமொழிச் சொற்களெல்லாம் சேர்த்தாலன்றி, தமிழகராதி பூர்த்தியாகமாட்டாது என்ற கொள்கையுடையவர் நீதிபதி கதிர்வேற்பிள்ளை.

இத் தமிழ் அகராதி ஒருபுறம் இருக்க, தமிழ்-ஆங்கில அகராதி பல வகையில் செப்பமெய்த இடமிருந்தது. முதலாவது, சங்க இலக்கியம் முதலிய ஆதார நூல்கள் பல

காமா சம்பிரதாயம்

இந்தியக் குத்துச்சண்டை வீரர் காமா மிகவும் ரசமான ஒரு சம்பிரதாயத்தை வைத்துக்கொண்டிருக்கிருர். அவருக்கு வயது அறுபதுக்கு மேல் (அறுபத்திரண்டு) ஆகிறது. என்ருலும், அவர் தமது சாம்பியன் பட்டத்தை விடமாட்டேன் என்கிருர். யாராவது அவரிடம் வந்து சவால் விட்டால், அவர் வெகு கச்சிதமாகப் பதில் சொல்லி விடுகிருர். 'என்னை ஜயிக்குமுன்பு, என் சிஷ்யன் இமாம்பக்ஷைத் தோற்கடித்து விட்டு வா' என்கிருர். இமாம்பக்ஷிடம் போனல், அவர் தம்மை ஜயிக்குமுன்பு தம் சிஷ்யனைத் தோற்கடித்துவிட்டு வரும்படி சொல்லுகிருர். இப்படியாக, ஒரு சிஷ்ய பரம்பரை, காமா பெருமையைக் காப்பாற்றி வருகிறது.

—கே. ராமராவ்.

உவின்ஸ்லோவுக்குப் பின்னரே அச்சில் வெளி வந்துள்ளன. அவற்றைப் பயன்படுத்துவது அவசியமாயிற்று. இரண்டாவது, சொற்களுக்குப் பொருளெழுதுவதில் உவின்ஸ்லோ முதலிய அகராதிகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு நயமிருந்தது. இந் நயங்களனைத்தையும் ஒருங்கு கொணர்ந்து அவற்றை இன்னும் ஒழுங்காக விருத்தி செய்ய வேண்டியதாயிருந்தது. மூன்ருவது, சொற்பொருள்களை அமைப்பதில் சில நியமங்களைக் கையாளுவது அவசியமாயிற்று. தமிழ் அகராதிகள் பலவும் பொருள்களையும் அகராதிக் கிரமத்தில் அமைத்தன. இது தவருகும். வரலாற்று முறையிலும், இயலாத விடங்களில், கருத்துத் தொடரும் முறையிலும், இவற்றை அமைக்க வேண்டுவது இன்றியமையாததாகும். நான்காவது, சொல்லுக்குப் பொருளாகப் பரியாயச் சொற்களைக் கொடுப்பது போதாது. சொல்லுக்குரிய பொருளின் லட்சணத்தையும்

வரையறை செய்ய வேண்டும். இவ்வாறு செய்யும் வழக்கமே தமிழ் அகராதிகளில் பெரும்பாலும் இல்லாமலிருந்தது; பரியாயச் சொல்லைக் கூறுவதுதான் லட்சணமாகக் கருதப்பட்டது. தமிழ்-ஆங்கில அகராதிகளிற் கொடுக்கப்பட்டுள்ள லட்சணங்களும் ஒவ்வொரு வகையிற் பிழைபாடுடையனவா யிருந்தன. இக்குறைகளெல்லாம் நீங்க வேண்டுவது அவசியமாயிற்று. ஐந்தாவது, சொல்லின் பிறப்பைக் குறித்து அகராதியாளர்கள் பெரும்பாலும் கவனஞ் செலுத்தியதே இல்லை. வட மொழி மூலங்கள் சிலவற்றிற்குத் தரப்பட்டிருக்தன. பிற திராவிட மொழிகளினின்று பிறப்பொத்த சொற்கள் காட்டப்பெறவில்லை. ஆறுவது, மேற்கோள் காட்டுவதில் தகுதியான நியமங்கள் கையாளப்படவில்லை. தக்க நியமங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கோள் கொடுப்பது அவசியமாயிருந்தது.

மேற் குறித்த அம்சங்களிலெல்லாம் திருத்த மெய்தியது சென்னை பல்கலைக் கழகத்தார் வெளியிட்டுள்ள 'தமிழ் லெக்ஸிகன்' ஆகும். இதுவும், அரசினர் ஆதரவில் சாண்ட்லெர் என்ற அமெரிக்கன் மிஷன் பாதிரியாரால் தொடங்கப்பெற்று, தமிழ் வித்துவான்கள் உதவிகொண்டு, ஆங்கிலமும் தமிழும் கற்ற வித்துவான்களால் முற்றுப்பெற்றது. இதிற் குறைகளே இல்லையென்றுவது, அகராதிவேலைக்கு முற்றுப் புள்ளி வைத்தாயிற்று என்றுவது நினைப்பது தவறு. இதிலும் பல குறைகள் உள்ளன. அகராதி வேலையும் நடைபெற்றுக் கொண்டே செல்ல வேண்டியது தான்.

மொழியின் வளர்ச்சி நமது வாழ்க்கை வளர்ச்சியைப் பொறுத்தது. சொல்லின் வளர்ச்சி மொழி வளர்ச்சிக்கு ஓர் அறிகுறியாயுள்ளது. நமது வாழ்க்கை வளமுறுவதானுல், சொற்கள் பெருகிக் கொண்டுதான் செல்லும். அகராதி வேலைக்கும் முடிவில்லை. குறைபாடுகளைத் திருத்துவதும், சொற்களுக்கு ஜாதகங் கணிப்பதும், புதுச் சொற்களைச் சேர்ப்பதும், சாஸ்திர சங்கேத மொழி அகராதிகளையும் கொடுந்தமிழ், திசைச்சொல் பற்றிய அகராதிகளையும் இயற்றுவதும் தமிழ் வளர்ச்சிக்கு இன்றிமையாப் பெருஞ் செயல்களாகும். இவ் வேலைகள் இடையீடின்றி நடைபெறுதற்குரிய முயற்சியை நாம் மேற்கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் உள்ளம் இதிற் செல்லுவதாக!

நிருபர்கள் நடுவில் ராஜாஜி

ஆகாகான் அரண்மனையில் மகாத்மாஜி உபவாசம் கிடந்தபோது, பிறநாட்டு நிருபர்கள் ஏராளமாய்ச் சூழ்ந்திருந்தார்கள். எவர் முகத்திலும் ஈயாடாமல் துயரம் சூழ்ந்திருந்ததை அவர்கள் கண்டார்களாம். ஆனல், ராஜாஜி மாத்திரம் நகைச் சுவையை இழக்கவில்லை. அந்த நிருபர்களுக்கு அதிலே மிகுந்த சந்தோஷம். லண்டன் டெய்லி டெலிகிராப் நிருபரான எல். கார்ஸ்லாண்ட் காண்டர் என்பவர் ராஜாஜியைப் பேட்டிகண்டார். "உங்களில் சிலருடைய பெயர்கள் என்ன விசித்திரமா யிருக்கின்றன, அப்பா! நிஜமாகவே..." என்று சொல்லி நகைத்தாராம் ராஜாஜி.

சமீபத்தில் சிம்லா மகாநாடு நடந்து கொண்டிருக்கையில், உள்ளே என்ன நடக்கிறது என்றறிய நிருபர்கள் பிரம்மப் பிரயத்தனம் செய்தார்கள். ஒரு தலைவராவது வாய் திறக்க வில்லை. ராஜாஜியிடம் சென்று, மகாநாட்டைப்பற்றி நிருபர்கள் ஏதாவது பேச்செடுப்பார்கள். அவர் அதற்குப் பதில் சொல்லாமல்; "ஆஹா! இந்த ராஜகுமாரி அமிர்த கௌரியின் தோட்டத்துப் புஷ்பங்கள் எவ்வளவு அழகாயிருக்கின்றன, பார்த்தீர்களா!" என்று கூறிப் பேச்சைத் திருப்பி விடுவாராம்.

புதிய 'எச்.எம்.வி.' ரிகார்டுகள்

மாடர்ன் தியேட்டர்ஸ்
''ராஜ ராஜேஜஸ்வரி''யில்
மாஸ்டர் ராஜரத்னம்

N. 18261 { தர்மம் தலை காக்கும் / துயில் கலைந்தே

'' ராம் ராஜ்ய ''
(பிரகாஷ் பிக்சர்ஸ்)
''பாரத் கீ இக்ஸன்ரி''
பாட்டின் தமிழ்ப் பதிப்பு
மாஸ்டர் ராஜரத்னம் &
விட்டல்

N. 18262 { பாரத தேசம் / வளர் 2 பாகம்

மலயாளம் கதகளி பாட்டுகள்
திரிபுனித்துர ஜி. விச்வநாத பாகவதர்

N. 8857 { ப்ரியமானஸ ''நள சரிதம்'' / கண்டால் அதிமோக்ஷம் ''க்ரிமீர வதம்''

நாதஸ்வர வித்வான் திருவெண்காடு
பி. சுப்ரமண்யம் பிள்ளை

N. 18926 { ஜாலந்தர / சிவகுருப்ரனே

" ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ் "

1957-ல் ஒரு சந்தோஷ தினத்திற்கு 1945-ல் திட்டம் போடப்படுகிறது

"என் குழந்தைகளின் கலியாணச் செலவுகளை நான் தாங்க முடியுமா?"
இக் கேள்விக்குப் பதில் நீர் இப்போது செய்யும் காரியத்தைப் பொறுத்ததாகும்.

சிறு சேமிப்புக்காரர்கள் 5 ரூபாய்க்கு ஒரு ஸெர்டிபிகேட்டையாவது, ஒன்று 4 அணா, 8 அணா, 1 ரூபாய் மதிப்புள்ள ஸேவிங்ஸ் ஸ்டாம்புகளையாவது வாங்கலாம். ஸெர்டிபிகேட்டுகளும் ஸ்டாம்புகளும் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற யாதொரு ஏஜெண்டினிடமாகிலும், ஸேவிங்ஸ் பீரோ, தபால் ஆபீஸுகள் ஆகிய இந்த இடங்களிலாகிலும் கிடைக்கும்.

கலியாணங்கள் என்றால் பணச் செலவுதான். பல வருஷங்களுக்கு முன்னால் முன் யோசனையுடன் திட்டம் போட்டு பணம் சேர்த்து, அதைப் புத்திசாலித்தனமாய் வட்டிக்குப் போட்டுவைத்தால்தான் உமது குழந்தைகள் பெரியவர்களாகும்போது தங்கள் கலியாண வாழ்க்கையை சரியான வகையில் நிச்சயமாய் ஆரம்பிக்க முடியும்.

நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள்

- ★ பிரதி 10 ரூபாயும் 12 வருஷங்களுக்குப் பிறகு 15 ரூபாய் ஆகிறது.
- ★ தனிவட்டி 4¼ சத வீதம். இதற்கு இன்கம் டாக்ஸ் கிடையாது.
- ★ மூன்று வருஷங்களுக்குப் பிறகு (5 ரூபாய் ஸெர்டிபிகேட் விஷயத்தில் 18 மாதங்களுக்குப் பிறகு) அதுவரையில் சேர்ந்துவந்த வட்டியுடன் பணமாக மாற்றிக் கொள்ளலாம்.

AAA 196

வாழ்க்கையின்
வெற்றி
ஸ்திரீகளுக்கு
ஏற்படும் சகலவித
கர்ப்பாசய நோய்களை
நீக்கி வாழ்க்கையில் வெற்றியை
அளிக்கக்கூடிய சிறந்த டானிக்
அருணா
Aruna
ஆயுர்வேதாஸ்ரமம்
மதராஸ்

சகல விதமான
வலிகளையும்
10 நிமிஷங்களில்
நிறுத்த
ஸாரிடோன்

இந்தியத் தேயிலையில் மிகச் சிறந்தது

மிக நேர்த்தியான மணமும், நல்ல நிறமும், குறைந்த விலையும் உள்ள லிப்டன்ஸ் தேயிலை பெண் தேயிலைகள் இதர தேயிலைகளை விட சிறந்தவை.

லிப்டன்ஸ் தேயிலை பெண்

நேர்த்தியான இந்திய தேயிலை

LTK 84 G

லிப்டன் தேனீர் அருந்துகையில்
ஜாக்கிரதைக் குறைவாய்ப் பேசாதீர்கள்.


உயர்தரமான நகைகள்
மணப் பெண்களுக்கு வேண்டிய அழ
கழகான கண்டசரம், தோடு, மோதிரம்,
காப்பு முதலியன நாங்கள் செய்து
கொடுக்கிறோம்.
பி. ஏ. ராஜு செட்டியார் & பிரதர்
வைரம், தங்க நகை வியாபாரிகள்
கோயமுத்தூர்
நயமான வேலைப்பாடுகள்
போன்: 218-A
தந்தி: "ராஜா"



யுத்தகாலத்தின் கடடுப்பாடுபண்ண ரெயில் போக்குவரத்தில் பிரயாணம் ஆனந்தத்தி லிருந்து கடினமான செயலாக மாறிவிடுகிறது. யுததத்திற்கு முன இருந்ததைவிட சத்தமும் அதிகம். புக்கிங் ஆபீஸ்கள், பிளாடபாரங்கள் முக்கியமாக ரெயில்வண்டிகளும அதிக ஜன நெருக்கமுள்ளதாயும அசௌகரியமாகவும் இருக்கிறது. பிரயாண சமயம் ஆகாராதிகள் கிடைப்பது கஷ்டம. உண்மையில் அவசியம் இருந்தாலொழிய பிரயாணம் செய்வது மதியீனமே

ஆனாலும் அவசியம் பிரயாணம் செய்யவேண்டியவர்கள் எல்லா ஸ்டேஷன்களிலும் ஒரு விரும்பத்தக்க காட்சியை காண்கிறார்கள். அதுதான் டீ விற்பவன். வெயில் காலத்தில் குளிர்ச்சியையும, குளிர் காலத்தில் உஷ்ணத்தையும் கொடுக்கும டீ எப்பொழுதும் கிடைக்கிறது. அது அதிக செலவற்றது. ரெயிலில் போகும்போது அல்லது எந்த யிடத்திலும் நீங்கள் அசௌகர்யப்படடு சோர்வடைந்தோ அலலது கவலையுடன் இருந்தாலும் டீ உங்களை கிளர்த்தி உற்சாக மூட்டுவதை காண்பீர்கள்.

இந்தியன்

சோர்வடையும் சமயம் டீ அருந்துங்கள்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

IK 238TM

Printed and Published by Vai. Govindan at the Shakti Press Ltd., Shanti Press, 115-E, Mowbrays Road, Royapettah, Madras
Managing Editor: Vai. Govindan. Editor: T. J. Ranganathan